வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால்நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12

புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 ஆடி திங்கள் 4 ம் நாள் (19—7—1964) ஞாயிற்றுக்கிழமை றபீஅவ் 9 | இதழ் 8



மில்க்வைற் நீலசோப்
பிரகாசமாய் சலவை செய்கிறது!
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

# த. அ. கட்சியின் ஆதரவு பெற அரசாங்கம் முயற்சி

## சில 'சலுகைகளை வழங்குவதின் நோக்கம்

பாராளுமன்றத்தின் ஆயுளைக் கூட்டுவதற்கு மூன்றில் இரண்டு மேலதிக வாக்குகளைப் பெற தமிழரசுக்கட்சியின் ஆதரவை நாடும் நோக்குடன் சில சலுகைகளை அரசாங்கம் செய்ய முயலுவதாக நம்பகமான செய்திகள் கிடைத்துள்ளன. சில சலுகைகளை வழங்குவதன் மூலம் தமிழரசுக்கட்சியினரின் ஆதரவைப் பெற முடியும் என்று ஒரு மந்திரி நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

இன்றைய பாராளுமன்றத்தின் ஆயுள்காலத்தை மேலும் மூன்று வருடங்களாவது நீடிக்க வைக்க வேண்டுமென்று கூட்டரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் முயற்சிஎடுத்து வருவது பற்றி அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. பாராளுமன்றத்திறப்புவிழாவுக்கும், பிரதமர்சாம்ராஜ்ய நாடுகள் மாநாட்டுக்குப் புறப்படுவதற்கும் முன்னதாகவே இதற்கான பூர்வாங்கக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டதாம்.

பாராளுமன்றக் கெடுவை நீடிப்பதானால் அதற்கு மூன்றில் இரண்டு மேலதிக வாக்குகள் தேவைப்படுமாதலால், தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெற ஏதுவான வழி வகைகளைக் கடைப்பிடிப்பதென இக்குழுவினர் தீர்மானித்தனர் என்றும் கூறப்படுகிறது.

### சலுகைகள் வழங்கினால்...

மொழிப் பிரச்சினையில் சில மாற்றங்களைச் செய்யவும் மாவட்டசபைகளை ஏற்படுத்தவும் நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்தை அமுலாக்கவும் ஏற்ற மசோதாக்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துவிட துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இந்த நடவடிக்கைகளை விரைவில் செயலாக்கி விட்டால் தமிழரசுக் கட்சியினரின் ஆதரவைப் பெறமுடியுமென்று அவர்கள் எதிர்பார்க்கின்றனராம்.

தமிழுக்கு உரிமை வழங்க வேண்டும் என்ற பிரச்சினை எழுந்தபோது பலத்த எதிர்ப்புகள் ஏற்பட்டனவாம் பல மணிநேர விவாதத்தின் பின்னரே சுமுகமான முடிவு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த முடிவின்படி, தமிழ் மொழி விடயத்திலும் மாவட்டசபைகள் விடயத்திலும் ஏற்படுத்தக்கூடிய சட்டவிதிகள் எந்தவகையிலும் அகில இலங்கைக்கும் 'சிங்களம் மட்டும்' என்ற அடிப்படைக் கொள்கைக்கு முரணாக அமையாதபடி இருக்குமாம்.

இம்முறையில் தமிழரசுக் கட்சியினரின் ஆதரவை பெற்று மூன்றில் இரண்டு அதிகப்படி வாக்குகளைப் பெற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு உபகுழு நியமிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

'இந்நாட்டின்சிறுபான்மையினரான தமிழ்ப்பேசும் மக்களுக்கு நியாயமாக வழங்கப்படவேண்டிய உரிமைகளை வழங்குவதற்கு அரசு முன்வருமானால் அது வரவேற்கக்கூடியதே. ஆனால், ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் தமிழரசுக் கட்சியையும் இணைத்து வைப்பதற்கான சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படும்பட்சத்

(9-ம் பக்கம் பார்க்க)

பதவிகளைத் துறந்தால்

# தமிழரசுடன் ச. ச. கட்சி போட்டியிடும்

## வட பகுதிக்குச் செல்ல பிரதமருக்கு வாய்ப்பு

தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் ஆசனங்களைத் துறந்து மீண்டும் தேர்தலில் நின்ருல் அவர்கள் போட்டியிடும் எல்லாத் தொகுதிகளிலும் சமசமாஜக்கட்சி போட்டியிடுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிரதமமந்திரியும் இதர மந்திரிகளும் சமசமாஜத் தலைவர்களுடன் தமிழ்ப் பிரதேசங்களுக்குச் சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார்களென்றும் அறியப்படுகிறது.

தமிழரசுப் பிரதிநிதிகள் பதவிகளைத் துறந்து, உபதேர்தலில் போட்டியிட்டால், அவர்களுக்கெதிராக எல்லாத் தொகுதிகளிலும் அபேட்சகர்களை நிறுத்துவதென சமசமாஜக் கட்சி முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

சுதந்திர இலங்கை வரலாற்றில் முதன் முதலாகப் பிரதம மந்திரி சமசமாஜத் தலைவர்களுடன் தேர்தல் பிரசாரத்துக்காக வடபகுதிக்குச் செல்வாரென்றும் கூறப்படுகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

# 21 கோரிக்கை புகைந்தது

## போராட்டம் கூடாதென சீனு ஆதரவாளர்கட்கு கட்டளை

21 கோரிக்கைகளின் மீது பொது வேலை நிறுத்தமொன்றை நடத்த வேண்டாமென்று சிஞசண்முகதாசன் குழுவுக்கு உத்தரவிட்டிருப்பதாகவும், இதனுல் அந்தக் கோரிக்கைகளைப் பெறுவதற்காக ஒரு பொது வேலை நிறுத்தம் நடைபெற இடமில்லையென்றும் தொழிற் சங்க வட்டாரங்களில் கூறப்படுகிறது. இதன் விளைவாக 21 கோரிக்கைகளும் பிசுபிசுத்துக் கொண்டிருக்கின்றன.

அகில இலங்கை ரீதியில் எத்தகைய வேலை நிறுத்தத்திலும் ஈடுபட வேண்டாமென்றும், சிறிமாவோ அரசாங்கத்திற்குப் பிரச்சினையைக் கொடுக்கக் கூடியதாக தொழிற் சங்க நடவடிக்கை எதையும் எடுக்க வேண்டாமென்றும் இங்குள்ள சீன ஆதரவாளர்களுக்குச் சீனு உத்தரவிட்டுள்ளதாக அறியப்படுகிறது. இலங்கை அரசாங்கம் சீனவுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருப்பதுடன் சீனுவுக்குச் சார்பாகவும் இருப்பதே சீனுவின் இந்த நடவடிக்கைக்கு காரணம் என்று தெரிகிறது.

ஆகவே தொழிற் சங்கங்களின் 21 கோரிக்கைகளைப் பெறுவதற்காக சீன ஆதரவாளர்களின் கையிலுள்ள இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் நாடு பூராவும் பரவக்கூடிய பொது வேலை நிறுத்த மொன்றில் கலந்து கொள்ள முடியாது. சண்முகதாசன் கோஷ்டி யின்றி பாலா தம்பு—சமரக் கொடி குழுவினர் தனித்து நின்று அத்தகைய வேலை நிறுத்தம் எதையும் மேற்கொள்ளவும் முடியாது.

எனவே தொழிற் சங்கங்கள் கூட்டாகச் சமர்ப்பித்த 21 கோரிக்கைகளுக்கான போராட்டம் எதுவும் நடைபெற மாட்டாது என்று தொழிற் சங்க வட்டாரங்களில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

தொழிற் சங்கங்கள் சமர்ப்பித்த 21 அம்சக் கோரிக்கை பிரதமருக்கு இரு வெற்றியைத் தேடிக் கொடுத்துள்ளது. 21

(9-ம் பக்கம் பார்க்க)

# இருள் நீங்கி ஒளி ஓங்க நபிபெருமான் வழி ஒன்றே!

## மூதூர் முதல்வரின் மீலாத் வாழ்த்து

'இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களின் ஒரு பிரிவினரான முஸ்லிம்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்து காணப்படுகிறது நபி (ஸல்) பெருமானர் போதித்த அன்பு வழி பிறழாது நின்று நமது இழந்துவிட்ட உரிமைகளைப் பேணிக்காக்க முயலுவோமாக.' இவ்வாறு மூதூர் முதலாவது உறுப்பினரான ஜனப் எம். ஈ. எச். முகம்மதலி 'சுதந்திரன்' மூலம் விடுக்கும் மீலாத் வாழ்த்தில் தெரிவித்துள்ளார்.

அவருடைய வாழ்த்து மேலும் கூறுவதாவது: 'முஸ்லிம் பெருமக்களின் வாழ்க்கை வழி முறைகளைக் காட்டிச் சென்ற வள்ளல் நபி (ஸல்) அவர்கள் பிறந்த நன்னுள் இது. சிறுபான்மை

(9-ம் பக்கம் பார்க்க)

# பொறியியல் மாணவருக்கு சிங்களக் கடிதம்

பொறியியல் வகுப்பு இறுதிப் பரீட்சையில் தோற்றிவிட்டு சர்வகலாசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு தற்காலிகமாக தொழில் நுட்ப உதவியாளர் பதவி கொடுக்கப்படுவது வழக்கம் இவ்வாண்டும் வழமை போல பரீட்சை எழுதிவிட்டு வெளியேறிய மாணவர்களில் சிலர் பொது வேலைத் திணைக்களத்தில் தமக்கு தொழில் நுட்ப உதவியாளர் வேலை கொடுக்கும்படி விண்ணப்பித்திருந்தார்கள். அப்படி விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும்படி சிங்களமொழியில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாம்.

சிங்களக் கடிதங்களைப் பெற்ற தமிழ் பேசும் மாணவர்கள் அவற்றைப் பொது வேலைத்திணைக்கள அமைச்சர் திரு. சப்ளி குணவர்த்தனவுக்கு திருப்பி அனுப்பியுள்ளார்கள். பொறியியல் மாணவர்களில் பெரும்பான்மையினர் தமிழ்பேசும்மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிரச்சினைக்குரியவற்றை எழுத விரும்புகிறேன்'

'பிரச்சினைக்குரிய எழுத்தாளர் நாவேந்தன்'; இது எழுத்துலகில் உள்ளவர்களது அபிப்பிராயம். புங்குடுதீவில் பிறந்து ஏழாலையில் வாழும் இவர், ஓர் தமிழாசிரியர். தமிழிலக்கியத் துறையில் சிறுகதை, நாவல், திறனாய்வு, கவிதை, கட்டுரை ஆகிய சகல படிவங்களிலும் தன் பேனாவை ஓடவிட்ட இவர், சிறுகதைத் துறையில் தனக்கெனத் தனியிடத்தை வகுத்துள்ளார். 'வாழ்வு' என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் ஒன்றைக் கடந்த ஆண்டு வெளியிட்டுள்ளார். 'தலைவர் வன்னியசிங்கம் போன்ற சில அரசியல் நூல்களையும் முன்னர் வெளியிட்டுள்ளார். 'இவரது கட்டுரைகள் அரசியல்—இலக்கிய எதிரிகளுக்கு கொலைவாளைப் போன்று காட்சி கொடுக்கின்றன' என்று ஒரு விமர்சகர் கூறியது குறிப்பிடத்தக்கது. எழுத்துத் துறையில் மட்டுமல்லாது பேச்சுத் துறையிலும் இவருக்கு ஈடுபாடு உண்டு.



## எப்படி எழுத ஆரம்பித்தேன்

யாழ்ப்பாணப் பட்டினத்தின் தென் பாகமாகப் பதினைந்து மைல் தொலைவிலுள்ளது என் பிறந்த மண், தாயகம் புங்குடுதீவு. பரந்துகிடக்கும் வான் வெளியைப் பார்த்தபடி பொட்டல் நிலமாகக் காட்சிதரும் பனைப் பிரதேசமான அந்த மண், வளம் நிறைந்தது என்றால் அஃது மன வளத்தையே குறிக்கும். அவ்வூரில் பரம்பரை பரம்பரையாக உயர் சாதித் 'தடிப்பும்' வைதிக சைவமும் சுதேச வைத்திய, சோதிட சாஸ்திர நிபுணத்துவமும் வாய்ந்த பிரபலமான குடும்பமொன்றில் பிறந்தவன் நான். என் பிறந்த நேர பலனோ, என்னவோ பெருவாரியான நிலங்களுக்குச் சொந்தக்காரனான எனது தகப்பனார் ஏகப்பட்ட கடனில் மூழ்கிக் கிடந்தார். அதுவும் பிதுரார்ஜித சொத்தாகவே வாய்த்து விட்டதாக்கும்!

பாடசாலைப் பாடங்களிலும், இலக்கிய ரசனையே அதிகம் ஆர்வங்காட்டினாலும் எடுத்த எடுப்பிலேயே எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடைந்து விட்டேன். பயன்...? திரும்பவும் ஊருக்கே போனேன். மேலே படிக்க வாய்ப்பில்லை. ஆங்கிலத்தின் நல்ல காலமோ, தமிழின் நல்ல காலமோ அந்தச் சீமைக்காரன் படிப்பு

**நாவேந்தன்**

நமக்குக் கிட்டவில்லை! போகட்டும். போனேனா...? 'சும்மா இருக்கச் சோற்றுக்கே திண்டாட்டம்!' அதற்குள் நமது 'இலக்கிய ஆவேசத்தால்' சிறு சிறு கலகங்கள். தகப்பனார் பார்த்தார். எப்படியாவது இவனை ஒரு வேலையில் சேர்த்துவிடலா

### இலக்கிய வெறி

சுதேச வைத்தியம் பார்த்து, ஒன்பது பிள்ளைகள், பெரியவர்கள் அடங்கிய பாரிய குடும்பப் பொறுப்பை நிர்வகித்துக் கடன்களையும் அடைப்பதென்றால் இலேசான காரியமா! எப்படியோ அவர் சமாளித்து விட்டார். இத்தனை நெருக்கடிகளுக்கிடையிலும் 'இரண்டு கடல்கள்' கடந்து வந்து, திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் என்னை எட்டாம் வகுப்பில் சேர்த்தும்விட்டார். புங்குடுதீவு பெருங்காடு இளைஞர் கழக வாசிகசாலையில் ஆரம்பித்த இலக்கிய வெறி, முத்துத்தம்பி வித்தியாசாலையில் பயின்ற இருவருட காலமும் அதிகமாகி என்னைப் 'பைத்தியமாக' அடித்துவிட்டது!

மென்றால் 'யோக்கிய தாம்சம்' போதவில்லையே! சரி, என்ன பண்ணுவது?

### தமிழ் நாட்டில் ஆறு மாதம்

இந்தியாவிலே தமிழ் சுருக்கெழுத்துப் படிக்கச் சில நண்பர்கள் போனார்கள். அவர்களோடு சேர்த்து என்னையும் அனுப்பி விட்டார். அப்படியே திருச்சிக்குப் போய்ச் சேர்ந்தேன், அங்கே ஆறுமாதங்கள்... எல்லாம் வந்தது. 'சுருக்கெழுத்துத்தானே வரமாட்டேனென்றது!' 'சும்மா' நான் எழுதுவதே சுருக்கெழுத்தாயிருக்க, சுருக்கெழுத்திலே எழுதினால் யாருக்குப் பயன்படப் போகிறது? திருச்சிக்குப் போய்த்தான் இந்தஉண்மை தெரிந்தது. கவலையில்லை! அப்படியே பெரியார் ஈ. வே. ரா, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், அறிஞர் அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன், ப. ஜீவானந்தம் இத்தகைய பெரிய, பெரிய பேச்சாளர்களது பேச்சுக்களையெல்லாம் கேட்கின்ற சந்தர்ப்பம் வாய்த்தது. நல்ல முறையில் அதனைப் பயன்படுத்தினேன். அந்தத் 'திருப்தியோடு' ஊருக்கு திரும்பியாச்சு! நானா திரும்புவேன்? திரும்பவைத்து விட்டது நமது பொருளாதார நிலை!

### நண்பர்களும் எதிரிகளும்

1948—49க்குள் இவ்வளவும். இவ்வாண்டின் இறுதியில் கொழும்பிலுள்ள தினசரி ஒன்றில் 'புரூப் ரீடராக' வேலை பார்க்கும் வாய்ப்பும் கிட்டியது. இவ்வளவும் இலக்கிய உலகின் ஒரு பகுதியை எனக்குப் பரிச்சயப்படுத்தின. எழுத வேண்டும் என்ற ஆசை தீயாய்த் தகித்தது. பள்ளி மாணவனாக இருந்த போது என் முதல் படைப்புகள் ஈழகேசரி, இந்துசாதனம், சுதந்திரன் இதழ்களில் பிரசுரமாயின. அந்தத் தெம்புடன் எழுதிக் 'குவிக்க' ஆரம்பித்தேன். ஈழகேசரி எனது கன்னிப்படைப்பைப் பிரசுரித்த பெருமையோடு கதையை அடைத்துக் கொண்டு, என்னைப் பொறுத்தவரை தன்னை மலடு தட்ட வைத்துக் கொண்டது. அன்றிலிருந்து இன்றுவரை எழுத்துத் துறையின் எல்லா வகைகளிலும் எழுதிக் கொண்டே இருக்கிறேன். இந்துசாதனம் முதல் உதயதாரகை ஈறான சமயப் பத்திரிகைகளும், ஈழத்து, தமிழகத்துப் பிரபல ஏடுகள் பலவும் என் எழுத்துக்களைப் பிரசுரித்துள்ளன. அவற்றுக்குப் பட்டியல் தந்து இடத்தை விழுங்க விரும்பவில்லை. ஆனால் எனது எழுத்துத் திறமையை முதலில் பாராட்டிய பத்திரிகை 'தேசாபிமானி' தான்! எழுத்துத் துறையில் வளர்த்துவிட்டது 'சுதந்திரனே'தான். எழுத்துக்களை முதலிய பாராட்டியவர்களும் இன்று 'எனது இலக்கிய எதிரி'கள் என்று பெருமைப்படுகிற மு. போ. எ. ச. நண்பர்கள்தாம்.

### 'நானே ராஜா'

எழுத்து எனக்கு உயிர்! பல புனைபெயர்களில், பலதுறைகளில் எழுதி வந்[illegible]

(15-ம் பக்கம் பார்க்க)


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3,00,

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


## கவிதைப் பூங்கா

### எண்ணமே செயல்!

—வழுத்தூர்-ஒளிஏந்தி—

களிகொஞ்சும் உள்ளக்
கடல் பொங்கிச் சிறி
கருகொண்ட நோக்கில் அலைபாய
துளிகொண்டச் செய்கைத்
துகளாலே தூய்மைத்
துறைவென்ற கர்வம் தலைசாய
நளிமிஞ்சு வாழ்வை
நலிவாக்குந் தீய
நவைமிஞ்சு போக்கும் கழன்றோட
கிளி கொஞ்சு மின்பக்
கிளர்நாத அன்புக்
கிடங்கான தென்றன் இளநெஞ்சம்!

புலி வாழும் கானப்
புதரான நெஞ்சில்
புலியான கோபம் புதைந்தாட
தலை கர்வங் கொண்டு
தடுமாறி பேச்சின்
தறிகெட்டு தானே புகழ்ந் தேற்றி
இழிவென்று எண்ணி
இருக்காமல் தீமை
இசைவோடு செய்யும் இழிநெஞ்சம்
விழிப்புற்று உண்மை
வினைப் பற்றிச் செல்லின்
விடிவெள்ளி இன்ப வினைவாகும்!

நிறைவான நெஞ்சக்
கரை மேலே மோதி
நிழலாடு நோக்கில் குறைபேணில்
இறைவாழு முள்ளம்
கறையாகி மேலும்
இடரான செய்கை விரிவாகும்!
முறையானச் செய்கை
மூடமாக்கிச் செய்யும்
முரண்பாடு மேவும் இழிநெஞ்சில்
சிறையான எண்ணம்
சிலையாகிப் போயின்
சிழ்நீர் பிடித்த சிரங்காகும்!

அணிகொண் டிலங்கு
அகநோக்கின் ஆய்வு
அழகானால் இன்பம் நிறைவாகும்;
பணிகொண் டிலங்கு
முள நோக்கி னுள்ளே
பீற்றல் மலிந்தால் கறையாகும்!
பணி கொண்டு வாழின்
பரிசுத்த நோக்கு
பலங் கொண்டு மேலும் விரிவாகும்!
இனியென்ன, எண்ணம்
செயலாகு மென்று
இசைவோடு கூறல் எளிதாகும்!!

—————|—————

### சங்கொலி!

—கனகம்—

கறையான் புற் றுள்ளே கருநாகம் போல
மறைவா யிருக்கும் மனிதர்களால்;
குறைவில்லா
இன்னல் தொடரு மிலக்குத் தலைசாயும்!
புண்ணுக்கு வேணடாம் புனுகு!

எட்டாப் பழத்தை யினியா தெனக் கூறும்
கொட்டாவிக் கும்பல் குரைக்கட்டும்;
கட்டாயம்
வெற்றி நமக்கே! வெகுதூரம் இல்லையப்பா!
அற்றைநா ளின்றே யறி!

வெண்ணெய் திரண்டு விழியிற் படும்போது
கண்ணில்லா மூடர் கல்லெறிந்தால்;
மண்ணாகும்
தாழி யவரின் தலைக்கோடாய்(ப்) போகட்டும்!
வாழிய நீ! செல்வா வளர்ந்து.

ஆழிக் கடலில் அலையும்மீ னுக்கும்
பாழியுண் டங்கேயோர் பாறையிலே!
வாழிய நீ!
உங்கள் குடும்பத்திற் கோர்பாழி யேனில்லை...?
சங்கொலிப்பா யன்புச் சமர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சி. ஆர். காமராஜ்,
கம்பளை

கே: நான்ஜி சி. ஈ. பரீட்சையில் சித்தி அடைந்தவன். எனக்கு வேலை கிடைக்க கொழும்பில் ஒரு கம்பெனியில் சிபார்சு செய்வீர்களா?

ப: ஆகட்டும் பார்க்கலாம்!

ஃ

ராணி, மல்லாகம்

கே: 'சிரிப்பது' லஞ்சம் என்கிறார் ஓர் ஆசிரியர். நீர் யாது கூறுகிறீர்?

ப: அந்த இலஞ்சத்தை அவர் உங்களிடம் வாங்கியிருக்கிறாரோ!

ஃ

ஆர். ஏயன்ன,
டிக்வலை

கே: நான் படித்தவன். ஆனால் படிப்பில்லாத ஒரு ஏழைப் பெண் மேல் தான் எனக்கு விருப்பமாக இருக்கிறது. காரணம்?

ப: படிப்பில்லாமலிருந்தால்தானே நீங்கள் படித்த "கலை"யைப் படிப்பிக்கலாம்.

ஃ

எஸ். எம். கேணியடி,
காரைநகர்

கே: கனியாத காய்கள் காதல் வாழ்வில் என்னவாகும்?

ப: பிஞ்சில் பழுத்து வெம்பிப் போகும்.

ஃ

சின்னத்துரை,
கல்முனை

கே: கல்முனையிலுள்ள ஒரு பாடசாலையின் அதிபர் தான் சிங்களம் கற்பதுமல்லாமல், தங்கைகளையும் மறைமுகமாகச் சிங்களம் கற்கச் செய்து பரீட்சையிலும் தோற்றியுள்ளார்கள். இவர்கள் தமிழர்கள் தானா குயுக்தியாரே?

ப: தற்போது தமிழர்கள் தான். இன்னும் சிறிது காலத்தில் சிங்களத் தமிழர்களாகி, பின்னர் சிங்களவர்களாகிவிடுவர்.

ஃ

'உதயவன்'
கொழும்பு-6

கே: சிங்களவர் — தமிழும், தமிழர்— சிங்களத்தையும் கற்க வேண்டும். கற்றால் இரு சாராரிடமுள்ள பரஸ்பர எண்ணங்களை, பரிமாறி ஒற்றுமையாக வாழ முடியுமென்று, உதவி வித்தியாதிபதி திரு டி. சி. குலதுங்க ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டாராமே!

ப: சிறந்த யோசனை, பாராட்டத் தக்கது. ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பின் கீழ் மட்டுமே இது சாத்தியம்.

ஃ

மோசிகீரன்,
வட்டுக்கோட்டை

கே: இளம் எழுத்தாளர்களை வளர்ப்பதே 'சுதந்திரனி'ன் நோக்மாயிருந்தும் காலத்தில் ஒரு சில இளம எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதில் தவறிவிடுவதேன்?

ப: தவற்றைச் சுட்டிக் காட்டுங்கள். சுதந்திரன் தன்னைத் திருத்திக்கொள்ள என்றும் தயார்.

ஃ

கே. கே. வி. ஆனந்தசர்மா,
வறக்காப்பொலை

கே: அரசாங்கம் 2500 சிங்கள ஆசிரியர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குத் தமிழ் மொழியைப் புகட்டித் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பிச் சிங்களம் போதிக்க இருக்கும் வேளையில் 2500 தமிழ் ஆசிரியர்களைத் தெரிவு செய்து சிங்களப் பாடசாலைகளில் தமிழ் போதிக்க அனுமதித்தால் என்ன?

ப: இதனை யார் எப்படிச் செய்வது? பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதல்லவா கேள்வி?

கே: யாழ். பிரதிநிதியை 6 மாதமாகக் காணவில்லையே!

ப: பயப்படாதீர்! வருடம் ஓரிருமுறை தலையைக்காட்டி தான் இன்னும் இருப்பதாக எப்படியோ நிரூபித்து விடுவார்.

ஃ

எம். எச். எம். அமீன்,
கல்முனை

கே: ஒருவன் வாழ்க்கையில் வெற்றிக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் விண் விரயமாகுமானால், அவன் வாழ்க்கையை வெறுப்பதுதான் கடைசிப் படியா?

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்:

ப: இல்லை. மீண்டும் மீண்டும் முயற்சி செய்யுங்கள். சுந்தரலிங்கத்தைப் பாருங்கள்! எத்தனை முறை தோதலில் மண கவ்வி கட்டுப் பணத்தைப் பறி கொடுத்தாலும், மீண்டும் மீண்டும் முயற்சி செய்கிறாரே!

ஃ

என். ஜெயபக்தன்,
நாறம்மல

கே: பெரிய இடத்துப் பெண் படத்தில் டி. ஆர். ராஜகுமாரி ராதாவைப் பிசாசாக வந்து பயமுறுத்துகிறாவே! அவ சாகாமல் இருந்து கொண்டு எப்படிப் பிசாசாகக் காட்சி அளிக்க முடியும்?

ப: குடும்பத் தொல்லையிற் சிக்கித் தவிக்கும் சில ஆண்களிடம் கேட்டால் தெரியும் எத்தனை பெண்கள் சாகாமலே பிசாசாகப் பயமுறுத்திக்கொண்டிருக்கிறார்களென்பது.

ஃ

டி. குப்புசாமி,
ஏட்டியாந்தோட்டை

கே: மனிதன் மனிதத் தன்மையற்றவனாக இருக்கிறானே, ஏன்?

ப: அவன் குரங்கிலிருந்து பிறந்ததால்.

ஃ

மு. கந்தையா,
வடலியடைப்பு

கே: தற்போது உள்ள சூழ்நிலையில் தமிழரசு பாராளுமன்றத்தைத் துறந்தால், கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொண்ட மாதிரியாக முடிந்துவிடக் கூடுமல்லவா?

ப: கட்சிக்கு மக்களின் பேராதரவு இருக்கும் வரை புற்றில் பாம்பு குடியேறமுடியாது. பாராளுமன்றத்தைத் துறக்க அதனால் போராட்டம் நடத்த முடியாத நிலையும், அதனைப் பிரச்சார மேடையாக உபயோகப் படுத்த முடியாத நிலையும் ஏற்பட வேண்டும்.

ஃ

சி. மெய்யானந்தன்,
மயிலிட்டி

கே: கலாசாலை மாணவிகள் கலாசாலை ஏகும் போது புத்தகங்களை ஏன் மார்பகத்துடன் அணைத்துக்கொண்டு செல்கிறார்கள்?

ப: இதனால் நெஞ்சகத்துச் சுமை கூடுகிறது. மார்பகத்தை மறைக்கப் புத்தகம் உதவுவதால், புத்தகத்தைப் பார்த்து ஏமாந்த வாலிபர்கள் உதட்டைப் பிதுக்குவதைக் கண்டு களிக்கவும் இது அவர்களுக்கு உதவுகிறது!

ஃ

டி. குப்புசாமி,
எட்டியாந்தோட்டை

கே: வழியில் போகும்போது ஒளிந்திருந்து அடிப்பவர்களை என்ன என்று கூறலாம்?

ப: தன்னைப் பாதுகாத்துக் கொள்வதிலும், செய்யும் காரியத்தைச் சரிவரச் செய்வதிலும் சூரர்கள் என்று கூறலாம். நேருக்கு நேர் நின்று அடித்தால் இவ்விரண்டையும் செய்ய முடியாதல்லவா?

ஃ

வீ. பாலகிருஷ்ணன்,
புதுவட்டகொடை

கே: காங்கிரசின் கைக் கூலிகள் சிலர் தமிழரசுக் கட்சியைக் காரணமில்லாமல் கன்னா பின்னா என்று திட்டுகிறார்களே, இவர்களுக்கு என்னகூற விரும்புகிறீர்?

ப: அவர்கள் கூலிக்கு வேலை செய்கிறவர்கள். அவர்களெல்லோரையும் சேர்த்து ஒரு யூனியன் அமைத்து, கைக் கூலியைக் கூட்டித்தரும்படி கிளர்ச்சி செய்யச் சொல்லுங்கள். கூட்டித் தரமறுத்தால் திட்டுவதை உடனடியாக நிறுத்தச் சொல்லுங்கள்.

ஃ

ஆ. பழனிமுத்து,
எட்டியாந்தோட்டை

கே: டாக்டர் என். எம். நிதி மந்திரிப் பதவியை அடைந்ததையிட்டு எங்கள் பகுதியிலுள்ள தமிழ் மக்கள் ஆரவாரம் செய்கிறார்களே, எதற்காக?

ப: அவசரப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள். அவர் என்ன செய்கிறார், அவரால் என்ன செய்ய முடிகிறது என்பதைப் பார்த்து பிறகு வேண்டுமானால் ஆரவாரம் செய்யலாமல்லவா? ஒன்றுமே செய்ய முன்பு ஆராவாரம் எதற்கு?

# விழித்து எழு! விடுதலை கொண்டு வா!

காசி. ஆனந்தன் பி. ஏ.

எழுந்திரடா தமிழா!
ஏடா என்னடா உனக்
இன்னும் உறக்கமோடா?
பழந்தமிழர் நிலத்தை
ஈழம் என்றதோர் மண்ணைப்
பறி கொடுப்பதோடா?
அழுந்திடவோ பிறந்தோம்?
மூடா! ஆமைபோல் இருந்தால்
வழி பிறக்குமோடா?
இழந்த புகழ் பெறுவோம்......
வாடா! நாமிறைி இங்கோர்
ஆட்சி நடப்பதோடா?

குடிப்பெருமை அனைத்தும்
சாய்ந்து குப்புற விழ
நாங்கள் குறைபாடுற்றோம்!
அடக்குமுறை தொடுக்கும்
பேயர் ஆட்சியின் பிடி
ஒன்றால் அவதியுற்றோம்!
துடித்தெழுவோம்! நமது
வீரத் தோள்களுக்கொரு
வேலை துவக்கிவைப்போம்!
படைக்களத்தில் நடந்து
பார்ப்போம்! மார்புகள் எழப்
பாய்ந்து புறப்படடா!

சிறைக்கதவு திறந்து
வாவென் றழைப்பினும் சரி
ஆங்கே செருக்களத்தில்
நரிக்குரல்கள் எழுந்து
காதைப் பிளப்பினும் சரி
நாங்கள் பணியமாட்டோம்!
வெறிப்படைகள் நுழைந்து
தாக்கி நொறுக்கினால் அட
வீழ்ந்து வணங்குவோமா?
மறக்குலத்தில் வளர்ந்த
வீரன் உயிரையும் விட
மானம் பெரிதன்றோடா?

எம். எம். மர்ஜினா,
கிண்ணியா-9

கே: ஐக்கிய தேசியக்கட்சி கூறுவதுபோல, தமிழரசு எம். பி.க்கள் இராஜினாமாச் செய்தால் ஆளுங் கட்சியினர் தமது ஆயுளை நீடிக்கமாட்டார்களா?

ப: விட்டுத் தள்ளுங்கள் அந்தக் கட்சி கூறுவதை. அது இருட்டில் நடமாடுகிறது. "ஜனநாயகத்தை"ப் பாதுகாக்க ஜனநாயகத்தையே கொலை செய்யும் கட்சி அது!

ஃ

எம். சி. எச் முகமத்,
வாழைச்சேனை

கே: முஸ்லிம்களின் போதனா மொழி எதுவாயிருக்க வேண்டுமென்பது தங்களின் கருத்து? தக்க ஆதாரத்துடன் விளக்குக.

ப: பல்வேறு தேசிய இனத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் உலகில் வாழ்கின்றனர். அவர்கள் எங்கே எந்தத் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களோ, அந்தத் தேசிய இனத்தின் மொழியே அவர்களின் தாய்மொழி.

ஃ

ம. மரியரத்தினம்,
உருத்திரபுரம்

கே: நீர் விரும்புவது எது?

ப: ஒரு தரமான கேள்வி!

ஃ


ஞா. பெ. அல்பிறட், டிக்கோயா.

கே: காஷ்மீர் பிரச்சினையை இந்தியா எந்தக் கண்ணோட்டத்துடன் நோக்க வேண்டும்?

ப: தன் சொந்தப் பிரச்சினை என்ற கண்ணோட்டத்துடன்......

கே: இலங்கைத் தமிழர்களாகிய நாம் காஷ்மீர் பிரச்சினையை எந்தக் கண்ணோட்டத்துடன் கவனிக்க வேண்டும்?

ப: ஐ நா. பிரச்சினை என்ற கண்ணோட்டத்துடன்......

S-lon

எஸ் - லொன்
இன்றைய அதிசயமான பைப்

இதுவே ஒரு உண்மையான பல-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக் குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது அரிப்பேற்படாது, கிருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான வீட்டு, கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானால் அதற்கு உகந்த பைப் எஸ்லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த ஸ்டோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம்,
பேங்ஷால் வீதி, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட சபை மசோதா நிறைவேறிவிட்டால் சமஷ்டி ஆட்சி உதயமாகும்

"வட, கிழக்கு மாகாணங்களைத் தமிழரசுக் கட்சிக்கு எழுதிக்கொடுக்கக் கூடியதாகத் தயாரிக்கப்படும் மாவட்ட சபை மசோதாவைப் பாராளுமன்றம் அங்கீகரித்தால் தமிழ் சமஷ்டி ஆட்சி தானுகவே உதயமாகிவிடும்" என்று 'லங்காதீப' அரசியல் நிருபர் சந்திரகுப்த 11-7-64ந் திகதி தனது அரசியற் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## சிங்கள இதழ்களில் . . .

அவர் மேலும் கூறுவதாவது:-

'பிராந்திய சபை அமைப்புக்குப் பொது மக்களின் எதிர்ப்பு கிளர்ந்தெழுந்ததால் அதன் உண்மை உருவத்தை நயவஞ்சகமாக மறைத்து 'மாவட்டசபைகள்' என்ற பெயரால் ஒரு மசோதாவைப் பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்க அரசாங்கம் எண்ணியுள்ளது.

சிங்கள இனத்தைக் காட்டிக் கொடுக்கும் இந்த மசோதாவை இந்த ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குப் பதிலாக அடுத்த பொதுத் தேர்தலுக்குப்பிறகு, பொதுமக்களின் கருத்தையும் அறிந்து செய்வது மிக நன்ருக இருக்குமல்லவா என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தஇனப்பற்றுள்ள வாலிபர்களிடம்கேட்கவேண்டியிருக்கிறது.

### ஆதாரமற்ற பீதியாம்!

12-7-64ந் திகதி 'தவஸ' கீழ்க்காணும் தலையங்கத்தை எழுதியுள்ளது:

'வட், கிழக்கு மாகாணங்களுக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்ப கல்வி மந்திரி செய்துள்ள முடிவு தமிழ் பேசும் மக்களை அடியோடு ஒழித்துவிடும் முயற்சியாகும் என்று தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகம் கல்வி மந்திரிக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மந்திரியின்முடிவால்தமிழ் பேசும் மக்கள் பீதியடைந்திருப்பதாகவும் திரு.செல்வநாயகம் கூறுகிருர்.

சிங்களமொழிபற்றி தமிழ் மக்கள் என்ன நினைத்தாலும் சரி, தீவிரவாதிகளான தமிழரசுவாதிகள் கொண்டுள்ள பீதி வெறும், ஆதாரமற்ற பீதி என்பதையும், சிங்கள ஆசிரியர்கள் என்ற கூட்டம் பேய் பிசாசுகளோ, பேய் பிசாசுகளைவிழுங்கும் இராட்சதர்களோ அல்ல என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

இம்மாதிரியெல்லாம்பேசி வகுப்புவாதத்தைக் கிளறிவிடும் தமிழரசுத் தலைவர்கள் சிங்களமொழி தமிழ் பேசும் மக்களை அடியோடு அழித்துவிடக்கூடிய ஆலகால விஷமென்று கூறினாலும் சரி, சிங்களவர்களைத் தமிழர்களின் எமன் என்று வர்ணித்தாலும் சரி, சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கு மிடையே அத்தகைய ஜன்ம விரோதம் ஏதும் கிடையாதென்பதை அறிந்தவர்கள் அறிவர்.'


## நிறுத்துங்கள்!




தரம் குறைந்த மைகளினால் உங்கள் பேனையை துஷ்பிரயோகம் செய்வதை நிறுத்துங்கள்- பார்க்கர் சுப்பர் குயிங்க் பாவியுங்கள். இதில் பேனையைப் பாதுகாக்கும் சொல்வ் X உண்டு. சுப்பர் குயிங்க் புதிய பேனைகளைப் புத்துணர்ச்சியுடனும், பழைய பேனைகளை புதிய பேனைகளைப் போல மீண்டும் எழுதவும் உறுதுணை செய்கின்றது.

இது ஒரு பாக்கர் பேனு கம்பனியின் உற்பத்தி

உலகெங்கால் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.


# கொண்டாடினுல் போதுமா?

—"மருதூர்க்கனி"—

மறைஈந்த இறையோனே! மா'நபி'யை உன்றன்
நிறைகுடமாய் நெஞ்சாற நீள்புவிக்குத் தந்தாய்!
அதற்காக ஆண்டவனே! அகிலத்து உயிர்கள்
அத்தனையும் உனக்காக ஆற்றிடுவோம் நன்றி!
அன்றந்த அக்கிரம அரபிகளின் நடுவில்
அன்புக்கு, பண்புக்கு, அரணுகி நின்று
தேனுன மொழியாலே தொட்டதனுல் நெஞ்சை,
கோனுகக் கொடுத்தார்கள் 'அல்அமீன்' மகுடம்.

பழிக்கஞ்சாப் பாவியர்கள் பன்னீரைச் சிந்தி,
பலிதீர்த்துப் பசிதீர்க்க மிருகவெறி உந்த,
கல்லாத பொல்லார்கள் கல்மாரி பொழிய
கல்நெஞ்சக் கயவர்கள் கழிகுடலைச் சூட
சலியாது கறுவாது சர்வோனை வேண்டி
சரியாத சகிப்பிமயச் சிகரத்தின் மேலே
'தீனிஸ்லாம்' எனும்அன்புக் கற்பகத் தருவை
தரணியெட்டுத்திசையும் தழைபரப்பச் செய்தோய்!

வீழ்ச்சியுறு வனிதைகுலம் மீட்சிபெற வேண்டும்!
வசைபோதும். அவர்வாழ்வு வளம்பெறவே வேண்டும்!
சூழ்ச்சிகளை வஞ்சகத்தைத் துடைத்தெறிய வேண்டும்!
தாழ்வுதனைத் தகர்த்தெறியத் தயாராக வேண்டும்!
கடல்போன்று பரந்தாழ்ந்த கலை அறிவு வேண்டும்!
கட்டாயம் கன்னியரும் காளையரும் கல்வி
கற்றுவரக் கடல்தாண்டிக் களிப்போடு செல்க!
குற்றேவல் செய்தேனும் கொண்டுவிடு ஞானம்!

அறிவுலக மேதைகளுள் ஒருவர்'ஷா' அன்று
"அமைதியும் மகிழ்வையும் கொண்டுவர வேண்டில்,
தற்கால உலகத்தின் அதிகார பீடம்
தற்போது மா'நபி'யாம் முகம்மதின் கையில்
இருந்தாலே நிச்சயமாய் இவ்வுலகம் மீளும்!
பிரச்சினைகள் தீர்ந்துவிடும்! பாரெல்லாம் தழைக்கும்!"
என்ருரே! அன்னுரின் ஜனனதினம் இன்றும்
கொண்டாடி விட்டாலே போதுமா? என்ன?

# உதவி மறுத்ததால் மொழி வழி பிரிகிறோம்

## புகையிரதப் பகுதி ஊழியர் அறிக்கை

புகையிரதப் பகுதியில், சிங்களம் படிக்காத ஊழியர்களுக்கு கட்டாயமாக வெளியேற வேண்டும் என்ற உத்தரவு கொடுக்கப்பட்ட போது, அவர்கள் சட்ட உதவியை நாடுவதற்கு இலங்கை புகையிரதப் பகுதி இலிகிதர் சேவா சங்கம் பொருளுதவி செய்ய மறுத்தது. ஆகவே இச்சங்கத்திலிருந்து தமிழ் பேசும் ஊழியர்கள் பிரிந்து மொழிவழித் தொழிற் சங்கத்தினை நிறுவியுள்ளனர். இ. சே. சங்கத்திலிருந்து விலகும் போது அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

புகையிரதப் பகுதி இலிகி சேவா சங்கத்திலிருந்து எமது ராஜினுமாவைச் சமர்ப்பிக்கும் இவ்வமயம் இந்தச் சில வார்த்தைகளை எழுதுவதையிட்டு நாம் மிகவும் மனவருத்த மடைகிறோம். எங்களில் அநேகர் இச்சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவராவோம். தொழிற் சங்கவாதிகளைப் பீதியுடன் பார்த்த காலத்திலே எவ்வளவோ இடையூறுகளுக்கும், இன்னல்களுக்குமிடையே நாம் கட்டி வளர்த்த இச்சங்கத்திலிருந்து, எமது சொந்த நலன்களைக்காக்க வேண்டி, அப்படிக்காக்காவிடில் எமது உரிமைகளை நாம் இழந்து விடுவோமானதினுல், நாம் பிரிகிருேம்.

பல்வேறு இனங்களைக் கொண்ட இந்நாட்டில், ஒரு கொடிக் கீழ் செயலாற்றுவது இயலாத காரியமாக இன்று ஆகிவிட்டது. ஒருவர் மற்றவரின் கருத்து, பிறப்புரிமை, உணர்ச்சிகள் இவற்றை அறிந்து, உணர்ந்து, மதிப்பளிக்கத் தயாராயில்லை என்பது உண்மையாகி விட்டது. தனது மொழி, மதம் இவற்றுக்கு மதிப்பளித்து, அவற்றைப் பாதுகாத்து, வளர்க்க அதற்குரிய உரிமையையுள்ள பெரும்பான்மை இனத்திடம் எமக்குத் துவேஷம் கிடையாது. அவர்களுக்குள்ள ஆவலும், விருப்பமும் தான் எங்களுக்குமென்பதை அவர்கள் உணர வேண்டும்.

எங்கள் நியாயமான உரிமைகளைப்பற்றி சங்கம் அக்கறை எடுக்காது இருந்து வந்த போதிலும், கட்டாய ஓய்வின் பிரகாரம் ஓய்வு பெற்ற ஊழியர்க்கு சட்ட உதவி செய்வதற்காகப் பணம் கோரப்பட்ட போது, ஒரு நூறு பேரின் கையொப்பமிட்ட மகஜர் மூலம், எமது உதவித் திட்டம் முறியடிக்கப்படும் வரை, நாம் ஒன்ருக இயங்கவே முற்பட்டோம். பலவீனமான தலைமை, காரணம் விளக்கிக் கடுமையாக நிற்பதை விட்டு, இந்தக் கூட்டத்துக்கு அடிபணிந்தது. சங்கத்தின் பணப்பெட்டிக்குள் தமது சொந்தக் காசாக ரூ 2500/க்கு மேல் போட்டிருந்த இந்தப் பழைய ஊழியர்களுக்கு உதவி செய்யும் வகையில் ஒரு 500 ரூபாய் செக்குக்குக் கையொப்பமிட மறுத்து விட்டது சங்கத் தலைமை.

பழைய ஊழியர்களின் உரிமைகளைக் காப்பதை 16 வது அம்சமாகக் கொண்டுள்ள 21 கோரிக்கைகளைப் பலமாக அநுவதிப்பதில் என்ன பிரயோசனம்? 21 கோரிக்கைகளையும் அநுவதித்தவர்கள், அவற்றை விசுவாசத்துடன் நிறைவேற்றுதபோது, இத்தலைமையில் எமக்கு எப்படி நம்பிக்கை இருக்க முடியும்?

சட்ட உதவி அளிப்பதாக உறுதியளித்துவிட்டு, பின்னர், சங்கத்தின் சுய உரிமை பெற்ற நிர்வாகக் குழுவின் ஏகமனதான தீர்ப்பையும் உதறித் தள்ளிவிட்டு, உறுதியிலிருந்தும் பிறழ்ந்த ஒரு தலைமை, மதிப்புக்குரியதாகாது. வெறும் வாய்ச் சொல் தான் அங்கத்தவருக்கு அவர்கள் ஆற்றும் சேவை! தந்திகள் அனுப்பி, கடிதங்களும் எழுதிவிட்டு அத்துடன் நிறுத்தி விடுகிறீர்கள்! நியாயமான மனிதாபிமானமான ஒரு லட்சியத்தை, அது ஈடேறும் வரை, தொடர்ந்து அதற்காக உண்மையுடன், மனச்சாட்சியுடன், உழைப்புடன் செயலாற்ற உங்களுக்கு முடியவில்லை.

ஆகவே எமது உரிமைக்கு, நியாயமும், கௌரவமும் உள்ள உரிமைக்குப் போராட நாம் வாழ்ந்து, இறக்க, நாம் சங்கத்தை விட்டுப் பிரிகின்ருேம். நாம் அப்பொழுது சுதந்திரமுள்ளவர்களாகிருேம். மற்றவர்களிடம் சிறு சிறு இரக்கங்களுக்காக நாம் ஏங்கி நிற்கத் தேவையில்லை.

### பதவியாளர்

புகையிரதப் பகுதி ஊழியர் சங்கத்தின் பதவியாளர்கள் பின் வருமாறு:

தலைவர்: திரு. வி. குணரத்தினம், உப தலைவர்கள்: திரு. எஸ். சோமசர்மா, திரு. பீ. வாதவூரன். செயலாளர்: திரு. வி. எஸ். வடிவேல், உதவிச் செயலாளர்: திரு. எஸ். கணேசமூர்த்தி, பொருளாளர்: திரு. எஸ். தியாகராசா, உதவிப் பொருளாளர்: திரு. சி. பரமேஸ்வரன்.




பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது:

# கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

தந்தி: தாமரை

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி: 3597—6522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டரசாங்கத்தின் தோற்றம் இனவேற்றுமையை வலுப்படுத்தியுள்ளது

## அரியணை உரை விவாதத்தில் அமிர்தலிங்கம் முழக்கம்

**கூட்டு அரசாங்கம் உருவானதன் மூலம் நாட்டில் இடதுசாரி வலதுசாரிச் சக்திகள் மாத்திரம் வேறுபட்டு விடவில்லை. அரசியல் ரீதியில் பார்க்கையில் சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையில் உள்ள வேற்றுமையும் விரிவடைந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் பேசும் மக்களை ஆரம்பத்தில் கைவிட்டது. சுதந்திரக் கட்சியினர் சிங்களப் பிரசாரகர்களாகவே விளங்கினர். இன்று சமசமாஜக் கட்சியும் ஏனைய இடதுசாரி இயக்கங்களும் தமிழ் பேசும் மக்களைக் கைகழுவி விட்டனர். இதனால் நாட்டில் வாழும் எல்லா மக்களுக்காகவும் பேசும் உரிமையை இக் கட்சிகளும் இழந்து விட்டன.**

அரியணை உரைமீது நடைபெற்ற விவாதத்தில் தமிழரசுக் கட்சியின் திருத்தப் பிரேரணையை முன்மொழிந்து உரை நிகழ்த்துகையில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இந்நாட்டின் சரித்திரத்தில் கடந்த சில மாதங்கள் முக்கியமானவை. புதிய சில சக்திகளின் கூட்டு ஏற்பட்டிருப்பதனால் எதிர் வரும் வருடம் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

1956ம் ஆண்டு ஏற்பட்டதாகக் கூறப்பட்ட 'புரட்சிகரமானமாற்ற'த்திலும் பார்க்க இப்போது ஏற்பட்டுள்ள கூட்டரசாங்க இணைப்பு இந்நாட்டின் சரித்திரத்தில் முக்கியமான ஒரு திருப்பமாகும். நான் இதை புத்திபூர்வமாகத்தான் கூறுகின்றேன். ஏனெனில் 1956ம் ஆண்டில் ஒரு சக்தி வாய்ந்த நடுத்தரக் கட்சி, சக்தி வாய்ந்த தலைவருடனும் ஒருசில மார்க்சீயவாதிகளுடனும், ஒரு வகுப்புவாத அடிப்படையில் தேர்தலுக்கு நின்று அதன் மூலம் அதிகாரத்தை ஒருவாறு கைப்பற்றினர். ஆனால் இன்று நிலைமை அப்படி அல்ல.

### இன்றைய மாற்றம்

இன்று தனது இறுதி மூச்சைவிடும் சுதந்திரக்கட்சி அரசு, ஒரு பலம் வாய்ந்த நன்கு இணைக்கப்பட்ட கட்சியும், நாட்டிலேயே சிறந்த அறிவாளிகள் சிலரைத் தலைவர்களாகக் கொண்ட கட்சியுமான சமசமாஜக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

மற்றைய இடதுசாரிக் கட்சிகளான மக்கள் ஐக்கிய முன்னணியும், கொம்யூனிஸ்ட் கட்சியும் அரசாங்கத்துடன் நேரடியாகக் கூட்டுச் சேராவிட்டாலும் எல்லாப் பிரதானமான பிரச்சினைகளிலும் அரசாங்கத்தை ஆதரிப்பார்கள் என்று தெரிய வருகிறது. இதனாலேதான் இன்றுள்ள நிலை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறுகின்றேன். கூட்டரசாங்கத்தைச் சேர்ந்த தனிப்பட்டவர்களிடம் இப்போதைக்கப்போது சிற்சில மாற்றங்களேற்படினும், இக் கூட்டின் மூலம் இந்நாட்டிலுள்ள இடதுசாரி வலதுசாரிசக்திகள் இருவேறு கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் தான் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானிக்க வேண்டியுள்ளது.

தங்களுடைய குறிக்கோளொன்றினை முன்னிறுத்தித் தான் சமசமாஜக் கட்சியினர் அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர். இந் நாட்டில் மார்க்ஸிசம், சோஷலிசம் ஆகிய சித்தாந்தங்களுக்கு முன்னோடிகளாக விளங்கியவர்கள் அவர்களே. நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா, தெஹிவளை—கல்கிசைப் பிரதிநிதி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா போன்றோர் தலைமையின் கீழ் உண்மையான சமதர்ம அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்திருக்குமானால், தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலையில் இன்று தள்ளப்பட்டுள்ள எம்மிற்பலர் மகிழ்ச்சியடைந்திருப்போம். ஆனால் இவைகள் எல்லாம் 'இருந்திருந்தால்......' என்ற எண்ணங்களே. அவற்றைப் பற்றி எண்ணுவதில் பலனில்லை.



திரு. அ. அமிர்தலிங்கம்

சுதந்திரக் கட்சியின் 4 அம்சத் திட்டத்தை சமசமாஜக்கட்சிஏற்றுக்கொண்டிருப்பதன் மூலம் சிங்கள வகுப்புவாதத்துக்கு, இனத்துவேஷத்துக்கு சரணடைந்து விட்டார்கள். நான்கு அம்சங்களை நான் குறிப்பிடும்போது பௌத்த மதம், மொழி, பிரஜா உரிமை ஆகியனவற்றையே குறிப்பிடுகின்றேன். 1948ம் ஆண்டு வரை எதற்காக இவர்கள் போராடினார்களோ அவற்றிற் கெல்லாம் மாறாகச் சென்று விட்டார்கள்.

### சிறுபான்மையினர் பிரச்சினை

எந்தப் பிரஜா உரிமைச் சட்டத்தை எதிர்த்தார்களோ அதே சட்டத்தின் அடிப்படையில் இந்திய வம்சாவளியினரின் பிரச்சினையைத் தீர்க்கத் துணிந்துள்ளார்கள்.

மொழிப் பிரச்சினையில் இவர்கள் தங்கள் ஆரம்பகால நிலையை மறந்து தனிச் சிங்களத்தின் கைதிகளாகி விட்டார்கள்.

மதவிடயத்தில் பௌத்த மதத்தின் மேன்மைக்காக அவர்கள் எதைச் செய்தாலும் நாம்குறைபடப் போவதில்லை. ஆனால் வகுப்புவாத, மதவெறியுள்ள சில இயக்கங்களின் பிரச்சாரத்திற்கு இசைவாக பௌத்தமத முன்னேற்றம் அமையுமேயானால், சமசமாஜக்கட்சி இப்பாதையில் வெகுதூரம் முன்னேறி விட்டது என்றே கூறமுடியும்.

சிறுபான்மையினரின் உரிமைகளுக்காகவும் நாட்டின் முன்னேற்றங்களுக்காகவும் இதுவரை காலமும் வாதாடி வந்த நிதி மந்திரி அவர்களும் அவருடைய சகாக்களும் எங்களுக்கு எதிர்ப்புறத்திலிருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். தனிப்பட்ட முறையில் நிதிமந்திரியிடம் நமக்கு அதிக மதிப்பும் அன்பும் இருப்பினும், தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில், சமசமாஜக்கட்சி தேசிய சிறுபான்மை இனங்களுக்கு நீதி கோரும் தனது நிலையினைக் கைவிட்டதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைய முடியாது.

சமசமாஜக் கட்சி சுதந்திரக் கட்சியிடம் சமர்ப்பித்த பத்து அம்சத் திட்டத்தில் சிறுபான்மையினர் பிரச்சினைகளைப் பற்றி எவ்விதத்திலும் குறிப்பிடாதது ஆச்சரியமாகவே உள்ளது.

### எல்லாம் சிங்களக் கட்சிகள்

இதற்காகத்தான் இக் கூட்டு அரசாங்கம் அமைந்ததன் மூலம், நாட்டிலுள்ள இடதுசாரி வலதுசாரி சக்திகளின் பிளவை வலியுறுத்துவதுடன், அரசியல் ரீதியில் இந்நாட்டிலுள்ள சிங்களவர்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையே உள்ள வேற்றுமையையும் எடுத்துக் காட்டுகிறது.

ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் பேசும் மக்களைக் கைவிட்டது. சுதந்திரக் கட்சியினரோ சிங்கள ஆதிக்கத்தின் பிரசாரகர்களாக விளங்கினார்கள். இதுவரை காலமும் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களுக்கு நீதி வழங்க வேண்டுமென்று கூறிவந்த சமசமாஜக் கட்சியும் சிங்கள வகுப்புவாதத்துக்கு அடிபணிந்துவிட்டது. ஆகவேதான் இந்நாட்டிலுள்ள முக்கியமான அரசியல் கட்சிகள் — வலதுசாரி, ஐ. தே. க., நடுத்தர சுதந்திரக்கட்சி, இடதுசாரி இயக்கத்தின் மிகப் பெரிய கட்சியான சமசமாஜக் கட்சி— எல்லாமே சிங்களக் கட்சிகளாக ஆகிவிட்டன; அதன் மூலம் நாட்டின் எல்லா மக்களுக்காகவும் பேசும் உரிமையை இழந்து விட்டன என்று கூறுகிறேன்.

(9-ம் பக்கம் பார்க்க)

---

## நிதி மந்திரியின் அரசியல் நிலைபற்றி

## டாக்டர் பெரேரா அன்றும் இன்றும்

அரியணை உரைமீது நடைபெற்ற விவாதத்தில் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசியதிலிருந்து ஒரு பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

முதலாவதாக, இலங்கையின் அரசியல் சுதந்திரம். எனக்கு ஞாபகமிருக்கிறது — சபையின் இப் பக்கத்திலிருந்து, அவரும் (டாக்டர் பெரேரா) அவரது சகாக்களும் 1948ல் பெற்ற சுதந்திரம் போலிச் சுதந்திரமென்று கூறியது, ஆனால், இப்போது அவர்களும் (சமசமாஜக்கட்சியினரும்) மற்றும் எல்லோரும் 1948, பெப்ரவரியில் நாம் பெற்ற அரசியற் சாசனம் சுதந்திர சாசனமென்று ஒப்புக்கொள்கிறார்கள். அதனாற்தான், இங்குள்ள தளங்களை விட்டேகும்படி பிரிட்டிஷாரிடம் எம்மாற் கூற முடிந்தது. அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையில் நாம் ஒரு அங்கத்தினர். இவரும் இவரது சகாக்களும் போலியெனக் கூறிய இச்சாசனத்தின் கீழ் இந்த உலகிலுள்ள வேறெந்த நாட்டைப் போலவும் நாங்களும் சுதந்திரநாடாகவே இருக்கிறோம்.

இரண்டாவதாக, சாம்ராச்சிய நாடுகள் கூட்டை அரசாங்கம் தொடர்ந்து அங்கீகரிப்பதாகச் சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறப்பட்டுள்ளது. அவர்கள் சாம்ராச்சிய நாடுகள் கூட்டுடன் உள்ள தொடர்பை மதிப்பதாகவும், அதை மேலும் வலுப்படுத்த நம்புவதாகவும் கூறுகிறார்கள்.

நிதி மந்திரியவர்கள் அங்கம் வகிக்கும் கட்சி ஒரு சமயம் நாங்கள் சாம்ராச்சிய நாடுகள் கூட்டை விட்டு விலக வேண்டுமென்று கூறியதென எண்ணுகிறேன். எங்களது எட்டு வருடத்துக்கு முந்திய அரசியல் தத்துவத்தை நிதி மந்திரியவர்கள் இப்பொழுது ஒப்புக் கொள்கிறார். சில வருடங்களுக்கு முன் அவர் கண்டித்த கொழும்புத் திட்டத்தை, இப்பொழுது ஆசிய மக்களுக்குப் பெரும் உபயோகமுள்ளதெனக் கருதும் அவர், அதன் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவர் என்ற முறையில் என்னை அண்மையில் பாராட்டினார். அதற்கு நான் அவருக்கு நன்றியுடையவனாவேன்.

இவர்கள் பிரஜாவுரிமைச் சட்டங்களை எதிர்த்து வாக்களித்ததும் எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆனால், இப்போது சிம்மாசனப் பிரசங்கத்தில், முதல் தடவையாக இந்தியர் பிரச்சினையை இப்பிரஜாவுரிமைச் சட்டங்களின் அடிப்படையில் தீர்ப்பதாக இவர்கள் கூறியுள்ளார்கள்.

மொழிப் பிரச்சினையில், நாங்கள் வெகுவாக வேறுபட்டோம். அவர்கள் சம அந்தஸ்து வேண்டுமென்றார்கள். ஆனால், இன்று நிதி மந்திரியவர்கள் தனிச் சிங்கள மசோதாவை ஏற்றுக்கொள்வதுடன், தமிழுக்கும் அதற்குரிய இடமளிக்கவும் விரும்புகிறார்.

பாராளுமன்ற ஜனநாயகமும் அவர்களுக்கு ஒரு முட்டைப் பூச்சியாகவிருந்தது. ஆனால், அவர்களது சிம்மாசனப் பிரசங்கத்திலின்றும், 14 அம்சத்திட்டத்திலிருந்தும், பாராளுமன்ற ஜனநாயகம் பாதுகாக்கப்படவும், உறுதிப்படுத்தப்படவும் வேண்டுமென அவர்கள் ஒப்புக்கொள்வதை நான் அறிய வருகிறேன்.

மதத்தைப் பொறுத்த வரையில், பௌத்த ஜயந்தி கொண்டாட ஐக்கிய தேசியக் கட்சி ஐம்பது லட்சம் ரூபாய் மான்யமளித்தபோது, நிதி மந்திரியவர்கள் ஆட்சேபம் தெரிவித்தது எனக்கு ஞாபகமிருக்கிறது. அப்பொழுது அரசாங்கம் மதத்துடன் எந்தச் சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று கூறப்பட்டது. ஆனால், சிம்மாசனப் பிரசங்கத்தில் முதற் தடவையாக, பௌத்த மதத்துக்கு இந்நாட்டில் அதற்குரிய இடத்தை, மற்ற மதங்களைப் பாதிக்காத முறையில் அளிக்க வேண்டுமென்பதை நிதி மந்திரியவர்கள் ஒப்புக்கொள்கிறார்.

**ஜே. ஆர். ஜெயவர்த்தன விமர்சனம்**

---


**பரீட்சைகளில் சித்தி பெற!**

பரீட்சையில் சித்தி அடையவும், பாடங்கள் மனதில் பதியவும், சபைக்கோழைத்தனம் அகன்று திறமையான பேச்சாளராக திகழவும் சிறந்த வழி ஒன்று இருக்கிறது. வேண்டிய காரணங்களுக்கு யந்திரமந்திர வேலைகள் செய்துதர முடியும். இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது. விபரங்களுக்கு எழுதவும்.

கவர்மெண்ட் ரெஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க,**

அருத எண்ணெய் தலைமை காரியாலயம்

கண்டி ரோடு,

கம்பளை.

# பாராளுமன்றத்தில் தோட்ட அரிசி

## நாட்டை வளமாக்கியவன் வாழ வழியில்லை

## சுயநலத் தலைவர்கள் பதவி வேட்டையாடுகின்றனர்

இந்நாட்டை வளமாக்கியவனின் வாழ்வு, பாலை வனமாகிவிட்டது. அழகிய தீவு என அயல்நாட்டார் பாராட்டுவதற்குப் பாடுபட்டவன்—போவது எங்கே என்று திகைக்கிறான்.

வழியறியாது நிலை தடுமாறுகிறான். அவன் வாழ்வுக்கும் வளத்திற்கும் வழிகாட்டியாக அமைந்திருந்த ஒற்றுமை என்ற இரும்புக் கோட்டையை மலைநாட்டு மக்களின் ஆயுள்காலத் தலைவர்களின் சுயநலத்தால், பதவி வெறியால், அரசியல் கொள்ளைக்காரர்களான கம்யூனிஸ்ட்—சமசமாஜி—சுதந்திர—யூ. என். பி. இன்னும் பல அநாமதேயகர்கள் உள்ளே நுழைந்து சுக்கு நூறாக நொறுக்கி சின்னாபின்னப் படுத்திவிட்டனர்.

மாற்றானுக்கு இடங் கொடுத்து, மலைநாட்டுத் தமிழ் மக்களின் ஒற்றுமைக் கோட்டையை உடைத்தெறிய உதவியவர்கள்தான் இன்றைய-இ. தொ. கா—இ. ஜ. கா. தலைவர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

நான் ஓர் மலைநாட்டான். உலகிலே இல்லாத நூதன பிரசையாகிய நாடற்ற பிரசையிலே நானொரு அங்கம். மக்களரசாங்கம் எனத் தங்களைப் பறைசாற்றிக்கொள்ளும் அரசாங்கம் பத்து லட்ச மக்களைமட்டும் மக்களாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

### துடித்தெழுந்தார்களா?

ஐயாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள ஓர் நாட்டில் ஒரு தொழிலாளிக்கு சம்பளத்தில் ஐம்பது சதம் வெட்டப்பட்டால், இந்தக் கொடுமையை, அநியாயத்தை, அராஜகத்தை, சகிக்கமுடியாமல் துடித்தெழுந்து கூட்டங்கள் நடத்தி கண்டனக் குரல் எழுப்புகின்றனர். உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என ஒற்றுமைக் கீதமிசைக்கின்றனர். இந்த சர்வதேசிய வர்க்கரீதக் கண்ணோட்ட சமசமாஜக் கம்யூனிஸ முற்போக்குவாதிகளுக்குப் பத்து இலட்சம் தொழிலாளர்களின் பிரச்சினையைப்பற்றி அக்கறையில்லை. இவர்கள் அகராதியிலே மலைநாட்டுத் தொழிலாளர்களை, வர்க்கரீதியிலே, பார்க்கக்கூடாதென்ற நிபந்தனை இருக்கிறதுபோலும்.

தொழிலாளர் வர்க்கத்திற்காக முதலைக்கண்ணீர் விடும் இந்தத் தொழிற்சங்கவாதிகள், சட்டமென்னும் தூக்குக் கயிற்றால், உயிரினும் மேலான உரிமை வலுக்கட்டாயமாக பிரிக்கப்பட்டபோது, மாஸ்கோவில் மழை பெய்தால் மட்டக்களப்பில் குடைபிடிக்கும் மார்க்ஸீய, சோசலிச பிற்போக்குவாதிகள் துடித்தெழவில்லை, துவண்டுவிடவில்லை. ஆனால் பேச்சு மூச்சற்று மூலையிலே முடங்கிக் கிடந்தனர்.

### போலித் தலைவர்கள்

காங்கிரஸ் தலைவர்களுக்கு பிரஜாவுரிமையைப் பற்றிக் கவலையில்லை. காரணம், தலைவர்களாக, குட்டித் தலைவர்களாக, மாவட்டப் பிரதிநிதிகளாக, இரு காங்கிரஸின் பிரமுகர்களாக கூறிக்கொள்ளும் அனைவருக்கும் அவர்களைச் சூழ்ந்தவர்களுக்கும், சார்ந்தவர்களுக்கும், பிரஜாவுரிமை கிடைத்துவிட்டது.

இன்று அவர்கள், சிந்திப்பதெல்லாம் சோற்றிற்கும், சுகத்திற்கும், உலக வலம் வரும் உல்லாச பிரயாணத்திற்கும் தேவைப்படும் வசதிகளைப்பற்றித்தான். இந்த கொடுமைநிறைந்த உண்மைகளைத் தோட்டத் தொழிலாளிதெரிந்துகொண்டான்.

காங்கிரஸ் தலைவர்களின் சுயநலத்தால், பதவி வெறியால் விளைந்த குரோத விரோதங்களினால், ஒற்றுமையின் சின்னமாக விளங்கிய உத்தமத் தொழிலாளர்களுக்கிடையிலே சண்டைகள் மூண்டன. மண்டைகள் உடைந்தன. ஐக்கியம் ஒழிந்தது.

ஒவ்வொரு தலைவர்களுக்கும், ஒவ்வொரு ஸ்தாபனம், உதயமாகியது. இ. தொ. கா., இ ஜ கா. எனப் பிரிந்தன. இந்தப் பெருந் தலைவர்களுக் கீழிருந்த குட்டித் தலைவர்களுக்கும் பதவி ஆசை வராமலா இருக்கும்? இவர்கள் சமசமாஜிக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, யூ. என். பி. இன்னும், பல கட்சிகளிடம் போய் சரணடைந்தனர்.

அரசாங்கத்தின் திட்டத்தை நிறைவேற்றும் இலட்சியமுடைய தொழிற் சங்கங்கள்தான் இன்று மலைநாட்டிலுள்ள அத்தனை ஸ்தாபனங்களும்.

மாற்றானை மண்டியிட்டு வரவேற்ற மலைநாட்டுத்தலைவர்கள் சொந்த இனத்தவனைத் துரத்தியடிக்க முனைவது ஏன்? காரணம் உண்டு. பிரஜாவுரிமைதொழிலாளர்களுக்குக் கிடைத்துவிட்டால்—கிடைப்பதற்காக வேறொரு கட்சி போராடி வெற்றி கண்டுவிட்டால், ஆயுட்காலத் தலைவர்களின் பதவிக்கு ஆபத்து வந்துவிடுமே என்ற சுயநலந்தான் காரணம்.

### தமிழரசாரால் முடியும்

மலை நாட்டுத் தமிழர்களின் பிரஜாவுரிமைப் பிரச்




சினைக்கு ஒரு முடிவு காண்பதென்றால், அது தமிழரசுக் கட்சியால் தான் முடியும், மலை நாட்டுத் தமிழர்களின் பிரச்சினையை பேசுவதற்கும், போராடுவதற்கும் தமிழரசுக் கட்சிக்குத்தான் உரித்தும்—உரிமையுமுண்டு.

பிரஜாவுரிமைச் சட்டம், குடியேற்ற வெளியேற்ற சட்டம் போன்ற தமிழின ஒழிப்புச் சட்டங்களைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த போது, ஒரே ஒரு மெல்லிய உருவம் தான், துயரம் தோய்ந்த குரலில் கண்டித்தது; எதிர்த்தது.

"இன்று மலை நாட்டுத் தமிழர்களின் உரிமையைப் பறிக்கும் அரசாங்கம் நாளை இலங்கை தமிழர்களின், உரிமையைப் பறிக்கப் போகிறது" எனத் தீர்க்கதரிசனம் கூற அக்குரல் எச்சரித்தது.

அத்தோடு நின்றுவிடவில்லை. அவர் தான் சார்ந்துள்ள தமிழ்க் காங்கிரஸ், மலைநாட்டுத் தமிழர்களின் பிரச்சினையில் பாதகமாக நடந்துகொண்டதினால், அக்கட்சியை விட்டுவிலகி மலைநாட்டுத் தமிழர்களின் பிரச்சினைக்கு ஓர் முடிவு காண்பதற்கும், இலங்கை வாழ் தமிழ் பேசும் இனம் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கும் ஏற்றாற் போல் கொள்கையை அமைத்து, நாலம்ச கொள்கைத் திட்டத்துடன் தோற்றுவிக்கப்பட்டதுதான் தமிழரசுக் கட்சி. அன்று மலைநாட்டு மக்களுக்காக கண்ணீர் விட்ட [illegible] தந்தை செல்வநாயகம்.

(13-ம் பக்கம் பார்க்க)

### விரக்தியா?...

★ உறுதியற்ற தன்மை
★ சக்திக் குறைவு
★ நோக்கமின்மை
★ மனச் சோர்வு

அப்படியானால், எங்களை உதவ விடுங்கள்—அதிர்ஷ்டம் என்பது கடுமையான உழைப்புக்கு இன்னொரு பெயர்—சந்தர்ப்பத்தின் கையில் எதையும் விட்டுவிட வேண்டாம்—இனி வரும் பரீட்சைகளுக்கு, இப்பொழுதே படிக்க ஆரம்பிக்கவும். பின்வரும்பரீட்சைகளில் உங்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் விசேஷ பயிற்சியைப் பெறுங்கள்:

இலங்கைப் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புத் தகுதிகாண் பரீட்சை.

ஜி. ஸி. ஈ. உயர்தரத் தேர்வு—கலை, விஞ்ஞானம்.

ஜி. ஸி. ஈ. சாதாரணத் தேர்வு—கலை, விஞ்ஞானம், வாணிபம்.

குரு வித்தியாலய புகுமுகத் தேர்வு—விஞ்ஞானம்.

தொடர்பு கொள்ளவும்:

**யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,**
**நெல்லியடி,**
**கரவெட்டி.**

கிளைகள்:
107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
13, முதலாவது சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6.

## கால் நடைகளுக்கும் உதவாதென சாட்டை

## நல்ல அரிசி வழங்க நாகநாதன் கோரிக்கை

தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்று மிக மட்டரகமான அரிசி வழங்கப்படுகிறது. இது பற்றி அரசாங்கம் அக்கறை காட்டுவதில்லை. கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் இது பற்றிப் பேசிய இலங்கைத் தொழிலாளர் கழகத் தலைவர் டாக்டர் நாகநாதன் அந்த அரிசியை ஒரு பையில் கொண்டு வந்து சபையில் சமர்ப்பித்தார். (இதை வழங்கியவர் இ. தொ. கழக ஆட்சிக் குழு உறுப்பினர் திரு. ராமையா) இது அட்டன் மாணிக்கவல்லித் தோட்டத்தில் விநியோகிக்கப்படும் அரிசியாகும்.

கால் நடைகளுக்குக்கூட உதவாத இந்த அரிசியை மனிதர்கள் எப்படிச் சாப்பிட முடியும் என்று சபையோரிடம் கேட்டார் டாக்டர் நாகநாதன். நாட்டின் 60 சத வருமானத்தை உழைத்துக் கொடுக்கும் தோட்ட மக்களுக்கு இந்த மட்டரக அரிசி வழங்கப்படுவது மிக மிக அநீதியாகும் என்று இடித்துக் கூறினார். உணவு மந்திரி இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுத்து தோட்டத்தொழிலாளர்களுக்கு நல்ல அரிசி வழங்க ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினார் இ. தொ. கழகத் தலைவர்.

## சமவாழ்வு மறுத்தால் தனிவாழ்வு

இந்த நாட்டிலே பிறந்து, இங்கேயே வளர்ந்து இந்நாடே தன்நாடு என்றிருக்கும் இலங்கைத் தமிழனை இன்னல்களுக்கும், கெடுபிடிகளுக்கும் உள்ளாக்கி இம்சைப் படுத்துவதினால் இலங்கை வாழ் தமிழ்பேசும் இனத்தையே அழித்துவிட அரசாங்கம் முயற்சி செய்கிறது

### அரசின் எண்ணம்

வறுமையை ஓட்டுவோம், வாட்டத்தைத் துடைப்போம், புதுவாழ்வு அளிப்போம், சிறுபான்மையினரைக் காப்போம் என்றெல்லாம் மேடைதோறும், பேசும் அரசு. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்குச் செய்த துரோகம் குறிப்பாக, மலைநாட்டுத் தமிழருக்குச் செய்த வஞ்சகம், மாற்றாந்தாய்ப் போக்கு இவைகள் இன்று வரையில் நிவர்த்திக்கப்படவில்லை. அத்துடன் மேலும் பல கொடுமைகளைச் செய்து, தொல்லை கொடுத்து, இம்சித்து இன்னல் பல ஈந்து, இடர்படச் செய்து தமிழர்களின் மனதை மாற்றி—சுலபமான வழியில்—"இந்தியாவிற்குப் போகிறேன்" என்று சொல்ல வைத்து, எழுத வைத்து, நாடுகடத்திவிட்டு நாடாள எண்ணுகிறது இன்றைய அரசு!

### தமிழன் பாசறை

தொன்றுதொட்டு இந்த நாட்டுக்கு உழைத்துக் கொடுத்த உழைப்பாளியின் பரம்பரையில் வந்த இன்றைய தமிழினம், ஆளவந்தவர்களின் நரித்தந்திர சூழ்ச்சிகளிற் சிக்கி விடக்கூடாது.

தமிழரசார் தலைமையில் இயங்கும் இலங்கைத்தொழிலாளர் கழகம் (தமிழனின் பாசறை) இன்று மலையகமெங்கும் பவனி வருகிறது. இந்தப் பாசறையின் காவலர்களும் தலைவர்களும் தமிழ் பேசும் மக்களின் மாபெரும் தலைவர்களாதலால், மாற்றுக் கட்சி பிரமுகர்களும், குறிப்பாக அரசாங்க அதிகாரிகளும் மிகவும் உன்னிப்பாக சற்று 'கிலியோடு' கவனித்து வருகின்றனர். காரணம், மலைநாட்டோடு, வடக்கும் கிழக்கும் இணைந்து விட்டால்!...

### நீ யார்?

மலைக்காற்றையே உண்டு உண்டு வளம் பெற்று—வாழ்விழந்து நிற்கும் தமிழினமே! குற்றேவல் புரிந்து குலாவிடும் இனமல்ல உன் இனம்!

**ஏ. வி. முருகேசன்**

நத்திப் பிழைக்கவும், நயவஞ்சகம் புரியவும், கோடி கொட்டிக் கொடுப்பினும் மாற்றானின் அடி வருடவும் இணங்காத—எண்ணுதபரம்பரையில் வந்த இனம் நீ!

ஆகவே, நமக்கு வீர வாழ்வு வேண்டும். சமவாழ்வு மறுத்தால் தனிவாழ்வு என சூளுரைக்கும் தமிழரசுக் கட்சி நமக்குத் 'தொழிலாளர் கழகம்' என்ற எஃகு கோட்டையை அளித்திருக்கிறது. கோட்டைக்குள்ளே ஒன்று சேர்ந்து திரண்டு விட்டால், 'மக்களுடைய உரிமைகளை மண்ணாக்கி விட்டு, நீதியைப் புறக்கணித்து நிலையான அரசை நிலை நாட்டிக் கொள்வோம்' என்ற தப்புக் கணக்குப் போடும் எந்த ஒரு இயக்கமும் அரசோச்ச முடியாது என்பதை மலைநாடு மறந்தலாகாது.

இதை நினைவில் நிறுத்தி, இன்னல் களைய, இன்றே முயலுவோமாக!

### மருத்துவ பரீட்சையில் சித்தியடைந்தார்

திருமதி சத்தியமலர் திருநாவுக்கரசு லிட்ஸ் சர்வகலாசாலை வைத்தியக் கல்லூரி எம். பி, சி. எச். பீ. பரீட்சையில் இரண்டாம் வகுப்பு ஆனேர்சுடன் சித்தியெய்தி, பிரசவ வைத்திய பாடத்திற் சிறப்பு அம்சம் பெற்றனர். யாழ்ப்பாணம், வேம்படிப் பெண் கல்லூரியிலும், கொழும்பு மெதெடிஸ்ற் கல்லூரியிலும் இவர் கல்வி பயின்றார். சத்தியமலர், தெஹிவலை, முகாந்திரம் வீதியைச் சேர்ந்த எஸ். பீ. சற்குணன் தம்பதிகளின் புத்திரியாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் ஆராய்ந்த வித்தகர் விபுலாநந்தர்

## பல்துறையில் பயின்று பண்தமிழை வளர்த்தோன்

**முத்தமிழையும் துறை போக ஆய்து-முத்தமிழுக்கும் அணி செய்த வித்தகர் விபுலாநந்த அடிகள். ஈழமும் தமிழகமும் ஒரு சேரப் போற்றிய பெரியார். தமிழறியராகத் திகழ்ந்த இவர் அறிவியற் துறைக்கும் ஆவனசெய்துள்ளார். நாட்டு மக்களை நல்வழிப் படுத்துவதுடன் மட்டும் அவரின் தொண்டு நின்று விடவில்லை. துறவியாக இருந்த போதும் மக்களின் மனவெழுச்சியை உணர்ந்து செயல்பட்டார். நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தன்னை முற்று முழுதாக ஈடுபடுத்திக் கொள்ளாத போதும், அதற்குத் துணை நின்றார். தமிழிலக்கியத்தில் மரபுவழிதவறியவர்களைச் சாடினார். அடிகளாரின் நினைவு தினம் 19-7-64 ஆகும்.**

ஈழத் தமிழறிஞரைத் தென்னகத் தமிழர் மதிப்பதில்லை; அவர் தம் படைப்புகளை ஏற்றுப் பிரசுரிப்பதில்லை என்ற குமறல் சில காலத்திற்கு முன் வெளிவந்தது: உள்நாட்டிலேயாவது அவற்றிற்கு மதிப்புத்தேட, இறக்குமதித் தடைவேண்டும், மண்வள இலக்கியத்தையே ஆதரிக்க வேண்டும் என்ற கிளர்ச்சிகளும் ஏற்பட்டன. அதைத் தொடர்ந்து புற்றீசல்போற் பல பிரசுராலயங்கள் தோன்றின.

"யாதானும் நாடாமல்
ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாதவாறு"

என்ற குறளைப் பலர் மறந்து விட்டதாலேயே பல குளறுபடிகள் தோன்றின. உண்மையான அறிஞருக்கு நார்டெல்லை கிடையாது; உலகமே ஏற்றிப் போற்றும். தென்னகத்தார் தம்மவரில் ஒருவரென மதித்த மாணிக்கங்களுள் விபுலாநந்தரும் ஒருவர்.

### துறவி தோன்றினர்

துறவியான இளங்கோ தமிழன்னைக்குப் புனைந்த அணி சிலப்பதிகாரம். அதனை டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பித்து வெளியிட்டது 1892-ல். சிலம்புச் செல்வத்தை நுகர்ந்து 'யாழ் நூல்' என்ற ஆராய்ச்சிப் பெட்டகத்தைத் தந்த துறவி விபுலாநந்தர் அவதரித்ததும் அதே 1892-ல். ஆசிரியராக, கல்லூரி முதல்வராக, முகாமையாளராக, பல்கலை ஆராய்ச்சியாளராக, பன்மொழிப் புலவராகத் தமிழுக்கும் தமிழருக்கும் அவர் ஆற்றிய பணிகள் பல. துறவுக் கோலம் பூண்டு வாழ்க்கையையே ஆராய்ச்சிக்கு அர்ப்பணித்தவர்.

### முத்தமிழ் வித்தகர்

ஈழத்திலே அவர் பணி புரிந்த பள்ளிகள் பல. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அவரைத் தமிழ்ப் பேராசிரியராக்கித் தனக்குப் பெருமை தேடிக்கொண்டது. அவரிடம் அங்கு தமிழ் கற்ற புலவர் பெருமக்களுள் திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியாரும் ஒருவர். அவர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கி வருகின்றார். என்போன்ற ஈழத்து மாணவருக்கெல்லாம் விபுலாநந்தரின் ஆய்வுத்திறனை அடிக்கடி கூறிவந்தார். ஈழத்தவரைப் பற்றித் தென்னகத்துப் புலவர்கள் போற்றும் போது, எமக்குப் பெருமிதம் மிகும்; சற்றுத் தலைநிமிர்ந்து நடப்போம். அவர் எழுதிய கட்டுரைகளும், நூல்களும் இயற்றமிழன்னைக்கிட்ட அணிகளாகும். நாடகத் தமிழுக்கு 'மதங்க சூளாமணியும்', இசைத் தமிழுக்கு 'யாழ் நூலும்' இவரின் ஆராய்ச்சியில் முகிழ்த்த பெருஞ் செல்வங்களாகும்.

முத்தமிழ் போற்றிய வித்தகர் விபுலாநந்தர் கவின் கலைக் கலைஞர் மாத்திரமல்ல; அறிவியல் அறிஞரும் கூட. பி. எஸ். சி. பட்டம் பெற்றார். ஆய்களப் பரிசோதனைகளோடு அறிவியல் போதிப்பதில் வல்லவர் என மாணவராலும் ஏனைய ஆசிரியர்களாலும் போற்றப்பட்டவர். 'விஞ்ஞான தீபம்'

**மு. சிவானந்தம்**
**எம். ஏ.**

என்னும் நூலில் விஞ்ஞான நுட்பங்களையெல்லாம் இலகுவான தமிழில் எழுதித் தாம் பெற்ற அறிவைத் தமிழர் அனைவரும் பெறச்செய்தார்.



அடிகளார்

### பன் மொழிப் புலவர்

தமிழ், ஆங்கிலம், வடமொழி, இலத்தீன், யவனம், வங்கம், சிங்களம், பாலி, அரபு முதலியன பயின்று பன்மொழிப் புலவரானார். அம் மொழிகளிலெல்லாம் தானறிந்த சிறந்த கருத்துக்களைக் கட்டுரைகளாகவும், மொழி பெயர்ப்புகளாகவும் வெளியிட்டார். நாகரிக வரலாறு, தமிழின் தொன்மை, தத்துவம் முதலிய பல துறைகளிலும் அவரது ஆராய்ச்சி பல கிப் பரவியது

### வீரத்தாயும் அடிமைத் தமிழரும்

பிற மொழியினரின் நூல்களைப் படிக்கும் போது, தமிழின் சிறப்பையும், அச் சிறப்பினை உணராது அடிமை மோகத்தில் மூழ்கிக் கிடக்கும் நம்மவரின் சிறுமையையும் உணர்ந்து வருந்தியவர் விபுலாநந்தர். 'மேற்றிசைச் செல்வம்' என்னும் கட்டுரையில் பண்டைத் தமிழரின் வீரத்தை நினைவு படுத்துகிறார். போர்க்களத்திலே புறமுதுகிட்டான் நின் மகன் எனக் கேட்டு, அக்கோழைக்குப் பால் கொடுத்த முலையறுத்திடுவேன் எனச் சினந்தெழுகிறாள் ஓர் வீரத்தாய். மண்பட்ட தன் மகன் மார்பிலே புண்பட்டுப் பண்பட்டான் எனக் கண்டு ஈன்ற பொழுதிற் பெரிதுவந்தாள். இச் செய்தி தாங்கிய புறநானூறுப் பாடலைக் கூறிவிட்டு, அடிமைப் புத்தி தாங்கி அலையும் நம்மவரை ஓர் பாடலாற் சாடுகின்றார். இதோ அப்பாடல்:

'தந்தை மதியினுஞ் சாலு
நன மதியோன்
என் மகன் நிரன் எசமான்
கோபித்து
எட்டியுதைத்த காலினை பற்றி
முத்தமிட்டு முன்னின்று
பணிந்து
ஐய நின்காலுக் கடுமை
துயர் விளைத்தனன்
என்னக் கூறி யிறைந்து
வெண் பொன்
சம்பளவுயர்ச்சி சாலப்
பெற்றனன்'

இப்பாடலுக்கு விளக்கவுரையோ விருத்தியுரையோ தேவையில்லை. இது சாதாரணக் காட்சியாகிவிட்டது. 1947லேயே இவ்வுலகை நீத்த அப்பெரியாரின் பாடல் ஏதோ தீர்க்க தரிசனமாக இன்று விளங்குகின்றதல்லவா?



கட்டுரையாசிரியர்

### மரபு பற்றி

1942ல் மதுரையில் நடந்த முத்தமிழ் மகாநாட்டில் நிகழ்த்திய தலைமையுரையில் அவர் கூறிய கருத்துக்கள் இன்றைய எழுத்தாளர் பலருக்கு வழிகாட்டுவனவாயுள்ளன; மயக்கம் தெளிவிக்கும் மாமருந்தாயுள்ளன. '...முன்னோர் மொழி பொருளையும் மரபு பட்ட இலக்கண முடிபுகளையும் ஆராய்ந்தறிந்து தொள்ளாது, நெறியறியா மாக்களை மயக்கி, அவர் தம்மை நெறியல்லா நெறியிற் புகுத்தி ஆரவாரிப்போர் செயலானது குருடனைக் குருடன் வழி நடத்துவது போலாகும்' என்று அப்பெருமகனார் அன்று பேசிய பேச்சு எவ்வளவு உண்மையானது என்பதை இன்று நாம் உணருகின்றோமல்லவா?

'பொருள் வருவாய் ஒன்றினையே கருதி மனம் போனவாறு மரபு தவறி எழுதும் மொழி வழக்கானது மழைக் காலத்திலே தோன்றி அக்காலங்கழிய மறைந்து போகின்ற சிறு பூடுகளைப் போல் நிலைபேறில்லாதது. நிலை பேறுடைய உண்மை, அழகு, செம்மை என்னும் இவை தமமையே அறிஞரது உள்ளம் என்றும் அவாவி நிற்கும்' என அவர் அன்று பேசிய பொன் மொழிகள் நல்லதைப் போற்ற வழி செய்யுமாக. வாழ்க விபுலாநந்தர்; வெல்க விபுலாநந்தம்.

# கதிர்காம ஆலய வரலாறு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

1635ம் வருடம் முதல் 1817ம் வருடம் வரை கதிர்காமம் ஜோதி காமமாய் விளங்கியது. 1815ல் கண்டி இராச்சியம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் ஆனதும் கதிர்காமத்தை உள்ளடக்கிய ஊவா கலகம் ஏற்பட்டது. இக்கலகம் 1818ல் வலுவடைந்து 1819ல் அடக்கப்பட்டு இந்துக்கள் வசம் கதிர்காம நிர்வாகம் ஒப்படைக்கப் பட்டது.

ஆலயப் பாதுகாப்புக்காக ஆங்கிலேய அரசாட்சியால் அனுப்பப்பட்ட துருப்புகளால் கைப்பற்றப்பட்ட பின்னர் அப்படை பாதுகாப்புப் படையாக சிறிதுகாலம் இருந்து நீக்கப்பட்டது. இது 1819ம் வருட மத்திய காலத்தில் நடைபெற்றது. அப்போது தெய்வானை அம்மன் கோவில் ஸ்தானிகராக இருந்த பெரியார் ஸ்ரீ கல்யாண கிரிபாவா என்பவரிடம் திருவாகம் ஒப்படைக்கப்பட்டது. 1819ல் கலகம் அடக்கப்பட்டதும் காட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த விக்கிரகம் திரும்பவும் கொண்டு வரப்பட்டு மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டது என்று பிரவுண்ரிக் கவர்னருடன் சென்ற டாக்டர் டேவி என் என்பரர் 1821ல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்கப் பத்திரிகையில் எழுதி வெளியாகியது. அதன் பின் இருசாராரும் ஆலய நிருவாகத்தை நடத்தி வந்திருக்கிறார்கள்.

1865ம் ஆண்டுவரையில் தமிழர்களே கந்தசா[illegible] வாகத்தை நடத்தி[illegible] என்று உறுதியாய்ச் சொல்லும் அத்தாட்சியைப் பதுளையில் நடந்த D. C. 182ம் நம்பர் வழக்கில் இணைக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

1922ம் வருடத்தில் ஆலய பரிபாலனக் கமிஷன் எச். டபிள்யூ. கோட்ரிங்டன் (H.W. Codrington) காலத்தில் உள்விட்ட பஸ்நாயக்காவை நீக்கி திரு. கட்டுகாவை பஸ்நாயக்கா

**எஸ். எஸ். நாதன்**

வாக நியமித்தார்கள். ஆனால் உள்விட்ட பஸ்நாயக்கா நிருவாகத்தை மாற்றிக் கொடுக்க விரும்பாமலும், கோவில் திறப்புக்களைக் கொடுக்காததாலும் பதுளை டிஸ்றிக் கோர்ட் மூலம் விசேட வழக்கு இலக்கம் 1 தொடுத்து அப்போது கிளார்க்காகவிருந்த திரு. ரி. சரவணமுத்து அவர்களால் கோவில்பூட்டை உடைத்துத் திறந்து சட்டப்படி ஒப்படைக்கப்பட்டது. திரு. சரவணமுத்து அவர்கள் திருக்கோணமலையில் வன்னியாராகவிருந்து ஓய்வு பெற்றவர்.

### வேலுப்பிள்ளை பரம்பரை

கி. பி. 1865ம் ஆண்டு வரை சுமார் 30 வருடகாலம் வரை கதிர்காமத்தில் வசித்து வந்த வேலுப்பிள்ளை பூசாரி என்பவர் கந்தசாமி ஆலயத்தின் பிரதம பூசாரியாகவும், கோவில் மனேஜராகவும், வள்ளியம்மன் ஆலயத்தின் உரிமையாளராகவுமிருந்து வந்தாரென்பது [illegible] லும் பதுளை D. C. 182ம் நம் [illegible] உரிமைத் தத்துவ வழக்கிலும் திருபணப் செய்யப்பட்டு அன்னவரின் மருமகனை திரு. பொன்னையா என்பவருக்குத் தத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவரே தற்சமயம் முத்துலிங்கசுவாமி கோவில் தர்மகர்த்தாவான திரு. கந்தையாவின் தந்தையாராகும். அது சமயம் பஸ்நாயக்கா நிலாமையாகக் கடமையாற்றியவர் கட்டுகா பஸ்நாயக்காவின் பாட்டனாராகும். அவர் பெயரும் கட்டுகா பஸ்நாயக்கா என்பதுதான். அவரும் மேல் குறிப்பிட்டுள்ள உண்மைகளைத் தனது பெட்டிஷன் வாயிலாக ஒப்புக்கொண்டிருக்கிறார். அம் மனு மேற்படி 182ம் நம்பர் வழக்கில் இணைக்கப்பட்டிக்கிறது.

வேலுப்பிள்ளை பூசாரியின் உடன் பிறந்த சகோதரி சிதேவி அம்மையைத் திருமண முடித்தவர் பால்ஹாமி என்ற சிங்கள கப்புராளையாகும். ஒருவாறு இருவரும் சமீபகாலத் தமிழர் வம்சத்திலிருந்து வந்தவர்களாகும். மகாகம ஹப்புகாமி என்ற தேரிஸ் அப்பு, சலமன் கப்புராளை (யானை மேல் வருபவர்) பாரிஸ் அப்பு (வள்ளியம்மன் பெரிய கோவில் கப்புராளை) மானிஸ் அப்பு (பெரிய கோவில் கப்புராளை) இவர்கள் எல்லாம் இந்தச் சந்ததியைச் சேர்ந்தவர்கள் என்பது அனேக யாத்திரை வாசிகட்கு தெரியாமல் இருக்கலாம்.

### கோயில் சொத்துக்கள்

இவ்வாலயத்திற்கு முன்னோர்களால் விடப்பட்ட நெல்வயல்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருப்பதுடன், தேயிலை, ரப்பர் தோட்டங்களும் அளவற்ற கருங்காலி, தேக்கு, முதிரை மரக் காடுகளும் சுமார் ஐம்பதாயிரம் ஏக்கர் வரை இருக்கிறது. அத்துடன் பல ஆயிரக் கணக்கான ரூபாய் வரை உண்டியலில் வந்துகொண்டிருக்கிறது. இந்த ஆதாயம் பூராவும் இரண்டொருவரின் நலத்திற்கே உதவி வந்தது. யாத்திரிகர்களின் இன்னல் குறித்தோ ஆலயச் சீர்திருத்தம் பற்றியோ கிஞ்சிற்றும் கவனிக்கிறார்கள் இல்லை.

சுவாமிக்கு அலங்காரம் செய்ய, அக்காலங்களில்

(13-ம் பக்கம் பார்க்க)

"மந்திர சக்தியை"
திருபிப்பதற்காக உங்கள் காரணம் எதுவானாலும் நிறைவேற்றித்தர முடியும். உங்கள் காரணத்தை விபரமாக எழுதி அனுப்பவும்.
கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்
டி. எம். திசாநாயக்க
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அருத எண்ணெய் தலைமை காரியாலயம்
கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1964 யூலை மாதம் 19-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## படையெடுப்பை நிறுத்துக!

2000 பேர்களைக் கொண்ட சிங்கள மொழி ஆக்கிரமிப்புப் படையைத் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பும் அரசாங்கத் திட்டம் ஒரு புதிய திருப்பத்தை அடைந்துள்ளது. பெற்றோர், ஆசிரியர் ஆகியோரின் கருத்தை அறிய தமிழ்ப் பகுதிகளிலே ஒவ்வொரு பாடசாலையிலும் வாக்கெடுப்பு நடத்த கல்வி மந்திரி முடிவு செய்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. அது சாத்தியமில்லையேல், பெற்றோர்—ஆசிரியர் சங்கங்களின் கருத்தை அறிய முயற்சி செய்வாராம்.

கல்வி மந்திரிக்குத் திடீரென ஏற்பட்ட இந்த 'ஜனநாயக உணர்ச்சி' பாராட்டத்தக்கதே! இதிலிருந்து பெற்றோரின் கருத்தை அறிந்து அதற்கேற்ப பிள்ளைகளுக்குக் கல்வியூட்ட வேண்டுமென்ற மேலான 'ஞானோதயப்' கல்வி மந்திரிக்குப் பிறந்துவிட்டதாகக் கருதி விட வேண்டாம். அவர் தீவிர சிங்கள வகுப்புவாதக் கோஷ்டிகளுக்கு விட்டுக்கொடுக்கும் மனப்போக்குள்ளவர். தமிழ் பேசும் பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பதும் அவரது வகுப்புவாத நடவடிக்கைகளிலொன்றே.

பாடசாலைகள் வாயிலாகச் சிங்களத்தைத் திணித்து, தமிழ் மொழியை அழிப்பதற்கே சிங்கள ஆசிரியர்களின் படையெடுப்பை நடத்த அவர் திட்டமிட்டார். இச்சதித் திட்டத்தை நிறைவேற்ற மக்களிடையே செல்வாக்கிழந்து தவிக்கும் ஒரு சில உதிரிகளின் உதவியையும் பெற்றுக் கொண்டார்.

இப்படையெடுப்பை எதிர்த்து வெகுண்டெழுந்தது மக்கள் இயக்கமாம் தமிழரசுக் கட்சி. கட்சியின் சார்பாகத் தமிழரசுத் தந்தை மந்திரிக்குக் கண்டன நிருபங்களை ஏவினார். பாராளுமன்றத்திலும் எதிர்ப்புக் குரல் எழுப்பினர் தமிழரசுப் பிரதிநிதிகள். தலைவர்கள் வட பகுதியிலே கண்டனக் கூட்டங்களை நடத்தி, போராட்டத் திட்டங்களை வெளியிட்டனர்.

சிங்கள ஆசிரியர்களைப் பாடசாலைகளினுள் நுழைய விடாமல் ஒவ்வொரு பாடசாலையிலும் சாத்வீக மறியல் போராட்டம் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டது. தானே முன்னணியில் நின்று மறியல் செய்து சிறைசெல்லத் தயாரென்று கூறி தமிழரசுத் தந்தை, 2000 சிங்கள ஆசிரியர்களையும் வந்த வழியே திருப்பி அனுப்பி வைக்க வேண்டுமென்று பெற்றோர்களையும் மக்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு எதிர்ப்புகள் மலைபோல வளர்ந்து வருவதைக் கண்ட கல்வி மந்திரி தமிழ்பேசும் பாராளுமன்றப் பிரதிநிதிகளினதும் தமிழரசுக் கட்சியினதும் எதிர்ப்பைப் பக்கவரட்டில் கடந்து செல்வதற்காக, பெற்றோர்-ஆசிரியர்கள் கருத்தை அறியப்போவதாகக் கூறுகிறார். இதனை நேர்மையாகச் செய்வதாயின் வரவேற்கலாம்.

கருத்தை அறிய ஒரு வாக்கெடுப்பு நடத்தப்படுமாயின் பெற்றோர் 100 சத விகிதம் சிங்கள ஆசிரியர்களின் படையெடுப்புக்கு எதிர்ப்பு தெரிவிப்பார்களென்பதில் ஐயமில்லை. நடத்திப் பார்க்கட்டும் வாக்கெடுப்பை. தமிழ்பேசும் மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் ஒரே கட்சி தமிழரசுக் கட்சியே என்பது அப்பொழுதுதான் ஆட்சியாளருக்குத் தெரியும். தாய்மொழியையும், இனத்தையும் அழிக்க தமிழ்பேசும் பெற்றோர் என்றுமே சம்மதிக்கமாட்டார்களென்பதைக் கல்வி மந்திரி உணரவேண்டும்.

இம்மாதிரி இதர பிரச்சினைகளிலும் தமிழ்பேசும் மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தி, அவர்களின் கருத்தைத் தெரிந்து நடவடிக்கை எடுக்கப்படுமா? கல்விமந்திரியின் வாக்கெடுப்பு அதற்கு முன்மாதிரியாக அமையவேண்டும்.

தமிழ்பேசும் மக்களின் எதிர்ப்பின் முன்னால் தனது சதித் திட்டத்தை அமுல்நடத்த முடியாதென்பதைக் கல்வி மந்திரி உணர்ந்துள்ளார் என்பதே அவரது திட்டத்துக்கு 'ஜனநாயக' மெருகேற்றுவதிலிருந்து தெரிகிறது. 'படையெடுப்பை' நிறுத்தி, பின்வாங்கினால் மக்களின் எதிர்ப்புக்குப் பணிந்ததாகிவிடும் என்று அவர் கருதுகிறார் போலும்! அதற்காக நடத்தும் கண்துடைப்பு நாடகமா இந்த வாக்கெடுப்புக் கூச்சல்? எது வாயினும் சரி சிங்கள ஆசிரியர்களை அனுப்பும் திட்டத்தைக் கைவிடுவதைத் தவிர அரசாங்கத்துக்கு இன்று வேறு வழிகிடையாது.

தமிழ் பகுதிகளிலுள்ள பெற்றோர் சங்கங்கள் அனைத்தும் உடனடியாக இப் 'படையெடுப்பை' எதிர்த்து கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும். இதில் தாமதம் கூடாது.

கல்விமந்திரியின் வரட்டுப் பிடிவாதத்தின் விளைவாக இந்தப் படையெடுப்பு நடைபெறுமாயின், தமிழ்ப் பகுதிகளில் பெரும் கொந்தளிப்பு ஏற்படும். போராட்டங்கள் கிளர்ந்தெழும். அந்த நெருக்கடியை உருவாக்கிய பொறுப்பும் கல்விமந்திரி மீதே சுமத்தப்படும்.

வாக்கெடுப்பு நடத்தினாலும் சரி, நடத்தாவிட்டாலும் சரி தமிழ்பேசும் மக்கள் கல்விமந்திரியின் சதித்திட்டம் நிறைவேற நிச்சயம் அனுமதிக்கவே மாட்டார்கள். எனவே உடனடியாகப் 'படையெடுப்பு'த் திட்டத்தைக் கைவிடும்படி அரசாங்கத்தை மீண்டும் வற்புறுத்துகின்றோம்.

# எம்மினத்தின் விடுதலைக்கு மாற்றுரை நம்பி பயனில்லை

# நிலையான பாதுகாப்பு இன்றேல் அபாயம் தவிர்க்க முடியாதது

தமிழ் பேசும் மக்கள் தங்கள் இழந்த உரிமைகளைத் திரும்பப் பெற்று முழு மனிதர்களாக வாழ வேண்டுமானால் மாற்றுரை நம்பிப் பயனில்லை. கடந்த கால நிகழ்ச்சிகள் இந்த உண்மையைப் பட்டவர்த்தனமாக உணர்த்துகின்றன. சில சலுகைகளை நம்பி எமது உரிமைப் போராட்டத்தை தளரவிட்டால் இனத்தின் அழிவு தவிர்க்க முடியாததாகிவிடும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் சலுகைகளுக்கும் சிலர் உரிமை கொண்டாட முனைகின்றார்கள். மேலும் வாக்குறுதிகளை நம்பி தமிழ் பேசுமினம் எத்தனை காலம்தான் வாழமுடியும்? நிலையான பாதுகாப்புக்கு வழி தேடாதவரை இனத்தைச் சூழ்ந்திருக்கும் அபாயம் நீங்காது.

கூட்டரசாங்கம் ஏற்பட்டதனால் தமிழ்பேசும் மக்களுக்கு குறிப்பிடத்தக்க சலுகைகள் கிடைத்துவிடும் என்று பலர் கருதினார்கள். ஆனால் கூட்டரசாங்கம் ஏற்பட்ட உடனேயே இந்த நம்பிக்கையில் மண் விழுந்து விட்டது. மொழிப்பிரச்சினை சம்பந்தமாகவும், சிங்களத் தேர்ச்சியில்லாத காரணத்துக்காக கட்டாய ஓய்வுக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டதை நீக்கு முகமாகவும் கூட்டரசாங்கத்தின் மேலிடத்தில் சிலரை தமிழ் தலைவர்கள் அணுகியும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

யூன் மாதம் 20, 21-ம் தேதிகளில் திருமலையில் கூடிய தமிழரசுக்கட்சிச் செயற்குழு தீட்டிய தீர்மானத்தைக் கண்ணுற்றதும் தான் கூட்டரசாங்கம் சிறிது அசைந்துகொடுத்தது. தனது மொழிக்கொள்கை அமுலில் ஓரளவு தளர்ச்சியைக் காட்ட முனைந்திருக்கிறது.

மாவட்டசபைகள் மசோதா கொண்டுவரப் போவதாகவும், தமிழுக்கு ஓரளவு உரிமைகள் வழங்கப் போவதாகவும், சிங்களத் தேர்ச்சி பெறாத அரசாங்க ஊழியர்களுக்கு விடுத்த கட்டாய ஓய்வு உத்தரவுகளைத் தற்காலிகமாக நிறுத்தப் போவதாகவும் ஒன்றன் பின் ஒன்றாக அறிக்கைகளை விடுத்துவருகிறது.

கட்டாய ஓய்வுக் கட்டளைகளை ஒருவருடம் பிற்போட்டுள்ளமைக்கு பலதரப்பட்ட காரணங்கள் கூறப்படுகின்றன.

கோடீசுவரன் வழக்கில் அரசாங்கத்துக்கு தோல்வி ஏற்பட்டமையினால் அரசாங்கம் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்திருக்கிறது. இந்த அப்பீலின் முடிவைப் பார்த்து அதற்கேற்ப தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும் அரசாங்கம் கருதியிருக்கலாம்.

ஆகவே சிங்களத் தேர்ச்சி பெறாத தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கம் நிரந்தரமான சலுகை வழங்கிவிட்டது என்று எண்ணிவிட முடியாது. இந்த முடிவு தற்காலீகமானதேயாகும்.

கோடீசுவரன் வழக்குத் தீர்ப்பாலும் தமிழரசுக்கட்சியின் திருமலைத் தீர்மானத்தாலும் ஏற்பட்ட நிர்ப்பந்தமே அரசாங்கத்தின் இன்றைய போக்குக்குக் காரணமேயன்றி கூட்டரசாங்கம் ஏற்பட்டமையினால் பிறந்துள்ளது என்று எவரும் கருதிவிட முடியாது.

அத்துடன் பாராளுமன்றத்தின் ஆயுளைக்கூட்டுவதற்குரிய மூன்றில் இரண்டு வாக்குகளைப் பெறுவதற்குத் தமிழரசுக் கட்சியினரின்

சுதந்திரன் அரசியல் நிருபர்

ஆதரவைத் திரட்டுவதற்கும் அரசாங்கம் இச்சலுகைகளை வழங்க உத்தேசித்திருக்கிறது என்றும் மற்றோர் செய்தி கூறுகிறது.

மொத்தத்தில் இச்சலுகை வழங்கும் பிரச்சினையில் ஓர் அந்தரங்கத் திட்டம் தொங்கி நிற்கிறது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

கடந்த 28—6—64 சுதந்திரன் இதழ் முதற் பக்கத் தலைப்புச் செய்தியிலேயே மேற்படி கூற்றினையிட்டுச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

'தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையைக் கோரும் பொருட்டுத் தங்கள் பாராளுமன்ற ஸ்தானங்களைத் துறக்கத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் நிர்மானித்ததைத் தொடர்ந்து ஆளும் கட்சிக்குள் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

...............................

'தமிழ் பேசும் மக்கள் தலைவர்களை ஓரளவாவது சாந்தப் படுத்த வேண்டும் என்றும், அதற்கான வழிவகைகளை சிம்மாசனப் பிரசங்கத்தில் சேர்த்துவிட வேண்டும் என்றும் ஒரு சாரார் கருத்து வெளியிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.'

என்று குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழரசுக் கட்சி தொடர்ந்து நடத்தும் எதிர்ப்புக் கிளர்ச்சிதான், அரசாங்கம் விட்டுக்கொடுப்பதற்குக் காரணமாகும். எதிர்ப்பைத் தொடர்ந்து நடத்த வேண்டும். இல்லையேல் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொள்ளும்.

### மீண்டும் சிங்களக் காசோலை

கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கான மாத வேதனத்துக்குரிய காசோலைகளை கடந்த சனவரி மாதத்தில் சிங்களத்தில் வழங்கியது கிழக்குப் பிராந்திய வித்தியாதிகாரியின் அலுவலகம். தமிழரசுக் கட்சியின் தீவிர எதிர்ப்பினாலும் ஆசிரிய சமூகத்தின் ஒன்று திரண்ட போராட்டத்தினாலும் இத் திட்டம் வாபசானது. வழமைபோல் ஆங்கிலத்திலேயே காசோலைகள் கொடுக்கப்பட்டன.

கல்வித் திணைக்களத்திலுள்ள சில சிங்கள வெறியர்களின் தூண்டுதல் காரணமாக மீண்டும் சிங்களக் காசோலைகள் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம், தமிழரசுத் தந்தை செல்வநாயகம் ஆகியோரின் எதிர்ப்பினால் சிங்களக் காசோலை வழங்கும் திட்டம் கைவிடப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. தமிழ் பேசும் மக்கள் சதா விழிப்புடன் இருத்தல் வேண்டும். சிறிது கண் அயர்ந்தாலும் மூன்றாவது முறையாகவும் சிங்களக் காசோலை வந்துவிடுமென எச்சரிக்கின்றோம்.

வரையறுக்கப்பட்ட திட்டவட்டமான சட்ட முறைப் பாதுகாப்பு தமிழ் பேசும் இனத்துக்கு அளிக்கப்படாத பட்சத்தில் பெரும்பான்மை இனம் சகல துறைகளிலும் தனது கருத்தையும் கொள்கைகளையும் அடிக்கடி வலுக்கட்டாயமாகத் திணிக்கவே முற்படும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

## தாளாலையில் மொழி வழித் தொழிற்சங்கப் போராட்டம்

வாழைச்சேனைத் தாளாலைக் கூட்டரவைச் சேர்ந்த ஊழியர்கள் நடாத்திய வேலைநிறுத்தம் பற்றியும், அவ் வேலை நிறுத்தத்தை முறியடிக்க நிர்வாகமும், சீனச் சார்புடைய கொம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரமுகர்களும் எடுத்த முயற்சி பற்றியும் கடந்தவாரம் இப் பகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

தொழிலாளர்களின் கோரிக்கைகளை மத்தியஸ்த சபைக்கு விட நிர்வாகம் இணங்கியதைத்தொடர்ந்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. ஆனால் நிர்வாகம் தனது தோல்வியை மறைப்பதற்காகப்போலும் முப்பது நாளாந்த தற்காலிக வேலையாட்களுக்கு வேலைகொடுக்க மறுத்ததுடன், தற்காலிக வேலையாட்கள் வேலைநிறுத்தத்தில் பங்குகொள்ளக் கூடாது என்றும் வீம்பு பேசியது.

நிர்வாகத்தின் செயலைக் கண்டித்து மீண்டும் மொழி வழித் தொழிற்சங்கமான 'அரசாங்கக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்தின்' தலைமையில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. நிர்வாகம் பணிந்தது. முப்பது நாளாந்த தற்காலிகக் கூலியாட்களுக்கு மீண்டும் வேலை கிடைத்தது.

அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் காற்சட்டை அணிந்தவர்கள் சங்கம் என்று கூறிய கொம்யூனிஸ்டுத் தொழிற்சங்கவாதிகள் வாயடைத்தனர். வேலை நிறுத்தத்தை முன்னின்று நடாத்திய திரு. செல்வரத்தினம் தாளாலையில் உயர்ந்த

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாய ஒய்வு

# கட்டளை வாபசானது பற்றி அறிவிக்கவில்லை

## மொழிக் கொள்கையால் வேலை இழந்தோர் கதி என்ன?

பொதுசேவை ஆணைக்குழு தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கட்டாய ஓய்வு அறிவித்தல்களை வாபஸ்பெற வேண்டுமென்று அறிவித்திருந்தபோதிலும், கட்டாய ஓய்வு அறிவித்தலின்மூலம் வேலையிலிருந்து விலகிய அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இதுவரை எத்தகைய அறிவித்தல்களும் கொடுக்கப்படவில்லையாம். இது பற்றி அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீசுவரனை நமது நிருபர் கேட்டபொழுது 'கட்டாய ஓய்வு அறிவித்தல்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளன என்பதைப் பத்திரிகை மூலமே அறிந்துள்ளோம். இதுவரை நமது சங்க உறுப்பினர்களுக்கு எத்தகைய அறிவித்தல்களும் வழங்கப்படவில்லை. சங்க உறுப்பினர்கள் மூவர் கடந்த ஒருமாத காலமாகக்கட்டாயஓய்வு அறிவித்தல்மூலம் வேலைகளை இழந்துள்ளனர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்பேசும் அரசாங்க பொது ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கட்டாய ஓய்வு அறிவித்தலை, நிதிமந்திரி டாக்டர் பெரேரா தனது முயற்சியால் வாபஸ் பெறச் செய்துவிட்டார் என்ற பிரசாரத்தை ஒரு சிலர் யாழ்ப்பாணத்தில் தொடங்கியுள்ளதாக நமது நிருபர் அறிவித்துள்ளார். ஆனால் நிதிமந்திரி டாக்டர் பெரேரா அவர்களே கட்டாய ஓய்வு அறிவித்தல் வாபஸ் பெறப்பட்டதற்கு தானோ மந்திரிசபையோ பொறுப்பல்ல என்று பாராளுமன்றத்தில் பட்டவர்த்தனமாகக் கூறியுள்ளார்.

வெலிமடைப் பிரதிநிதியின் கேள்விக்கு டாக்டர் பெரேரா கொடுத்தபதிலின் விபரம் வருமாறு:-

கோடீஸ்வரனின் வழக்குக்குப்பின் அரசாங்கம் சில சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. அரசாங்கம் அவ்வழக்கு தீர்ப்புக்கெதிராக அப்பீல் செய்துள்ளதுடன், அவ்விஷயத்தில் அட்டோர்னி—ஜெனரலின் ஆலோசனையையும் கேட்டுள்ளது. மொழிப் பிரச்சினையின் கீழ், பொதுச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்குக் கட்டாய ஓய்வு பிறப்பிக்கும் கட்டளை சட்டக் குறைபாடுள்ளதொன்று என்று அட்டோர்னி-ஜெனரல் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்விஷயத்தையொட்டி அட்டோர்னி-ஜெனரல் பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் அறிக்கையொன்று சமர்ப்பித்துள்ளாரெனவும், கட்டாய ஓய்வு உத்தரவுகளை வாபஸ்பெறுவது பொதுச்சேவை ஆணைக்குழுவின் வேலையேயன்றி, மொழிச் சட்டத்தை அமுல் செய்வதுபற்றிப் பரிசிலனை செய்ய நியமிக்கப்பட்ட மந்திரிசபை உப-குழுவின் வேலையல்ல என்றுர்.

மேலும் டாக்டர் பெரேரா வெலிமடைப் பிரதிநிதியின் மற்றுமொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் 'அரசாங்கத்தின் மொழிக்கொள்கையில் மாற்றம் எதுவும் நடைபெறவில்லை' என்று கூறினர்.

### கூட்டரசாங்கத்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வகுப்புவாத அடிப்படையில் இந்த நாடு செல்வதற்கான காரணம் இந்த நாட்டின் அர்த்தமற்ற அரசியலமைப்பே என்பது எமது கட்சியின் உறுதியான கருத்து. இந்த அரசியல் அமைப்பினுல் தமிழ் பேசும் இனம் அழிந்து பட வேண்டும் அல்லது இந்நாடு இரண்டாகத் துண்டிக்கப்பட வேண்டும். தேவையற்ற இவ்விரு நிகழ்ச்சிகளும் நடைபெறலாகாது என்பதற்காகவே எமது கட்சி சமஷ்டிக் கொள்கையினை வலியுறுத்தி வந்துள்ளது.

இந்த நாட்டை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைக்கான ஜனநாயக, முற்போக்கான தீர்வு, வேற்றுமையில் ஒற்றுமை காண்பதும், சமஷ்டி மூலம் எதிர் எதிரான சக்திகளுக்கிடையே சமரசம் காண்பதுமேயாகும்.

(அடுத்த இதழில் முடியும்)

### தமிழரசுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டொரு நாட்களில் சமசமாஜக் கட்சி தனது அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்குமென்று தெரிகிறது. இக் கட்சி தேர்தலில் கொம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவையும் பெற்றுக் கொள்ளுமென்றும், கொம்யூனிஸ்ட் கட்சிக்குச் செல்வாக்குள்ள இடங்களில் மட்டும் கொம்யூனிஸ்ட் அபேட்சகர்கள் நிறுத்தப்படுவார்களென்றும் அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

### 21 கோரிக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கைகளைக் காட்டி சமசமாஜக் கட்சி, சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தது. பிரதமரும் நிலையான அரசாங்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

21 கோரிக்கைகளை வைத்து நாடு பூராவும்நடைபெறவிருந்த பொது வேலை நிறுத்தம் இப்பொழுது தவிர்க்கப்பட்டு விட்டது. இது பிரதமருக்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றியாகும்.

### த. அ. கட்சியின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக் கட்சி மிகவும் கண்ணும் கருத்துமாக நடந்துகொள்ளும்' என்று தமிழரசுத் தலைவர் ஒருவர் நமது நிருபரிடம் கூறினர்.

பொதுத் தேர்தலை ஒத்தி வைப்பது சம்பந்தமாக தமிழரசுக்கட்சியின் கருத்து எவ்வாறு இருக்கும் என்று தமிழரசுத் தந்தையிடம் ஒரு பத்திரிகை நிருபர் கேட்டபோது தந்தை அவர்கள் தெரிவித்த கருத்தை இங்கே தருகிறோம்.

'பொதுத் தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சியை தமிழரசுக்கட்சி முழுமூச்சுடன் எதிர்த்தே தீரும். ஒவ்வொரு ஐந்து வருடமும் தங்கள்பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக வாக்காளனுக்கு வழங்கப்பட்டுள்ள ஜனநாயக உரிமையை மறுக்கும் நோக்கத்துக்கு, எங்கள் கட்சி அனுசரணையாக இருக்கமாட்டாது. இத்தகைய ஒரு செயகையில் ஈடுபடுவது ஜனநாயகத்துக்கு விரோதமானதாகும்.

### இருள் நீங்கி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யினராக இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களில் ஒரு பிரிவினரான முஸ்லிம்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்து காணப்படுகிறது.

'இருளைப் பிளந்து வரும் இரவி போல எம் பெருமானுர் காட்டிச் சென்ற முன்மாதிரிகள் நமக்கு இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் தான் மிகவும் இன்றியமையாததாகவிருக்கின்றன.

நபி (ஸல்) பெருமானுர் போதித்த சகிப்புத்தன்மை, தியாக உணர்ச்சி, அன்புடைமை ஆகியவற்றைக் கடைப்பிடித்து, இழந்த நம் உரிமைகளைப் பெற முஸ்லிம்கள் விழிப்புணர்ச்சியுடன் முயலவேண்டும்.

### எம் இனத்தின்......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பதவி வகிக்கும் பொறியியலாளர் —என்றுலும் சங்கத்தின் கோட்பாட்டை ஏற்று வேலைநிறுத்தத்தை நடாத்தியுள்ளார்.

மொழிவழித் தொழிற் சங்கங்கள் காற்சட்டை போட்டவர்களை நம்பிக் கட்டியெழுப்பப்பட்டதல்ல. தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள சகல தொழிலாளர்களையும் ஒரு அணியில் திரட்டி அவர்கள் உரிமைக்குப் போராடுவதுடன் இனத்தின் உரிமைக்கும் உழைக்கும் இயக்கமாகும். இந்த உண்மையைத் தாளாலை ஊழியர்கள் அண்மைக் காலங்களில் நடைபெற்ற சம்பவங்களின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

வாய்மொழி வகுப்புகள்

செப்டம்பர் 1ம் திகதி ஆரம்பமாகும் புதிய தவணைக்கான பிரவேசங்கள் இப்பொழுது ஏற்கப்படுகின்றன.

பின்வரும் வகுப்புகளுக்கு:

ஜி. ஸி. ஈ. சாதாரணம்
கலை, விஞ்ஞானம், வணிகம்—டிசம்பர் 1964

ஜி. ஸி. ஈ. உயர்தரம்—
கலை, விஞ்ஞானம்—டிசம்பர், 1965


ஜி. ஸி. ஈ. ஆரம்ப வகுப்பு (பிரெப்)
விஞ்ஞானம்

வர்த்தக வகுப்புகள்:
தட்டெழுத்து சுருக்கெழுத்து கணக்குப்பதிவியல், வர்த்தகம் முதலிய பாடங்கள்—
ஆங்கிலம்—தமிழ் மூலம்

கடந்த பரீட்சைகளில் எமது மாணவர் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றி பெற்றுள்ளனர்.

விபரங்களுக்கு

யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,
நெல்லியடி — கரவெட்டி
கிளை:
107, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவதிறு

பாண்டியூரன்

‘சே.........ர் வணக்கம்’

மலையகத்துப் பள்ளிச் சிறுவர்கள் தங்களுக்கே உரித்தான பாணியில் பாடசாலை விட்டதும் தம் ஆசிரியருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, கார்த்திகை மாதத்தில் ஒதுங்கும் வண்ணாத்திப் பூச்சிகளைப் போல் பறந்து சென்றனர். ஆசிரியரும், மாணவருக்குப் பதில் வணக்கம் கூறி வழியனுப்பிவிட்டு உபகரணங்களை ஒழுங்கு படுத்துவதில் தம் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

ஐந்தாம் வகுப்பு வரையுள்ள அப் பாடசாலையில் தலைமையாசிரியர், உதவியாசிரியர் என்ற சகல பொறுப்புகளையும் தாங்கும் தனி ஆசிரியராகச் ‘சபா’ கடமையாற்றுவதால் தம் கையாலேயே சகல வேலைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்.

பிள்ளைகள் கலைந்து சென்றதும், ஈக்கள் கலைந்த தேன் கூட்டுக்கு ஒப்பாகப் பாடசாலை வெறிச்சிட்டுக் கிடந்தது. பிள்ளைகள் என்ற தேனீக்கள் இல்லாவிட்டால் பாடசாலை பாடசாலையாக இல்லாமல் வெறும் சுடலையாகத்தான் இருக்கும்! அதிலும் அப்பாடசாலையில் தனிமையாக வாழும் ‘சபா’வைப் பொறுத்தமட்டில் அது நூற்றுக்கு நூறு பொருத்தம்.

மாடி வீட்டிலே, முட்டி வயிறு புடைக்கும் அளவுக்கு உண்டு உறங்கும் சீமானுக்கு முகத்தாட்சண்ய விருந்து கொடுத்துக் கௌரவிக்கும் போது, உணவைக் காணாத ஏழை எச்சில் இலையைக் கண்டு தன் ஏழையுள்ளம் நிறைவது போல் இன்றைய நிலையில் தோட்டப் பாடசாலைகள்! பிள்ளைகளைப் பட்டிகளாக நினைத்துப் பாடசாலைகள் கொட்டில்களாகவே நிருவகிக்கப்படுகின்றன. ‘தோட்டக் கூலிகளின் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைதானே, எப்படிப் போனால்தான் எங்களுக்கு என்ன’ என்று கேட்பதற்குச் சமமாக இந்தப் பாடசாலையில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்குப் பொதுவில் ஒரு ஆசிரியர்! அவ்வாசிரியருக்கும் ஒரு வகுப்புக்கும் அளவான எண்ணிக்கையுள்ள தளவாடங்கள்! ‘சிமேந்து’ போடப்படாத ‘கிறவல்’ புழுதியேறிய தரை! இவற்றைக் கொண்ட ஒரு ‘கொட்டில்’ சாம்ராச்சியத்துக்கே ‘சபா’ ஏகச் சக்கரவர்த்தியாக இருந்து நிருவகித்துக் கொண்டிருந்தான். கடமைகளைப் பொறுத்தமட்டில் ‘சபா’ தன் மாணவக் குஞ்சுகளுக்கு இரையூட்டும் ஓர் தாய்க் கோழி!

●

‘சார்... உங்கள, அப்பா ‘ஸ்கூல்’ விட்டதும் அந்திக்கு வீட்டுக்கு வந்திட்டுப் போகச் சொன்னுங்க.’

பாடசாலை விட்டுப் பறந்து சென்ற சிறுவன் ‘சிங்காரம்’ பாதி வழியில் திரும்பி வந்து சொல்லிக் கொண்டு நின்றான். பாடசாலை விட்டதும் வீடு செல்ல வேண்டுமென்றிருந்த உந்தலினால் சிறுவன் ஏற்கெனவே சொர்ல மறந்திருந்தான் போலும். ‘யாரது... ‘கனகரெத்தினம்’ கங்காணியா வரச் சொன்னார்?’

‘ஆமாங்க...சார்’

‘எதற்காக வரச் சொன்னார் சிங்காரம்?’

‘தெரியாதுங்க சார், தவறுமவரச் சொன்னுங்க’

‘அந்திக்கு நேரமில்லை, சனிக்கிழமை வருவதாகச் சொல்’

‘சரிங்க சார்’ சிங்காரம் பறந்து சென்றான்;

‘முதலாளி எதற்காக வரச் சொன்னார்? இந்தக் கொழும்புகாமத்துக்கு வந்ததும் இரண்டு மாதங்களுக்கு மேலாகப் போகிறது; இவ்வளவு காலமும் இல்லாமல் இன்று...ஒரு வேளை தன் பிள்ளைகளுக்கு ஒய்வு நேரப் பாடம் சொல்லித் தர வேண்டுமென்று கேட்கப் போகிறாரோ? எதற்கும் சனிக்கிழமை பார்ப்போம்’ ‘சபா’வின் எண்ணச் சுழல் சகசமாகவே விரிந்தது. புத்தகங்களையெல்லாம் ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு அடுப்பங்கரைக்குச் சென்றார் ஆசிரியர். சமையல் ஆரம்பமாகிற்று. பருப்பும் கிழங்கும் சேர்ந்த நளபாகம் தயாரிப்பதிலே ‘சபா’ வன்மையாகத் தன் ஒய்வைச் செலவிடுவான். ஒரு சில வேளைகளில் பக்கத்து மாணவர்கள் செய்யும் உதவியால் சமையல் வேலைகள் சுலபமாக முடிந்துவிடும். அனேகமாகச் ‘சிறு சோறு கறி’ விளையாட்டாகவே சமையல் செய்து சிறுவர்களோடு உண்டு மகிழ்வதால் ‘சபா’வுக்குச் சிறு திருப்தி.

மலையகத்துக் குழந்தைகளின் சிறந்த பண்பு ‘சபா’வைப் பெரிதும் கவர்ந்தது. தனித்த ஒரு ஆசிரியனை இப் பாடசாலையில் இருப்பதை மறந்து ‘பாலர்களரி’யில் பயிலும் பாலகனாகவே ‘சபா’ மாறி விட்டான். மருதம் சூழ்ந்த மட்டக்களப்பு மாதாவின் ‘பாண்டிருப்பு’ப் பால் மண்ணிலே நடந்த பாதங்கள் ஆசிரிய சேவையென்னும் புனிதப் பணியின் கட்டளையால் மூன்னூறு மைல்களுக்கப்பாலுள்ள இரத்தினபுரிக் குறிஞ்சி நாட்டுக் ‘கொழும்புகாம’க் குன்றுகளில் ஊரும் உழைப்பாளி எறும்புக் கூட்டங்களோடு தானும் ஊர்ந்து திரியக் கூடியதாகக் கிடைத்த வாய்ப்பைப் பெருமையோடு விரும்பினான் ‘சபா’.



‘முதலாளி எதற்கு வரச் சொன்னார்?’ ஆமாம் ‘கனகரெத்தினம்’ ஒரு முதலாளிதான். தோட்டக் கங்காணியாக இருப்பதோடு கடை முதலாளியாகவும் கனகரெத்தினம் இருந்ததால் ஊரோடு ஊராகச் சபாவும் ‘முதலாளி’ என்றே அவரைத் தம்முள் கொண்டான்.

●

‘மாஸ்டர் ஐயா, வாங்க வாங்க வாங்க...... உட்காருங்க, என்ன ஐயா பாடசாலையை விட்டு வெளியே வரமாட்டங்கிறீங்க, எப்படித்தான் பாடசாலையோட அடஞ்சி கெடக்கிறீங்க, ஒய்வு இருக்கிறப்போ இந்தப் பக்கம் வந்துபோகக் கூடாதுங்களா?’ கனகரெத்தினம் அடுக்கிக்கொண்டே ‘காப்பிக்கு’ ‘ஆடர்’ போட்டுவிட்டார்.

அப்பப்பா! கேள்விக் கணைகள் ‘கனகரெத்தினத்தின்’ ‘அன்பு’ வில்லில் இருந்து சரமாரியாகப் பொழிந்து தள்ளின. இதில் எதற்கு விடை சொல்லுவது? நேர்முகப் பரீட்சை நடைபெறுவது போன்ற பிரமை சபாவுக்கு.

தனிமை, அடைந்து கிடத்தல், ஒய்வு, என்பன ஒரு ஆசிரியருக்கா? கனகரெத்தினத்துக்கு ஒரு ஆசிரியரின் வாழ்க்கை பற்றி எங்கே தெரியப் போகிறது; ஒரு சில ஆசிரியர்களுக்கே சாயாகத் தெரியாதிருக்கும் போது! நல்ல ஆசிரியர் சமூகத்தில் தேனுக இருக்கும் போது அவருக்குத் தனிமையேது? ஒய்வேது? சுறு சுறுப்பும் ஆர்வமும் பற்றும் உள்ள இளைஞன சபா இதற்கு எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்? மௌனத்தைத் தவிர அந்த இடத்தில் ஒன்றம் பேச முடியாதவகையில் கேள்விகளை அடுக்கினார் தேயிலைச் செடிகளை மலையில் அடுக்கியுள்ளது போல.

‘சாப்பாடெல்லாம் பாடசாலையிலேயே வைச்சிருக்கீங்களாம்; நெசந்தானு மாஸ்டர் ஐயா? நம்ம தம்பி சிங்காரம் ஓயாமச் சொல்லி வருந்திக்கிட்டேயிருப்பான்.’ மீண்டும் தொடர்ந்தார் ‘கனகரெத்தினம்.’

‘எனக்குக் கடையிலே சாப்பிடுவது பிடிக்காது; நம்ம கையாலேயே சமைத்துச் சாப்பிடுவது போல் இருக்காதுதானே; அதனுலே தான் பாடசாலையிலேயே சமைத்துச் சாப்பிடுகிறேன்.’

‘எதுக்காக மாஸ்டர் ஐயா கஷ்டப்படுறீங்க; நம்ம வீடு தானே கிட்டத்தில இருக்கவே, ஆறு நூறு மைல் போகவேண்டியதில்லையே; கால் மைலுகூட இருக்காது இடைத்தூரம், நம்ம வீட்டுக்கு வந்து சாப்பிட்டுக் கொண்டு போகவேண்டியது தானே.’

‘எதற்காக உங்களுக்கு வீண் சிரமம். பிள்ளைகுட்டிக் காரர்களுக்கு நம்மால் மேலதிக கஷ்டம்...’

முடிக்க விட்டாரா எடுத்த பேச்சை.

‘ஐயையோ; எங்களுக்கு எதுவிதகஷ்டமும் இல்லீங்க; அதைப்பற்றி யோசிக்காம நம்ம வீட்டிலேயே சாப்பாட்டை வைச்சுக்குங்க ஐயா.’

சபாவுக்கு மறுத்துக்கூற முடியாத அளவுக்கு கனகரெத்தினத்தின் மனைவிகூட தன் மனைத்தக்கமாண்பைக் காட்டிவிட்டார்.

‘நீங்க அதுபற்றி யோசியாதங்கையா; முதல்ல வந்த மாஸ்டர்மாரெல்லாம் குடும்பக்காரராகக் கொழந்தக் குட்டிங்களோட வந்து இருந்துவிட்டுப் போனுங்க; நீங்க தனியாள்தானே, ஒரு ஆளுக்காகச் சமைச்சிச் சாப்பிடனுமா? எங்க கொழந்தக் குட்டிங்களப்போல எங்களோடே சாப்பாட்ட வைச்சுக்குங்க ஐயா. இந்தச் சின்ன வயசில சமைக்கவும் சாப்பிடவும் கஷ்டம்தானுங்களே.’ தாய்மையின் பிரதிபலிப்புப் பளிச்சிட்டது.

உள்ளூரச் சபாவுக்கு விருப்பம்தான். ஏற்கெனவே இப்படி ஒரு வசதி கிடைக்காமல் தானே ஆசிரிய பயிற்சியை முடித்தும் ஆக்கும் பயிற்சியை முடியாத குறையை இப்பாடசாலைக்கு வந்து நிறைவேற்றிக் கொண்டிருந்தான். இவர்களின் எதிர்பாராத இந்தவேண்டுகோள் சமையற்கலைப் பயிற்சியில் சித்தியடைந்த அசட்டுத் திருப்தியைக் கொடுத்தது.

கதைபலகோணங்களிலும் மலைநாட்டுப் பாதைபோல நெளிந்து வளைந்துகொண்டிருக்கும்போது இடையிலே எழில்மிக்க இயற்கை நீர்வீழ்ச்சி தென்பட்டது போன்ற ஓர் இன்பத்தோற்றம். கையிலே ‘காப்பிக்’ கிண்ணங்களுள்ள தட்டுடன் வந்தாள் ஒரு கன்னி. ‘யாரிது? நம்ம...சீச்சீ...; கங்காணியின் மகளாகத்தானிருக்கும்.’

அலை அலையான சுருள்களைக்கொண்டு அலாதியாகத் தொங்கும் கருநாகம் போன்ற இரட்டைப் பின்னல்; பாவைப் பிள்ளைக்குச் சேலை உடுத்தியது போல் இடையில்கட்டியபாவாடையுடன் கூடிய அரைத் தாவணி; அதைப் பீறி நிற்கும் பெண்மைப் பொலிவு; பால் நிலா முகத்திலே பதிந்த கீற்றுப் பவளத்தில் நெளியும் தேன்புன்னகை; அளவுக்கு மிஞ்சிய மதுவை அருந்தியபோதையில் இளஞ்சிவப்பு ரோஜாமலர்த் தட்டில் மயங்கியுருளும் வண்டு விழி...இப்படியான ஒரு இளம் கன்னி இந்த வீட்டில் இருப்பாளென்று ‘சபா’ கனவிலும் கருதவில்லை.

எதிரிலே தட்டத்துடன் வந்த அந்த மலை வாழைக் கன்று தன் குருத்துக்கையால் தட்டை அவன் பக்கம் நீட்டியது. வெண்கலக் கிண்ணத்தைக் குனிந்தபடியே தூக்கிய சபாவின் கண்களில் அந்தக்கிண்ணத்தில் விழுந்த மின் ஒளி நிமிர்ந்து கிண்ணத்தைத் தன்பக்கம் எடுப்பதற்குள் மறைந்துவிட்டது.

‘கமலா’—இதுதான் அவள் பெயர். கண்ணாடிப் பாவையின் கொழு கொழுப்புள்ள அக் கன்னி சபாவுடன் காலவரையில் சரளமாகப் பழகினாள். கமலா சபாவிடம் கற்காவிட்டாலும் பொதுப் பண்பின் பிரதிபலிப்பால் அவனைச் ‘சார்’ என்றுதான் அழைப்பாள். அவனுக்குச் சாப்பாடு ஒழுங்கு செய்வது கூடக் கமலாவுக்கு ஒரு பாக்கியம் பெற்ற கடமையாகவே தென்பட்டது.

‘என்ன’புள்ள பூவாயி, மின்னமுளங்காம நம்ம கங்காணி மகளுக்குக் கல்யாணமாமே.’

‘யம்மா பொட்டு; அந்தக் கல்யாணத்தைப் பற்றித் தெரியாமத்தான் கெடக்கு; பொனழக்க வந்த இடத்தில பொட்டி அவிட்டவர்தானே மாப்புள.’

‘ஆமா ஆமா; மதிப்புள்ள மாப்புளவெண்டாச்சொந்த ஊரில வெலப்பட்டிருக்க மாட்டாரா என்ன?’

‘தந்திரமான மனுசனெண்ட படியாத்தானே ஒட்டாண்டியாத் திரிஞ்ச கங்காணி கடமொதலாளியானு? மாப்புள புடிச்சது தானு கஷ்டம்.’

அயல்வீட்டு அழுக்குகளை அலசும் தெருவோடிச் சில்லறைகளின் அர்ச்சனை. தன் முதுகு தெரியாமல் இருக்கும் போது பிறர் பற்றிப்பேசும் சமூகச் சேற்றின் நாற்றம்.

‘கனகரெத்தினத்தின்’ மீது இந்தக் கொள்ளிக் கண்கள் எரிவதற்கு அவரது முன்னேற்றம்தான் காரணம். இந்தியாவிலிருந்து வந்ததும் காலச்சுழற்சியின் வேகத்தில் வறுமைச் சேற்றில் புதைந்த வாழ்க்கைச் சில்லை முயற்சியென்னும் சக்தியால் முண்டியல் போட்டுக் கொணர்ந்து தார்வீதியில் ஏற்றிய பெருமைக்குரியவர் அவர்.

பழத்தோட்டத்துக்கு இட்ட எரு பழத்தைச் சுவைக்கமுடியாதது போல, தோட்டத்துரைக்கு உழைத்து உரம் கொடுக்கும் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்தான் அவர். ஆனல், முயற்சி முன்னேற்றியது.

பாலர் வகுப்புப் பிள்ளை பட்டப்படிப்புக்கு உயர்வது

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெட்டி தொலைந்ததால் ஏற்பட்ட பெரிய நன்மை!

## டைரக்டர் சாந்தாராமை காண முடிந்தது

'ஸார்!' என்று நம்மை அழைத்த அந்தப் பொலீஸ் இன்ஸ்பெக்டரின் முகத்தைப் பரிதாபத்தோடு ஏறெடுத்துப் பார்க்கின்ருேம் நாம்.

"ஸார்! தொலைந்து போன உங்கள் பெட்டியை மீண்டும் தேடி எடுப்பதென்பது இந்த யுகத்தில் நடக்கின்ற காரியமில்லை. என்ருலும் உங்கள் திருப்திக்காக, இந்த மதுரையை அடுத்துள்ள எல்லாப் பொலீஸ் நிலையங்களுக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றேன். கிடைத்தால் உங்கள் அதிர்ஷ்டம்!" என்று சொல்லி வழியனுப்பி வைத்தார் அந்த இன்ஸ்பெக்டர்.

சோகமே உருவாக ஸ்டேஷனிலிருந்து வெளியேறிய நாம், கடைசி முயற்சியாக, நாம் தங்கியிருந்த குன்னத்தூர் சத்திரத்தையும் ஒரு தரம் நோட்டம் விடுவதென்ற முடிவுடன் சத்திரத்தை நோக்கி நடைபோடுகின்ருேம். ஒரு தடவைக்குப் பல தடவைகளாக மதுரை

'மேக்கப்' புடன் இருந்த சாந்தாராம் ஒரு தடவை ஜனங்களை விலக்கிக் கொண்டு காமிரா 'கோணத்தை'ச் சரி பண்ணுகின்ருர். பிறகு படப்பிடிப்புக்குத் தமது அனுமதியைக் கொடுத்து விட்டு, 'மேக்கப்' புடனிருந்த ஒரு வாலிப நடிகரோடு 'காமிரா' முன்னுல் வந்து நிற்கின்ருர்.

நவம்


இருவரும் ஏதோ இந்தியில் பேசிக் கொண்டு, ஆலய வாயினுள் நுழைகின்றனர். அப்படி நுழையும் போது அந்த வாலிபன், வானேங்கி வனப்புடன் திகழ்ந்த மீனுக்ஷி கோபுரத்தை அந்தப் பெரியவருக்கு (சாந்தாராம்) காண்பித்த படியே சென்ருன். அந்தப் பெரியவரும் வியப்பு மேலிட அந்த அழகான கோபுரத்தைப் பார்த்து அதிசயித்தபடியே சென்ருர்......

வைத்தான், நாம் 'தொலைத்த' அந்தப் பெட்டியை!

உணர்ச்சி வசப்பட்ட நாம் அந்தக் காவலாளியைக் கட்டித்தழுவி நம் அன்பைத் தெரிவித்துக் கொள்கின்ருேம். கண்களில் நீரே துளித்துவிடுகின்றது! 'இப்படியும் ஒரு நேர்மையா?' என்று வியந்து கொண்டு பெட்டியைக் கையில் எடுக்கின்ருேம்.

'சத்திரமும், சத்திர நிர்வாகமும் நீடூழி வாழ்க! இந்த மதுரை நகருக்கு மதுரை மீனுக்ஷி கோபுரங்கள் மட்டும் பெருமையல்ல, இந்தக் குன்னத்தூர் சத்திரமும் தான்' என்று சான்றிதழ் வழங்கிவிட்டு, கன்னியாகுமரியில் நம் பிரயாணக் கோஷ்டியைப் பிடிப்பதற்காக, மதுரை பஸ் நிலையம் வருகின்ருேம். அங்கே 'ரெடி'யாக நின்ற நாகர்கோயில் 'ஸ்டேட் எக்ஸ்பிர'ஸில் சௌகரியமாகப் போய் அமர்ந்து கொள்ளுகின்ருேம்.

மத்தியானம் ஒரு மணி சொச்சத்துக்குப் புறப்பட்ட அந்த 'எக்ஸ்பிரஸ்' பல நூற்றுக் கணக்கான மைல்களைத் தாண்டி, வழியில், நம் பாரதி பிறந்த ஊரான எட்டய




மீனுக்ஷியை வேண்டிக் கொண்டு நடந்தால், மீனுக்ஷி கோயிலின் மேலக் கோபுரம் பக்கமாக ஜனங்கள் கும்பலாகத் திரண்டு நிற்பதும் அவர்களை விலக்கியபடி பொலீஸாரும், தொண்டர்களும் மும்முரமாக ஈடுபடுவதும் தெரிகின்றது.

'தொலைந்த நம் பெட்டியைத்தான் பொலீஸார் கையுமெய்யுமாகப் பிடித்து விட்டார்களோ?' என்று ஐயுற்ற வண்ணம் நாமும் சற்று முன்னேறுகின்ருேம்.

கும்பலை நெருங்கியதும் தான் விஷயம் புரிகின்றது. நாம் பெட்டியைத் தொலைத்து, அதனுல் மீண்டும் மதுரைக்கு வந்ததும் ஒரு வகையில் நல்லதாகவே போயிற்று என்று உணர்கிருேம்.

விஷயம் வேருென்றுமல்ல, பிரபல — வட இந்திய நடிகரும், தயாரிப்பாளரும், டைரக்டருமான சாந்தாராம் அவர்கள் தாம் புதியதாக எடுக்கும் இந்திப் படத்தின் 'ஷூட்டிங்கை' நடத்துவதற்காக இங்கு வந்திருந்தார். பெட்டி தொலைந்த கவலையையும் மறந்து சற்று நேரம் நாமும் அந்தப் படப்பிடிப்பில் கலந்து கொள்ளுகின்ருேம்.

மதுரை மீனுக்ஷி அம்மனின் மேலக் கோபுர வாயிலை நோக்கி "காமிரா" கண்ணை அகல விரித்துக்கொண்டிருக்கின்றது. காமிராக்காரரும் மற்றும் சில்லறை ஊழியர்களும் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

(14)

இதற்குள் 'கட்' என்று ஒரு சத்தம் கேட்டது. உடனே படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது. அதுவரை எடுத்த காட்சியில் ஒரு மகத்தான தவறு நடந்துவிட்டதாகவும், மீண்டும் அதே காட்சியைப் படமாக்கப்போவதாகவும் பேச்சு அடிபட்டது.

அந்த 'மகத்தான' தவறு வேருென்றுமல்ல; சாந்தாராமை ஆலயத்துள் அழைத்துச் சென்ற அந்த வாலிபர் காலில் இருந்த தமது செருப்பைக் கழற்ருமல் இருந்து விட்டதுதான் அந்த மகத்தான தவறு! 'சாந்தாராமா கொக்கா?' என்று வியந்து கொண்டு, மேலும் நின்று படப்பிடிப்பைப் பார்க்கப் பொறுமையில்லாமல், சத்திரத்தை நோக்கி நடையைக் கட்டுகின்ருேம்.

சத்திரம் வந்ததும் நம் சோர்வெல்லாம் போக்கடிக்கக் கூடிய ஒரு தகவலை சத்திரக் காவலாளி தெரியப்படுத்தினுன்.

'ஸார்! இப்படியா அஜாக்கிரதையாக இருப்பார்கள்? அப்படித்தான் 'ஜட்கா' வண்டியில் அவசரம் அவசரமாகச் சாமான்களை ஏற்றிக் கொண்டு பறந்தீர்களே! சுற்றி வளைத்து ஒரு நோட்டம் பார்த்து, எல்லாச் சாமான்களையும் ஏற்றி விட்டோமா' என்று 'செக்' பண்ணக் கூடாது?' என்று அன்பாகக் கடிந்து கொண்டு, நம்முன்னுல், 'தொப்'பென்று

புரம், மற்றும் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனுரின் ஊரான தூத்துக்குடி முதலான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஊர்களுக்கூடாக ஓடி, வள்ளியூரைக் கடந்து இரவு ஏழு மணி சொச்சத்துக்கு நம் தலைவாணர் என். எஸ். கே. பிறந்த இடமான நாகர்கோயிலில் கொண்டுவந்து தள்ளி விட்டது.

நாகர் கோயிலுக்கும், கன்னியா குமரிக்கும் இடையில் இருந்த பிரசித்தி பெற்ற சுசீந்திரத்தில் அன்று ஏதோ விசேஷமானபடியால், பஸ்ஸில் 'மசமச' என்ற நெருக்கம். அந்த நெருக்கத்தில் 'பிழி' பட்டுக் கொண்டு, நம்முடைய இந்தப் பிரயாணக் கட்டுரையின் கதாநாயகியான குமரி முனையில் இரவு 9 மணி மட்டில் வந்து காலூன்றினேம். என்ன நினைக்கின்றீர்கள்? அடுத்த நாள் நம்மை வரவேற்க தமிழ் நாட்டு பொலிஸ் மந்திரி கனம் கக்கன் அவர்களே வந்து விட்டாரே!......

வளரும்

### ஒரு மாதத்தில் 10 இலட்சம்

திருப்பதி ஏழுமலையானுக்கு யூன் மாதத்தில் மட்டும் உண்டியலின் மூலமும் [illegible] ரூ. 10,39,460.15 வருமானம் [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் குரல்

### இ. போ. சவில் தமிழ்

இலங்கை போக்குவரத்து சபையின் சகல விளம்பரங்களும், பெயர்ப்பலகைகளும் மூன்று மொழிகளிலும் இருக்கும் என இ. போ. ச. ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே, அப்போதிருந்த போக்குவரத்து அமைச்சர் கூறியிருந்தார். அக்கொள்கை நடைமுறையில் கடைப்பிடிக்கப் பட்டுவந்தபோதிலும், பல தடவைகளில் பல இடங்களில் அது மீறப்பட்டு தனிச் சிங்களத்தில் அல்லது சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டு தமிழ் புறக்கணிக்கப்பட்டு வந்ததைப் பலரும் அப்போதைக்கப்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது போக்குவரத்து அமைச்சராயிருப்பவர் 'தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்துக் கொடுப்போம்' என்று முழங்கித்திரிந்த லங்கா சமசமாஜக்கட்சி உறுப்பினராவர். அவர் பதவிக்கு வந்ததும் முதன் முதலாகக் கடந்த 5-7-64ல் கொழும்பு நகரில் நான்கு புதிய பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனுல் அவற்றுக்கான சுவரொட்டி விளம்பரங்கள், பஸ்களில் ஒட்டப்பட்ட பாதை விபர விளம்பரங்கள், மற்றும் அவை சம்பந்தமாக ஒட்டப்பட்ட சகல விளம்பரங்களும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே பிரசுரித்து ஒட்டப்பட்டிருந்தன. புதிய சேவைகளின் சில பஸ் பெயர்ப் பலகைகள் கூட அப்படியேதான் (சிங்களத்திலும் ஆங்கிலத்திலும்) இருக்கின்றன.

ஒன்று, இ. போ. ச. வின் அடிப்படைக் கொள்கைப்படி அவற்றில் தமிழும் இடம்பெற்றிருக்க வேண்டும்.

இரண்டு, கொழும்பு நகரில் போதியளவு தமிழ் பேசும் மக்களும் வாழ்கிருர்கள் என்பதன்படி அவற்றில் தமிழும் இடம்பெற்றிருக்க வேண்டும்.

மூன்று, 'தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்துக் கொடுப்போம்' என்ற ஒரு கட்சியைச் சேர்ந்தவர் மந்திரியாய்இருக்கிருர்என்றமுறையில் அவற்றில் தமிழும் இடம்பெற்றிருக்கவேண்டும்.

மேற்கூறிய மூன்று வழிகளாலும் நியாயம் இருக்கும் போது தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்ட காரணம் என்ன?...அரசாங்க மொழிக்கும் இ. போ. ச. விளம்பரங்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதை முன்னைய மந்திரியின் கொள்கை விளக்கமே காட்டும்.

சமசமாஜக்கட்சி மந்திரியின் நிர்வாகத்தில் நடந்த முதல் நிகழ்ச்சி என்பதைக் கொண்டு, இந்தநிகழ்ச்சியையிட்டுத் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்? மொழிப் பிரச்சினை நியாயமான அளவுக்காவது தீர்த்துவைக்கப்படும் என்று நினைக்கிறீர்களா?...

ஏ. பி. துரை,
கெமட்டகொடை.


முன்பை விட இன்னும் அதிக சக்தி வாய்ந்தது!




ப்ளெக் ப்ளேக்

பலஇயக்க கிருமிநாசினி உங்கள் குடும்ப சுகாதாரத்தைப் பாதுகாப்பதோடு நோய் பரப்பும் விஷப் பூச்சிகளை உடனடியாக அழித்து விடுகிறது.

புதியதும் அதிக சக்தி வாய்ந்த மருந்து வகைகளையும் கொண்ட, பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" மூன்று வகைகளில் இயங்கக் கூடிய முதலாவது கிருமி நாசினியாகும்.

1. நேரடித்தாக்குதல் ஈக்கள், நுளம்புகள், கரப்பான், தெள்ளு, மூட்டைப் பூச்சிகள் போன்றவைகளை உடனடியாக அழித்து விடுகிறது.
2. பறந்து தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட பின் புகை போன்ற ஆவியாக மாறி, பல பகுதிகளுக்கும் பரவி மறைந்திருக்கும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.
3. தங்கித் தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கண்ணுக்குத் தெரியாத, ஆனுல் கொல்லும் சக்தி வாய்ந்த ஒரு வகை மெல்லிய படலமாக தங்கியிருந்து அதனுடன் சந்திக்கும் சகல பறக்கும் பூச்சிகளையும், ஊர்ந்து செல்லும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.




டிடிவிபியுடன் (DDVP) கூடிய பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" கிருமி நாசினியை வாங்கி ஊர்ந்து, பறந்து செல்லும் கிருமிகளை அழித்து விடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதிப் பாட்டுக்கு 100 இசைக் கருவி

## 'புதிய பறவை' பாடலுக்கு இரட்டையர் சாதனை

மெஜஸ்டிக் ஸ்டுடியோ ஒலிப்பதிவுத்தியேட்டரில் எக்கச்சக்கமான கூட்டம். சன நெருக்கடியைப் பார்க்கிலும் இசைக் கருவிகளே ஏராளமாகக் குவிக்கப்பட்டிருந்தன. எல்லா வாத்தியக் கருவிகளையும் சுதி சேர்த்துக் கொண்டு ஒவ்வொரு இசை விற்பன்னரும் இருந்தனர். காதைப் பிளக்கும் ஒலி எழுந்ததால் மெஜஸ்டிக் ஸ்டுடியோவிலுள்ள 4 படப்பிடிப்பகங்களிலும் படப்பிடிப்பு நடைபெற முடியவில்லை.



100 வாத்தியக் கருவிகளை வைத்து ஒரு பாடலை ஒலிப்பதிவு செய்ய இசை இரட்டையரான விஸ்வநாதன், ராமமூர்த்தி இருவரும் ஏற்பாடு செய்தனர். வயலின்கள் மட்டும் மொத்தம் 30. எல்லாவற்றையும் இணைத்து இசை அமைத்தனர்.

இத்தனை இசைக் கருவிகளும் சேர்ந்து முழங்க அதோ கணீரென்று ஒலிக்கிறது இனிய நாதம்:

'எங்கே நிம்மதி எங்கே நிம்மதி
அங்கே எனக்கோர் இடம்
வேண்டும்
எங்கே மனிதன் யாருமில்லையோ
அங்கே எனக்கோர் இடம்
வேண்டும்.
எனது கைகள் மீட்டும்போது
வீணை அழுகின்றது
எனது கைகள் தழுவும் போது
மலரும் சுடுகின்றது'


நிம்மதியைத் தேடி அலைகின்ற ஒருவனுக்காகச் சவுந்திரராஜன் இப் பாடலைப் பாடுகின்றார். சொல்லாமலே நமக்கு இது கண்ணதாசனின் பாடல் என்று புரிந்து விடுகின்றது.

சிவாஜி பிலிம்ஸ் ஈஸ்ட்மன் கலரில் தயாரித்து வரும் 'புதிய பறவை'க்காகவே இப் பாடல் ஒலிப்பதிவானது. 'புதியபறவை' கனவுக்காட்சி ஒன்று இவ்வாரம் படமாக்கப்படுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. சிவாஜி, சரோஜாதேவி, சௌகார் ஜானகி ஆகியோர் இக் காட்சியில் தோன்றுவர்.

மற்றும் இப்படத்தில் நாகேஷ், ராதா, ஒ. ஏ. கே. தேவர், மனோரமா, ராம்தாஸ் ஆகியோர் தோன்றுகின்றனர். சிவாஜி நாடக மன்றத்தினர் நாடகமாக நடாத்தி வந்த 'புதிய பறவை' திரைக் கதை வசனத்தை ஆரூர்தாஸ் எழுத, தாதா மிராசி டைரக்ட் செய்கிறார்.

## காப்பாளருக்கு வரவேற்பு

கொழும்பு யாழ் கலை அரங்கம், வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றின் சார்பாக, இவ்விரு மன்றங்களின் காப்பாளராகிய திரு. எஸ். பி. சாமி, அவர்களுக்கும் செல்வி வீரலட்சுமி அவர்களுக்கும் நிகழ்வுற்ற திருமணத்தையிட்டு, கொழும்பு ஹஸ்தகிரி ஹோட்டல் மாடியில், ஓர் சிறப்பான வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்டது. இவ்விரு மன்றங்களின் சார்பாக முறையே திருவாளர்கள்: வேலணை வீரசிங்கம், பொன். தியாகராசன் ஆகியோர் வாழ்த்துப் பத்திரத்தையும், அன்பளிப்புப் பொருளையும் அளித்தார்கள். பேராசிரியர் கா. பொ. இரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. எஸ். எஸ். கணேசபிள்ளை (வரணியூரான்) யின் வரவேற்புரையை அடுத்து, திருவாளர்கள். டேவிட் ராஜு, சித்தாந்த செம்மணி இ. கி. சோதிநாதன், கே. பாலச்சந்திரன், கு. இராமச்சந்திரன், கம்பனைதாசன், கலைதாசன், கே. எஸ். ஏ. கபூர், கலையன்பன், எஸ். மாணிக்கவாசகர், நடிகவேள் லடீஸ் வீரமணி, ஏ. எஸ். மணவைத்தம்பி, திருமதி வசந்தா அப்பாத்துரை ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரை நிகழ்த்தினர்கள். சிற்றுண்டி உபசாரணையையடுத்து சாமி தம்பதிகளின் நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது.



இளமை கொஞ்சும் இவ்விரு உள்ளங்களும் தனியான இடத்தில் ஆடிப்பாடும் போது அவர்களுக்குக் 'காதலிக்க நேரமில்லை' என்றால் யார்தான் நம்ப முடியும்? ஆனால் ஸ்ரீதர் இந்தப் புதிரை விளக்குகிறார். 'காதலிக்க நேரமில்லை' வண்ணப்படம் சினிமாஸ் திரைகளுக்கு 22 ம் திகதி வருகிறது. இப்படத்தில் தோன்றும் முத்துராமனும், காஞ்சனாவும் இப்படிக்கவர்ச்சியாகத் தோன்றுகிறார்கள்.

தமிழ்ப் பட

## மந்த நிலைக்கான காரணம்!

தமிழ் சினிமாப் படத் தயாரிப்பில் மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும், தமிழ்ப்படங்கள் எதிர்பார்க்கப்படும் அளவு வெற்றி பெறுதிருப்பதே காரணம் என்றும் நாம் பல செய்திகளை வெளியிட்டிருந்தோம். அண்மையில் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சங்கம் வெளியிட்டுள்ள அரை ஆண்டு அறிக்கை நமது கூற்றை மெய்ப்பிக்கிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையுள்ள 6 மாத காலத்துள் சென்னையில் ஆக மொத்தம் 59 திரைப்படங்களே தணிக்கை செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் தமிழ் படங்கள் ஆக மொத்தம் பதினெட்டுள்ளன. இவற்றுள் தமிழ் படங்கள் ஆக மொத்தம் பதினெட்டு மட்டும்தான்.

கடந்த வருடம் இக் கால எல்லைக்குள் மொத்தம் 74 படங்கள் தணிக்கை செய்யப்பட்டன.

தென்னிந்தியப் படங்கள் இப்பொழுது கீழ் நிலையை அடைவதற்கு பலதரப்பட்ட காரணங்கள் கூறப்படுகின்றன. குறிப்பாக ஒரு சில நடிகர்கள் மட்டுமே எல்லாப் படங்களிலும் தோன்றுவதனால் இரசிகர்கள் மத்தியிலும் சலிப்பு ஏற்பட்டுவிடுகின்றது. ஆகவே வருவாய் கம்மியாகிவிடுகிறது.

மறுபக்கம் பார்க்கப்போனால் புதுப் புதுக் கற்பனைக்கே இடமில்லாதவகையில் பழைய கதைப் பாணியிலேயே புதுப்படங்களும் தயாரிக்கப்படுகின்றன.

இக் காரணங்களுடன் சர்க்கார் விதித்துள்ள புது வரிகளும் வருமானத்தைக் குறைத்து விடுகின்றன என்று கூறப்படுகிறது.

## கலைப் பூஞ்சோலை

# 'எட்டணாச் சோறு போதுமா?'

## ராதா - நாகேஷ் மோதல்

சாப்பாட்டுப் பாத்திரத்துடன் வீட்டினுள்ளே நுழைந்த ஒல்லியான உருவத்தைக் கண்டதும் ரூபாய் நோட்டுகளையும் நாணயங்களையும் வைத்துக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த வட்டிக் கடைக்காரருக்கு நாக்கில் ஜலம் ஊறியது. பணத்தையெல்லாம் பதுக்கிவிட்டு மெதுவாக எழுந்தார்.



'இனிமேல் நான் சாப்பாடு கொண்டு வரப் போகமாட்டேன். மானம் போகுது...!' என்றார் சாப்பாடு கொண்டு வந்தவர். வட்டிக் கடைக்காரர் 'ஏண்டா டேய்! நேற்றுவரை சோறு தூக்கிய பயல் இன்று மாட்டேன் என்கிறாயே!' என்றார்.

இதைக் கேட்டதும் சாப்பாடு கொண்டு வந்தவர், 'மானம் போவுது. எட்டணாவுக்கு எவன் சாப்பாடு போடுறான்? உங்களுக்காக நான்தான் தினமும் என் காசு போட்டு சோறு வாங்கிப் போடுறன். இன்னும்வேண்டுமானால் போடுறன. வேணுமானு என் தர்மமா நினைச்சிக்கிட்டிருந்து தின்னுங்க' என்று கூறிவிடுகிறான். தொடர்ந்து அவன் கூறுகையில், 'ஒன்னு மட்டும் சொல்றன். ஊர்ல உங்களுக்கு நல்ல பேர் இல்ல. தப்பித் தவறி ஹோட்டலில் சாப்பிட்டீங்கண்ணு விஷத்தைக் கலந்து போடுவானுகள்.'

'ஏண்டா, அந்த விஷத்தை பரமசிவனே குடிச்சும் ஒண்ணுமே நடக்கல்ல. அவன் பக்தன் நான். என்னை எவண்டா விஷம் வைத்துக் கொல்ல முடியும்' என்று இடி முழக்கம் போல் கர்ஜித்தார் வட்டிக் கடைக்காரர்.

இந்தக் கட்டம் பரணி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. வட்டிக் கடைக்காரக், கருமியாக எம். ஆர். ராதாவும், சாப்ராடு கொண்டுவருபவராக நாகேஷும் தோன்றினர்.

ஏ. எல். எஸ். தயாரித்து வரும் 'சாந்தி' என்ற படத்துக்கான காட்சியே இது வாகும். சிவாஜி, ராஜேந்திரன், விஜயகுமாரி, ரங்கராவ் நடிக்கும் சாந்திக்கான கதை வசனம் சோலைமலையுடையது. இப் படத்தின் இயக்குநர் பீம்சிங்.

### நடந்தவை

## பட்டமளிப்பு

பன்னாலை ஞானவைரவர் ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபை அ. க. க. பாடசாலையில் நடாத்திய சேக்கிழார் மாநாட்டில் நாதசுர இசை மன்னரான திரு. நா. க. பத்மநாதனுக்கு 'நாதசுரகான கலாநிதி' என்ற பட்டத்தை வழங்கினர். சேர் கந்தையா வைத்தியநாதன் பட்டமளித்தார். திரு. மணி பாகவதர், திரு. பொன் முத்துக்குமார், திரு. சி. சின்னத்தம்பு, திரு. கா. கதிர்காமத் தம்பி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்னம் தலைமை தாங்கினார்.

## கந்தலீலாவை கவிஞர் கைவிட்டார்

கண்ணதாசன் 'கந்தலீலா' படம் தயாரிக்க ஆரம்பித்தாரல்லவா? இப்பொழுது கவிஞர் அதைக் கைவிட்டு விட்டார். அவருக்குப் பதிலாக தேவர் கந்தலீலாவை [illegible] மொழியில் தயாரிக்கப் போகிறார்.



வீரப்பா தயாரித்த 'ஆனந்த ஜோதி'யில் புரட்சி நடிகரும், தேவிகாவும்.

# எலிசபத் டெயிலருக்கு 8 லட்சம் ஒரு நாள் சம்பளம்!



கிளியப்பாத்திராவாக நடித்து உலகப் புகழீட்டிய எலிசபத் டெயிலருக்கு நாள் ஒன்றுக்கு எட்டு லட்சம் ரூபாய் சம்பளம் கொடுக்க ஒரு படக் கம்பெனி முன்வந்துள்ளதாம்.

இஸ்ரேல் தேசத்தின் புராதன வரலாற்றைச் சித்தரிக்கும் ஒரு பல் மொழி பேசும் படத்தில் எலிசபத் டெயிலர் கதாநாயகியாக நடிக்கப் போகிறார். இப்படம் இஸ்ரேல் தேசத்திலேயே படமாக்கப்படுமாம். எலிசபத் டெயிலரின் தற்போதைய கணவர் ரிச்சார்ட் பேட்டனும் இப்படத்தில் நடிப்பார் என்று தெரியவருகிறது.

கார்ள் குருக்கர் என்ற இஸ்ரேல் படத் தயாரிப்பாளரே இப்படத்தைத் தயாரிக்க முன் வந்திருக்கிறார். மூன்று மாதங்களுள் இப்படத்தைத் தயாரித்து வெளியிடுவதற்கான ஆயத்தங்களையும் செய்திருக்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பலகை

## அந்தரத்தீவு

ஆசிரியர்: கே. எஸ். மகேசன்.

வெளியீடு: சேதுபதி, அல்லாலை கொடிகாமம்.

விலை: ரூபா 3-50.

அறிவியற்துறையில் மாணவர்களின் கவனத்தை ஈர்த்தற் பொருட்டு ஆங்கில மொழியில் அறிவியல் நவீனங்கள் தினம் தினம் பல்கிப் பெருகி வளர்ந்து வருகின்றன. வருங்கால உலகம் அறிவியலைக்கொண்டே வாழ முடியும் என்பதனை ஆங்கில மொழி இலக்கிய கர்த்தாக்கள் உணர்ந்துள்ளனர் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

ஈழத்திலும் தாய் மொழிக் கல்வி வலுப்பெற்று வருகிறது. நாளைய மாணவர்கள் அறிவியலைத் தாய் மொழி மூலமே கற்கவிருக்கிறார்கள். அவர்களின் கவனத்தை அறிவியலின்பால் இழுக்க வேண்டிய கடமை இன்றைய இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்களையும் ஓரளவு சார்ந்துள்ளது. இந்த உண்மையை 'அந்தரத்தீவு' ஆசிரியர் திரு. கே. எஸ். மகேசன் நன்றாக உணர்ந்துள்ளார். எனவே தான் சில ஆண்டுகளுக்கு முன்னர் 'தினகரன்' பத்திரிகையில் தொடர் அம்சமாக வெளி வந்த 'அந்தரத்தீவு' என்னும் நவீனத்தை இப்பொழுது நூல் வடிவாக வெளியிட்டுள்ளார். அவரின் முயற்சி ஈழத் தமிழகத்தில் முதல் முயற்சி. அந்த வகையிலே 'அந்தரத்தீவு' ஈழத் தமிழிலக்கிய உலகில் முக்கியத்துவம் பெறுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவனின் மகனான ஆறுமுகத்தைச் சுற்றிச் சுழன்று கதை பின்னப்பட்டுள்ளது. ஆறுமுகத்தைச் சந்திர மண்டல யாத்திரை செய்ய வைத்து, அவன் வாயிலாகவும், தனது வாயிலாகவும், இதர துணைப் பாத்திரங்கள் சிலரின் வாயிலாகவும் அண்ட வெளிப் பிரயாணத்திலுள்ள பிரச்சினைகளையும், புதுமைகளையும் அழகு தமிழில், எளிமையாக எல்லாருக்கும் புரியக் கூடிய நடையில் தெளிவு படுத்தியுள்ளார் ஆசிரியர்.

கதையில் விறுவிறுப்பும் வேகமும் போதியளவு உண்டு. வசன நடையோடு பழைய காலத்து கவிதைகளையும் இணைத்துள்ளார். இதனால் கதையின் வேகம் இடையில் தடைபடுகிறது. ஆசிரியருக்கு உள்ள பழம் தமிழிலக்கிய அறிவைக் காட்ட இம் முறை வலிந்து கையாளப்பட்டிருப்பது நன்கு புலனாகிறது. மேலும் இன்றைய மாணவர்களுக்கு பழம் தமிழிலக்கிய அறிவு ஆசிரியர் எதிர்பார்க்குமளவிற்கு இல்லை. இதனால் நூலின் நோக்கம் திசை திரும்புகிறது.

ஆசிரியரின் தமிழ் உணர்ச்சி நூலில் பரந்து காணப்படுகிறது. எதிலும் தமிழைக் காண அவரின் உள்ளம் விழைகிறது. அந்த உணர்ச்சியின் உந்தலா பழம் இலக்கியப் பாடல்கள் என்றால், இல்லை.

சந்திர மண்டல யாத்திரையை வெற்றியுடன் முடித்துக்கொண்டு அமைதியாக கொழும்பை வந்து சேர்ந்த ஆறுமுகத்திற்கு அவரின் காதலி செல்வி தில்லைநாதன் மீது ஏற்படும் சந்தேகம் புரியாத புதிர். கதையின் உச்ச கட்டத்தை அவ்விடத்தில் ஏற்ற முற்பட்ட ஆசிரியர் தோல்வி காண்கிறார்.

டாக்டர் மு. வரதராசனின் 'மண் குடிசையில்' காண முடியாத சில அம்சங்கள் அந்தரத் தீவில் உண்டு. ஆனால் 'மண் குடிசை' அறிவியல் கருத்துக்களை கருவூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட முழுமை பெற்ற தமிழிலக்கியம். அதில் பழம் தமிழிலக்கியப் பாடல்கள் இல்லை. ஆனால் அவை கூறும் அறத்தைக் காணலாம். 'அந்தரத் தீவு' அறிவியற் கருத்துக்களைக் கூற வேண்டும் என்பதற்காக புனையப்பட்ட 'அறிவியல் நவீனம்'. அதற்குப் பழம் தமிழிலக்கியப் பாடல்கள் அவசியம் இல்லை. ஆனால் நோக்கம் முழுமை பெற்றுள்ளது. அதில் ஆசிரியர் வெற்றி பெறுகிறார்.

ஈழத் தமிழகத்தில், தமிழில் முதல் எழுந்த அறிவியல் நவீனம். தமிழ் மரபு பேணிப் புனையப்பட்டுள்ளது. எனவே தமிழ் பேசும் வாசகர்களின் ஆதரவையும் தனதாக்கிக் கொள்ளும்.

—பூங்குன்றன்.

# கதிர்காம ஆலய...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தமாலைகளில் கொள்ளை போனதுபோக எஞ்சியவை சிலவற்றை இப்போது சுவாமி ஊர்வலம் வரும் போது, திருவாச்சியில் தொங்க விட்டிருப்பார்கள். சாதாமாலை, பதக்கத்துடன் முத்து மாலை, அவல் மாலை, நெல்லிக்காய்மாலை முதலியவை உள்ளன. இந்தக் கணக்கு 1922ம்வருடம் திரு. உள்விட்ட பஸ்நாயக்கா நிலாமையை தேவஸ்தானக் கமிட்டியார் நீக்கியபின் மட்டக்களப்பு கே. மார்க்கண்டு என்பாரும் கூடவிருந்து சாமான்களை நிறுத்து ஒப்புக் கொண்டார்கள். இந்த டாப்பு பதுளை கோர்ட்டில் இருக்கிறது; இப்பொழுதும் பார்க்கலாம்.

### வள்ளியம்மன் ஆலயம்

வள்ளியம்மன் ஆலயத்தின் உற்பத்தி எப்போது என்றுகணக்கிட்டுச் சொல்ல முடியாது. கிட்டத்தட்ட கதிர்காம ஆலயம் ஏற்பட்ட காலத்திலேயே அதுவும் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று கூறுவாருமுளர். 1865ம் ஆண்டுவரை கதிர்காமத்தில் கோவில் மனேஜராகவும், வள்ளியம்மன் ஆலயஉரிமையாளராகவும், இருந்து வந்த வேலுப்பிள்ளை பூசாரியின் மரணசாசனத்தில் உள்ளவைகளை முன்னர் குறிப்பிட்டிருக்கிறோம். இப்போது இருந்து கோவில் நிருவாகத்தை நடத்தி வரும் திரு பாரிஸ் அப்புக் கப்புராளை வேலுப்பிள்ளை பூசாரியின் சந்ததியேயாவார். இக் கோவிலினுள் வள்ளியம்மன் சிலையுள்ளது. ஆனால் அவர்கள் இதனை வெளிப்படையாகச் சொல்லத் தயங்குவார்கள்.

"கதிர்காம ஆலயத்தின் கூரை மீது ஏறி ஓடுகளை மாற்றுபவன் திரும்ப உயிரோடு மீளுவதில்லை"

என்று மக்களிடம் பயங்காட்டி படித்த அறிவாளிகளையும் நம்பச்செய்து செப்படி வித்தை காட்டும் கோவிலில் வாழும் கும்பல்கள், எத்தனை எத்தனையோ விதமாகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

திருவிழாக் காலங்களில் ஊர்வலம் வரும் பொழுது வள்ளியம்மன் சந்நிதானத்தில் இப்போது செய்யும் சடங்குகளை நீங்கள் கவனிக்க வேண்டும். வள்ளியம்மன் ஆலய நிருவாகம் முழுதும் திரு. பாரிஸ் அப்பு அவர்கட்கே உரியதாகும். ஆயினும் வருவாயில் ஒரு சிறு பகுதியைப் பெரிய கோவிலுக்குக் கொடுப்பதிலிருந்து அறியக்கிடப்பதென்ன? தமிழர்களே உரிமையாளர் என்பது தெற்றென விளங்கும். திரு பாரிஸ் அப்பு தன்னைத் தமிழ்ப் பரம்பரை என்று சொல்லத் தயங்குவதில்லை.

இம்மடம் ஏற்பட்டு 135 வருடங்களே ஆகின்றன. இதனை நிறுவியவர் தெய்வானை அம்மன் கோவில் முதல்வராய் இருந்த பால்குடி பாவா (கேசபுரிபாவா என்பதவரின் பெயர்) என்ற பேரன்பர். தன்னுடன் இந்தியாவிலிருந்து வந்து தங்கி இருந்த முஸ்லிம் சந்நியாசி செய்யது ஜப்பார் அலிஷா பாவா என்பவருடன் அளவிறந்த நட்பு கொண்டு மத விசாரணையில் இருவரும் ஈடுபட்டு ஆப்த ஆத்மீக நண்பர்களாக இருந்துவந்தனர். கொஞ்ச காலத்தின் பின்னர் அம் முஸ்லிம் சந்நியாசி பரமபதம் அடைந்தார். அதைக் கண்டதும் பால்குடி பாவா (கேசவபுரி பாவா) முஸ்லிம் சந்நியாசியுடன் தான் கொண்டிருந்த அளவிலா அன்பிற்கிணங்க வள்ளியம்மன் கோவில் பக்கமாக ஓரிடத்தில் அவரை நல்லடக்கம் செய்தார்கள்.

இதன் பின்னர் இம் முஸ்லிம் சந்நியாசியின் (பக்கீர்) வம்சத்தில் வந்தவர்தான் 1945-ம் ஆண்டு காலம் சென்ற மீர் செய்யது முஹம்மது அலிஷாபாவா ஆகும். இவர் மேலே சொன்ன தனது குருநாதரின் சமாதியின் பேரில் ஒரு சிறு குடில் போட்டும் பின்னர் ஒருவாறு கட்டுவித்தும், திருவிழாக் காலங்களில் சகல யாத்திரிகர்களும் வந்து வணங்கும் படியான சில பல காரணங்களும் செய்ய ஆரம்பித்தார். 1922-ம் வருடம்வரை தெய்வானை அம்மன் கோவிலில் இருந்துதான் சாப்பாடும் மற்ற உதவிகளும்கொடுத்து வந்தார்கள். இம் மடத்திலுள்ள சமாதியில் பாத்திஹா ஓதுவார்கள்.

இந்து யாத்திரிகர்கள் காவடிகளுடன் மேளதாள வரிசைகளைக் காட்டி சமாதியைச் சுற்றிச் சுற்றி ஆடுவார்கள், பாடுவார்கள், அரோகரா என்று அண்டம் அதிர முழங்குவார்கள்.

(முற்றும்)

## நபி ஜெயந்தி பொதுக் கூட்டம்

கொழும்பு, பண்டார நாயக்க மாவத்தையிலுள்ள இஸ்லாமிய கலை வளர்ச்சி மன்றம் இம்மாதம் 19-ம் திகதி மாலை, மேற்படி வீதியிலுள்ள பாத்திமா முஸ்லிம் பெண்கள் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் நபி ஜெயந்தியை முன்னிட்டு ஒரு பொதுக் கூட்டம் நடாத்துகிறது.

ஜனாப் கே. எம். ஏ. காதர் தலைமையில் நடக்கும் இக் கூட்டத்தில் பேராசிரியர் எஸ். ஏ. இமாம், ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத், எம். பி., ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத், எம். பி., திரு. பெர்னட் சொய்ஸா, எம். பி., திரு. செ. இராசதுரை எம். பி., ஜனாப் ஏ. அஸீஸ், ஜனாப் ஏ. எம். நசீர், எம். எம். சி., மற்றும் பிரபல பேச்சாளர்கள் பலரும் சொற்பொழிவாற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதா?

'சிங்களத்திற்கு அரச கரும மொழி அந்தஸ்துக் கொடுப்பதோடு, தமிழுக்கும் உரிய இடம் கொடுக்க வேண்டும். தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ளவும் தமிழரசுக் கட்சியைச் செல்வாக்கிழக்கச் செய்யவும் இதுதான் சிறந்த வழியாகும்.'

கூட்டரசாங்கத்தில் இணைந்துகொண்ட சமசமாஜக் கட்சி உறுப்பினர் திரு. தனபால வீரசேகரா 14ம் திகதி பாராளுமன்றத்தில் கூறியது.

'மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டது. அதனை மீண்டும் கிளற வேண்டியதில்லை.'

அரசாங்கக் கட்சி உறுப்பினர் திரு. அல்பேர்ட் காரியவாஸம் 14ம் திகதி பாராளுமன்றத்தில் கூறியது.

# அவதூறு

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

போல், அவர் ஆரம்பித்த குச்சுக்கடை பெரிய கொள்வனவு விற்பனவு செய்யும் பிடவைக்கடையாகிற்று. ஒரு மனிதனின் முன்னேற்றம் கண்டு புளிக்கரைக்காத கண்கள் சமூகத்தில் இல்லாமல் இல்லை. கனகரெத்தினம் குடியுரிமை பெற்ற முதலாளி! கங்காணி! அவரைச் சும்மாவிட்டு வைக்குமா? 'சபா'வேறு அவரது குடும்பத்தோடு ஒன்றிச் சொந்த வீடுபோல் பழகுவது அதற்குப் பக்கபலமூட்டினாற் போலத்தான்.

இருபது இருபத்திரண்டு வயது மதிக்கக்கூடிய இளைஞன் வயதுவந்த இளம் பெண் உள்ள வீட்டில் ஒன்றிப்பழகுவதைப் பழக்கப்பட்ட வாய்கள் குறைகூறுமல் இருக்கமுடியாதுதான். அதற்கு மாறானால் பாலையில் பசும்புல் முளைப்பதுபோல் தான்.

பாவம், அப்பாவி மனிதர்கள். கனகரெத்தினத்தின் வீட்டைப்பற்றி அறிந்த அளவு 'சபா'வை அவர்களால் அறியமுடியவில்லை. 'அவன் ஒருஇளைஞன்; அவள் ஒரு 'குமர்'; என்ன உறவு இருக்கும்?' என்பதைத்தவிர வேறு எதுவும் ஊகிப்பதில்லை அந்தக் கண்கள்.

'கமலா'வைக் காணும் போதெல்லாம் 'சபா'வுக்குத் தன் இதயக் கோயிலின் எழில் தெய்வம்; காதல் குகையிற் கண்டெடுத்த பொக்கிஷம்; காவியத்துக் கருவூலம் சந்தனமரச் சிற்பம் 'சரஸ்வதி'—தன் இளம் மனைவியின் சாயல் [illegible] வதை அவர்களால் [illegible] முடியவில்லை.

இந்த விடுமுறையில் மலைநாட்டுவளம்பார்க்கச் 'சபா' மனைவியுடன் கொழும்பு காமம் வந்தபொழுதுதான் அந்தக் கண்கள் அங்கலாய்த்தன. கமலாவுக்குச் 'சரசு' அண்ணியில்லாதகுறையைப் போக்கினாளென்பதை ஊர்க் கண்கள் புரிந்தன. 'அவதூறு' தன் கோரவிழிகள் [illegible] பாய்ச்சிக்கொண்டது.

(யாவும் கற்பனை)

## நாட்டை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பதவி வெறியும் சுய நலப் பித்தும் பிடித்த தலைவர்களை பின்பற்றி ஆயிர வருடம் அடிமைகளாக வாழ்வதைக் காட்டிலும், தன்மான உணர்வும், மொழிப்பற்றும், நேர்மையும் கொண்ட தந்தை செல்வநாயகத்தைப் பின்பற்றி தியாகத் தீயிலே குதித்து, உரிமையுடன் ஒரு நாள் வாழ்ந்தால் அதுவே இச் சென்மமெடுத்ததிற்கு பாப விமோசனமாகும். அத்தோடு, உலகிலே எந்தப் பகுதியிலும் காணப்படாத அதிசயப் பிரசையான "நாடற்ற பிரசை" என்ற அவமானப் பெயரை அழித்துவிட்டோம், ஒழித்து விட்டோம், என்ற மனத் திருப்தியுடன் மலைநாட்டுத் தமிழ் இளைஞர்கள் ஏறு நடை போடலாம்.




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சின்ன வயதில்...(12)

கல்முனை
நோ. இராசம்மா

சின்னஞ்சிறிய சிறுவன். சுட்டிப் பயல். எட்டு வயதிருக்கும். யோகியைப் போல் வாழ ஆசை. ஏன் யோகியைப் போல் வாழவே தொடங்கி விட்டான். உடுப்பதுவோ ஒரு முழம் வேட்டித் துண்டு. உண்பது ஒரு வேளைக்கு. இரவிற்றுயில்வது கட்டாந்தரையில். இவைகளைப் பார்த்துக் கொண்டு தாய் சும்மா இருப்பாளா? கண்டிப்பாள். அப்படிக் கண்டித்தவுடன், "சிவபெருமான் கைலாசத்தில் பாறை மீது படுக்கின்றார். நான் தரையிற் படுத்தாலென்ன?" என்று பதில் கூறுவான்.

அப்போது வயதுபன்னிரண்டு இருக்கும். ஓர் ஐரோப்பிய பாடசாலையிற் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் காலம். பக்கத்துக் கிராமமொன்று 'காலரா' நோய்க்கு அடிமையாகிக் கொண்டிருந்தது. சுட்டிப் பையன் என்ன செய்தான் தெரியுமா? தன்னைப்போல் நான்கு மாணவர்களைக் கூட்டிக் கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் அக்கிராமத்திற்குச் சென்று விட்டான். பெற்றோர்கள் காணாது துடித்தனர். நாலைந்து நாட்கள் கடந்தன. ஆறாவது நாள் வீட்டுக் கொல்லைப்புற வழியாக வந்த சிறுவன் தன் சின்னஞ் சிறு கைகளால் தாயின் கண்களைப் பொத்தினான். நோயுற்றவர்களுக்குப் பணிபுரியத் தன் மகன் சென்றிருந்ததைக் கேட்டு அகமகிழ்ந்து அவனை இறுகத் தழுவிக் கொண்டாள் அன்னை.

கல்லூரியிற் படிக்கும் பொழுதே இவனது நாட்டுப்பற்று வெளிப்படத் தொடங்கியது. கல்லூரியின அதிபரோ ஒரு வெள்ளைக்காரர். ஒருநாள் அவர் பாரத நாட்டைப் பற்றி இழிவாகப் பேசினார். இதைக் கேட்ட சிறுவன் கொதித்தெழுந்தான். காரசாரமாகப் பதில் அளித்தான். கல்லூரியில் ஒரே கலவரம். முடிவு, சிறுவன், இல்லை, அந்த வீரச்சிங்கக் குட்டி கல்லூரியில் இருந்துவெளியேற்றப்பட்டான். இந்த வீரதீரச் சிறுவன் யார் தெரியுமா? சாட்சாத் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தான்!

## என்ன சொற்கள் இவை?

—ந. கேதீஸ்வரன்,
வெள்ளவத்தை—

1. வலயுர்
2. புஇத்ரவதி
3. ளள்வெம்
4. ம்ங்ரரீகா
5. ம்ர்கமாக்

[தெரியவில்லையா? அப்படியானால் கீழே பாருங்கள், தலைகீழாக!]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

## தெய்வீக விபுலாநந்தன்

—ம. தருமலிங்கம், காரைதீவு—

ஈழ நாட்டின் காரேறு மூதூர் (காரைதீவு: தற்போது வழங்கப்படும் பெயர்) என்னும் ஒரு சிற்றூரிற் பிறந்து பார் புகழும் நாடான பாரதம் வரை சென்று சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும் பாடுபட்டவர் நமது அருட்திரு விபுலாநந்த அடிகள். அவர் நிறைவான கல்வியைப் பெற்றுத்தானும் நிறைவெய்தினார். பின்பு நிலையிழந்த மக்கள் தமைத் திருத்தும் பொருட்டுத் தன் கொள்கைக்கு ஆதரவாய் இருந்த இராமக்கிருஷ்ண சங்கத்தில் சேர்ந்தார். அங்கும் தனது சேவைக்கு முட்டுக்கட்டையாய் இருந்த பட்டம், பதவிகளைத் துறந்தெறிந்து துறவறத்தை மேற்கொண்டார்.

தனது சேவையின் பயனாகப் பல கல்லூரிகளையும், ஸ்தாபனங்களையும் தோற்றுவித்தார். இவற்றிலெல்லாம் முக்கியமானது அடிகளின் பிறந்தகத்தைச் சேர்ந்த சாராதா மகளிர் வித்தியாலயமும், மட்டுநகர் கல்லடி உப்போடை தனில் தனது குருவின் பெயரால் அமைக்கப்பட்ட சிவாநந்த வித்தியாலயமுமாகும்.

சுமார் 35 மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சிவாநந்த வித்தியாலயமும் தற்பொழுது 800க்கும் மேற்பட்ட மாணவர்களைத் தன தாக்கிக்கொண்டு, அடிகளாருக்கு மேலும் புகழ் தேடிக் கொடுக்கும் வண்ணம் கிழக்கிலங்கையிலேயே ஒரு முதன்மையான ஆங்கிலக் கல்லூரியாக விளங்கி வருகிறது.

பாவேந்தர் பாரதியை பாரினுக்கு முதல் முதல் அறிமுகம் செய்து வைத்த பெருந்தகை நம் அடிகளார் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தைத் தோற்றுவித்ததன் மூலம் எத்தனையோ பண்டிதமணிகளை ஈழநாடு பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார் நம் அடிகள்.

தமது வாழ்நாளில் தர்ம சக்கரம், பிரபுத்த பாரதம் போன்ற இன்னோரன்ன பல பத்திரிகைகளுக்கும் ஆசிரியராகக் கடமையாற்றி கீர்த்தி பலவும் பெற்றுள்ளார்.

நம் மூதாதையர்படைத்த அரும் பெரும் செல்வமான இசைக் கலையின் நுட்பங்களையெல்லாம், வாழ்வெலாம் அல்லற்பட்டு அலைந்து திரிந்து ஆராய்ந்து அறிந்து, காலமெலாம் அழியாப் புகழ் படைத்த 'யாழ் நூல்' தனை இயற்றி வானும், வையகமும் உள்ளவரை வாழும் புகழ் எய்தினார். அத்துடன் நின்று விடாமல் 'மதங்க சூளாமணி' போன்ற இன்னோரன்ன நாடக நூல்களையும் இயற்று முத்தமிழையும் அணி செய்தார்.

காலமெலாம் பொதுநல சேவைக்காக உழைத்த அந்த உலக ஊழியன் உத்தமன் விபுலாநந்தன் கல்லடி உப்போடைதனில் மயான பூமிப் பிரதேசமாய் இருந்த ஓர் இடத்தில் ஒரு சாந்தி நிகேதத்தை அமைத்துவிட்டு, அங்கேயே மீளாப் பள்ளி கொள்கிறான்.

## இயற்கையின் இறை வணக்கம்

—ஈஸ்வரி, மூளாய்—

ஆமைதியான உறக்கத்தில் ஆழ்ந்திருந்த நான் நித்திராதேவியின் அணைப்பிலிருந்து மெல்ல விடுபட்டேன் கண் விழித்தவுடன் காலைவேளையில் எனக்காகக் காத்திருந்த கருமங்களைச் செய்து முடித்தேன்.

என் வேலைகள் முடியட்டுமென்று காத்திருந்தவன் போல் கதிரவன் தன் வேலையைத்தொடங்கினான். இருட்திரையை விலக்கி இரவி எழும் இனிய காலை வேளை, என் கனைகளையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து இழுத்தது. கண்களுக்குக் காலைக் காட்சிகள் தெரிந்தன. கருத்திற்கோ இறைவனை இயற்கை வணங்கும் காட்சி தெரிந்தது.

உலகம் என்பது ஒரு ஆலயம். அங்கே எங்கும் நிறைந்திருக்கின்றான் ஒருவன். அவனே இறைவன். அவன் அன்பே உருவாக வீற்றிருக்கின்றான். இயற்கையன்னை கீழ்வானில் செந்நிறக் கும்பம் வைத்தாள். அதிலிருந்து செந்நிற ஒளியால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தாள். பலவர்ணப் பட்டொத்த மேகமென்னும் ஆடையை அணிந்தாள். அரும்புகளால் அலங்கரித்தாள். மணங்கமழும் மலர்களால் அர்ச்சனை செய்தாள்.

கண்ணைக் கவரும் வைரங்களையும், தண் தரளங்களையும் காணிக்கை செலுத்[illegible] போல் வெள்ளி வர[illegible] பனித்துளிகளைத் தவிரில[illegible]கள் அள்ளிச் சொரிந்தன. மென்காற்றுக் கவரி வீசியது. செடி கொடிகள் தலை தாழ்த்தி வணங்கின. புள்ளினங்கள் பண்ணிசைத்துப் பரவின. இதற்கிடையில் இயற்கையன்னை கீழத்திசையிலிருந்து செந்நிறக் கலசத்தை எடுத்துவிட்டுப் பொன்னொளிவீசும்தீபத்தை ஏற்றித் தீபாராதனை செய்தாள். எங்குமே ஒரு தெய்வீக சக்தி சூழ்ந்திருந்தது. அதில் ஆழ்ந்த அகம், அமைதியுற்றது.

இயற்கையின் ஈடிணையற்ற [illegible] எம்மாத்திரம்?

## நடிகன்

—"நிக்கத்தான்"—

நானொரு நடிகனய்யா
நாடக மாடுகின்றேன்;
உலகமென்ற மேடையிலே
உயரநின்று ஆடுகின்றேன்.

அவனமைத்த மேடையிலே
ஆனந்த மாயாடவில்லை;
கண்களுக்கு ஆனந்தமாய்
காட்சிக்கு ஆடுகின்றேன்.

பாசம் என்னும் கட்டத்தில்
பக்குவமா யாடுகின்றேன்;
பாசத்தை சுமையாக்கி
பம்பரமாய் சுழலுகின்றேன்.

சொந்தமாகத் தந்தானே
சோதியான பாத்திரத்தை;
பாத்திரம் தந்தவனைப்
பார்க்கின்றேன் காணவில்லை.

ஆடிக்களைத்து விட்டேன்
ஆட்டம் மட்டும் நிற்கவில்லை;
ஆட்டத்தை நிறுத்திவைக்க
அவன் தானா வரவேண்டும்?

## புதுமைகள் பாரீர் பாரினிலே - (10)

—அன்ரனி பெர்னாண்டோ, கிரிலப்பனை—

### மனிதரின் பிணங்களைப் புசிக்கும் மனிதர்!

ஒரு மனிதனை இன்னொரு மனிதன் கொன்று தின்ற காலமொன்று இருந்தது. அதுதான் மனிதர் நாகரிகமடையாது காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலம். மனிதன் நாகரிகத்தில் முன்னேற இந்தக் கொடிய, அநாரிக வழக்கம் மங்கி மறையலாயிற்று. எனினும், மனிதன் முன்னேறி வான்வெளியையும் வென்றுவிட்ட இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட உலகின் சில பகுதிகளிலே மனித மாமிசம் புசிக்கும் மனிதர்கள் வாழத்தான் செய்கிறார்கள்.

இலத்தீன் அமெரிக்காவில் உள்ள பரகுவே இராச்சியத்தில் ஒரு பெரும் பகுதி இன்றும் காடுகள் நிறைந்த பிரதேசமாக இருக்கிறது. மனித மாமிசம் சாப்பிடும் வழக்கமுள்ள நாகரிகமற்ற ஒரு சாதியார் இந்தக் காட்டுப் பகுதியில் சீவிக்கின்றனர்.

ஒரு மனிதன் இறந்ததும் அவனுடைய பிணத்தைச் சமைத்துச் சாப்பிடுவது இந்தக் காட்டுச் சாதியாரின் வழக்கமாகும். அவர்கள் பிணத்தைச் சாப்பிட்டபின் எஞ்சியிருக்கும் எலும்புகளுக்குத் தமது வில்லுகளினால் அடிப்பார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு கெட்ட ஆத்துமம் இருக்கிறது. இப்படி வில்லுகளால் அடிப்பதால் அந்தக் கெட்ட ஆத்துமம் அகன்று விடுகிறதென்பது அவர்களின் நம்பிக்கை. அச்சாதியார் செத்த பிணத்தைப் புசிக்கும் செயலை ஒரு சமயச் சடங்காகக் கருதி நிறைவேற்றுகின்றனர்.

இறந்தவனின் கெட்ட ஆத்துமம் திரும்பி வந்து தமக்குத் தொந்தரவு செய்யக் கூடும் என்ற பயமும் இந்தக் காட்டுமிராண்டிச் சாதியாரிடம் நிலவுகிறது. கெட்ட ஆத்துமம் திரும்பி வராதென்பதை உறுதிப்படுத்துவதற்கு எல்லோரும் ஒன்றுகூடி செத்தவனின் எலும்புகளைச் சுட்டுப் பொசுக்கிச் சாம்பலைப் பாதுகாப்பாக வைக்கின்றனர்.

தென்னையின் இனத்தைச் சேர்ந்த மரங்களின் குடலில் ஒரு வகைப் புழுவை வளர்த்து அப்புழுக்களை இவர்கள் மிகவும் பிரியத்தோடு சாப்பிடுகின்றனர். இவர்களின் வீடமைப்பு முறை மிக எளிதானதாகும். நான்கு கம்புகளை நாட்டி மேலே ஓலைகளால் வேய்ந்து விடுவர். சுற்றிலும் சுவர்கள் கிடையாது. இதுவே அவர்கள் வீடு. ஒரு வீட்டில் அவர்கள் மூன்று அல்லது நான்கு தினங்களுக்கு மேல் இருப்பதில்லை. அதன் பின் வேறு வீட்டிற்குச் சென்றுவிடுவர்.

அதே பிரதேசத்தில் வாழும் மற்றொரு சாதியாரிடம் நரமாமிசம் உண்ணும் வழக்கம் கிடையாது. ஆனால், ஒரு விநோதமான வழக்கமுண்டு. வேட்டையாடுவதில் மிகுந்த திறமைசாலிகளான இவர்கள் ஒரு போதும் தாம் வேட்டையாடியதைத் தாமே சாப்பிட மாட்டார்கள். அதை அயலவர்களுக்குப் பகிர்ந்த பின் அவர்களிடமிருந்து எதையும் பெற்றுத்தான் தின்பார்கள். இந்த நியதியிலிருந்து மாறுபடுவது பாவமென அவர்கள் கருதுகின்றனர்.

## உங்களுடன் ஒரு வார்த்தை!

செல்வி பொன்மணி, மயில்வாகனம், மல்லாகம்: வெளியூரைச் சேர்ந்த மருமக்கள் வளர்மதியில் சேருவதற்கு எவ்வித தடையுமில்லை. ஆனால், எல்லோரையும் போல், அவர்களும் மூன்று விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

செல்வி நோ. இராசம்மா, கல்முனை: 'வளர்மதி' பற்றிய உமது கருத்துக்கு நன்றி. 'சின்ன வயதில்' என்ற உமது கட்டுரை இம்முறை இடம் பெறுகிறது-மகிழ்ச்சி தருமென நம்புகிறேன்.

ஏ. ஆதம் லெவ்வை (சித்திக்), அக்கரைப்பற்று: உங்கள் சிறுகதை கிடைத்தது. ஆனால், பிரசுரத்திற்குத் தகுதியில்லை. வேறு கதை, கட்டுரை சிறியதாக எழுதி அனுப்புங்கள். சோர்வடைய வேண்டாம்!

செல்வி யோகேஸ்வரி, மூளாய்: உங்கள் கட்டுரை, விரைவில் பிரசுரமாகும். 'வளர்மதி'யைப் பாராட்டி எழுதியிருக்கிறீர்கள். நன்றி.

## சிந்திக்கச் சில சொல்

### நீதி

பலமற்ற நீதி உயிரற்றது; நீதியற்ற பலமோ கொடுங்கோலாய் விடும்.

—பாஸ்கல்

கடவுளின் நீதி மெதுவாகத்தான் நகரும்; ஆனால் ஒரு போதும் அது வழியில் தங்கிவிடுவதில்லை; தவறு செய்தவனிடம் சேர்ந்துவிடும்.

—ராபர்ட் பிரௌனிங்

ஆன்மாவுக்கு வெளியே நீதி கிடையாது; ஆன்மாவில் அநீதி இருக்க முடியாது.

—மேட்டர்லிங்

அன்பு என்னும் திருக்கோயிலுக்கு நீதி அஸ்திவாரம். ஆனால் அடியை விட்டுவிட்டு நுனியை அடைய முடியாது

—ரஸ்கின்

நீதி, நீதி இவை இரண்டின் பிறப்பிடமும் ஒன்றன்று; மாறுபட்டதாகும்.

—ரஸ்கின்

தொகுத்தவர்:
செல்வி தா. சந்திரலேகா,
புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## உயர்நிலை மாணவர் இலக்கியப் பேரவை

### களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயத்தில்

களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயத் தமிழ்த் துறை ஆசிரியர், திரு. வி. கி. இராசதுரை (இராஜபாரதீ) அவர்கள் தலைமையில் 24-6-64 புதன் கிழமை மதியம், உயர்நிலை மாணவர் இலக்கியப் பேரவையானது அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது. பேரவையின் பரிபாலர்களாய்த் தலைமை ஆசிரியர் திரு. சி. கண்ணமுத்து அவர்களும் சிரேட்ட ஆசிரியர் திரு. சீ. வி. கோபாலபிள்ளை அவர்களும், ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொடர்ந்து, பேரவையின் ஆசிரியப் பெருந்தலைவராய் கவிஞர் இராஜபாரதி அவர்களும், மாணவர் தலைவராய் செல்வன் த. சிவசம்புவும், மாணவர் தலைவியாய் செல்வி. சி. நேசம்மாவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொதுச் செயலாளராக செல்வன் சி நடராஜாவும் துணைச் செயலாளராக செல்வி க. யோகேஸ்வரியும், பொருளாளராக செல்வி. த. சிவநேசமும், உதவிப் பொருளாளராக செல்வன் இ. இராசரத்தினமும், மாணவர் குழுவின் ஏகமனதாற் தேர்வு பெற்றனர். மேற்படி பேரவை, நாட்டுப் பாடல், நாட்டுக் கூத்து, வசந்தன் ஆடல் முதலிய மட்டக்களப்பு மண்வளஞ் சான்ற கலைகளை வளர்ப்பதில் பெரும் பங்கு கொள்ளல்வேண்டும், என்னும் முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பேரவையின் நிகழ்ச்சி உதவியாளராக செல்வன் க. தியாகராசா, சீ. பாக்கியராசா, பொ. சினித்தம்பி. செல்வி க. கனகேஸ்வரி, என்போர் மாணவப் பிரதிநிதிகளாக நியமனம் பெற்றனர். ஈற்றில் பேரவைக்கென விசேடமாக யாக்கப்பட்ட தமிழ் வாழ்த்துப் பாடலோடு, நிறுவனக் கூட்டம் இனிது முடிவுற்றது.

## முருங்கன் முத்தமிழ் கலா மன்றம்

தமிழ்க்கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவைகளை வளர்க்கும் நோக்கத்தோடு, இம்மன்றம் 26-6-64ல் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்குத் தலைவராக செல்வன் செ. மாசில்லாமணியும், காரியதரிசியாக க. வியாகத்தலிகானும், பொருளாளராக கே பெர்னண்டோவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## செம்பியன்பற்று ‘திராவிட மன்றம்’ அமைப்புக் கூட்டம்

செம்பியன்பற்று ‘திராவிடன் மன்ற’த்தின் அமைப்புக் கூட்டம் கடந்த சனிக்கிழமை 28-6-64ல் பிற்பகல் 5-30 மணியளவில் விடிவெள்ளி இல்லத்தில் கூடியது.

வட்டார அங்கத்தவர் திரு. வென்செஸ்சிஸ்லாஸ் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். தமிழ் தாசனின் ‘எங்கள் திராவிடப் பொன்னாடு’ என்ற பாடலுடன் கூட்டம் ஆரம்பமாகியது.

முதலில் பாரதப் பிரதமர் நேருவுக்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக உதய சூரியன் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டு இரண்டு நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

பின்பு சமுகமளித்தவர்கள் ஒரு மனதாக ஏற்றுக்கொண்டதன்படி, செ. தி. மன்றம் எனப் பெயர் இடப்பட்டு, மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

தலைவராகத் திரு. பொ. மயில்வாகனம் அவர்களும், உபதலைவர்களாக திரு. பி. ஆ. நாதர், திரு. ஏ. எஸ். யோன் ஆகியோரும், செயலாளராகத் திரு. சி. அலோசியஸ் (தமிழ் தாசன்) பொருளாளராகத் திரு. எஸ். யேசுசுகதாசனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மன்றத்தின் நலனைக் கவனிக்கும் பொருட்டு கி. ச. காரியதரிசி திரு. எட்மன்ட் ராஜா உட்பட 17 பேர் செயற்குழுவினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஈழத் திராவிடர் முன்னணி

ஈழத் திராவிடர் முன்னணியின் ஆட்சிக் குழுக் கூட்டம் ஞாயிறு 5 7-64 அன்று பொதுச் செயலாளர் திரு. எம் ஏ. மணிமாறன் தலைமையால் நடைபெற்றது. இவ்வாண்டிற்கான செயல் திட்டங்கள் பொதுச் செயலாளரால் வாசிக்கப்பட்டு, கூட்டத்தினரால் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. பின்னர் கீழ்க் காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

சமீபத்தில் நடந்தேறிய இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயற் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட, மூன்று திங்களுக்கொருமுறை கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினமாச் செய்வதென்ற முடிவை முழு மனதுடன் வரவேற்பதுடன் கட்டுண்டு கிடக்கும் தமிழினத்தின் அடிமைத்தளையை அறுத்தெறிய இம்முடிவு பேருதவியாயிருக்கும் என இம் முன்னணி நம்புகிறது. நம்மினத்திலே தோன்றியுள்ள ஒரு சில காக்கை வன்னியர்களின் வரட்டுக் கூச்சலுக்கு அடிபணியாது, எவ்விதகால தாமதமுமின்றி இம்முடிவை உடனடியாக செயல் படுத்தும்படி நந்தமிழ்ப் பெருங்குடி மக்களின் சார்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியை இம்முன்னணி சிரந்தாழ்த்தி வேண்டிக் கொள்கிறது.

அண்மையில் இங்கு வந்திருந்த இந்தியத் துணைக் கண்ட உதவிய மைச்சர் திருமதி லட்சுமி மேனன், வேண்டுமென்றே தமிழர்களின் தன்மானத்தைப் புண்படுத்தும் நோக்கத்துடனும் தலைவர்களின் தன்மானத்தை அவமதிக்கும் வகையிலும் “தமிழர்கள் சிங்கள மொழியைக் கற்று, சிங்களக் கலாச்சாரத்துடன் ஒன்றித்துவிட வேண்டும்” என்று கூறியதை இம் முன்னணி வன்மையாகக் கண்டிப்பதுடன் இதற்காக திருமதி லட்சுமி மேனன் பத்திரிகை மூலமாக பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டுமென வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. மேலும் இலங்கையிலுள்ள தமிழ் மன்றங்கள் யாவும் அமைச்சருக்கெதிராகத் தீர்மானங்கள் இயற்றி இங்குள்ள இந்தியத் தூதுவருக்கு அனுப்பி வைக்குமாறு இம் முன்னணி கேட்டுக் கொள்கிறது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா அவர்கட்கு இம் முன்னணி தனது உளமார்ந்த பாராட்டுதல்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

பகுத்தறிவுப் பாசறையின் வழித்தோன்றலாம் கவிஞர் வேலணை முகிலன் அவர்கள் இயற்கை எய்திய செய்தியறிந்து இம்முன்னணி வருந்துவதுடன் அன்னாரது பிரிவால் துயருறும் அவர் தம் குடும்பத்தினருக்கும் நண்பர்கட்கும் தனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது.

## இறத்தோட்டை இந்து வாலிபர் சங்கம்

வெள்ளிக்கிழமை 3-7-64 அன்று மாலை இறத்தோட்டை ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சங்கத்தின் கூட்டத்தில்,பின் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: கே. இரத்தினவேல் ஆசாரியார், உப தலைவர்: சி. சாந்தநாயகம், செயலாளர்: கு. இராம கிருஷ்ணன், உபசெயலாளர்: ஆர். சண்முகம், பொருளாளர்: மா. மகாதேவன்.

ஒன்பது பேர் அடங்கிய செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## கலைவாணி சன சமூக நிலையம்

மண்டூர் பாலமுனை 1ம் 2ம் குறிச்சி கலைவாணி சனசமூக நிலையத்தின் ஆரம்பபொதுக் கூட்டம் 23-5-64ம் தேதி மண்டூர் இ கி. மி.ஆண்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தராகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. செல்லையா, உபதலைவர்: திரு. ராஜா ஆனந்தம், செயலாளர்: திரு. இ. பாக்கியராஜன், உபசெயலாளர்: திரு. ம. அரும் பொருள், தனதிகாரி: திரு. மா. பூபாலபிள்ளை.

நிருவாக சபை அங்கத்தவர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: திருவாளர்கள்: வ. வேலாயுதம், அருள் பேரின்பநாயகம், தா. நவரெத்தினராசா, க. சங்கரப்பிள்ளை, க. கதிர்காமநாதன், நே. இராசையா, சி. ஞானசூரியம்.

## சாம்பல் தீவு கிராமச் சபைக் கூட்டம்

சாம்பல்தீவு கிராம சபைக் கூட்டம் திரு. வ. தம்பிராசா தலைமையில் நடைபெற்ற போது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

‘சாம்பல் தீவு கிராமச் சபைக்கென ஒரு கொடியை ஆக்கவேண்டுமென்றும் இக் கொடியில் கப்பல், ஏர், எருது, உழவன் ஆகிய சின்னங்கள் பொறிக்க வேண்டுமெனவும்’ திரு. நெ. கோபால் பிரேரிக்க, திரு. ஐ. நாகரெத்தினம் ஆமோதித்தார்.

‘காலஞ் சென்ற திருமலை பாராளுமன்றப் பிரதிநிதி அமரர் ந. இ. இராசவரோதயம், மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் த. ஏகாம்பரம் ஆகிய இவர்களினதும் உருவச் சிலைகளைப் புதிதாகக் கட்டப்படும் காரியாலயச் சுவரில் பிரதிபிம்பம் செய்யவேண்டுமெனவும், இவ்விதம் செய்வதால் அன்னாரின் சேவைக்கு சாம்பல் தீவு வாழ் மக்கள் நன்றியைத் தெரிவிப்பதாக இருப்பதுடன், இவர்களின் கொள்கைகளைப் பின்பற்றவும் ஏதுவாக இருக்கும் என்றும்’ சாம்பல்தீவு கி. ச. உபதலைவரும், கி. மு. ச. தலைவருமாகிய திரு. க. சி. சுப்பிரமணியம் பிரேரிக்க, திரு. நெ. கோபால் ஆமோதித்தார்.

## பாவேந்தன் மறைவுக்கு அனுதாபம்

சனிக்கிழமை 1-7-64 பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு அறிவொளி அரங்கப்பணிமனையில் பாவேந்தன் பாரதிதாசனுக்கு அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. இரண்டு நிமிட மௌனத்திற்குப் பின் தொடங்கிய இக் கூட்டத்தில் குமாரி சந்திரகலா, வெற்றி வேந்தன், கலையழகன், அறிவழகன், எஸ். பி. எம். சாமி ஆகியோர் பேசினர்.

## பிரச்சினைக்குரிய...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லாது. “சாவில் தமிழ் எழுதிச் சாகவேண்டும் என் சாம்பர் தமிழ் கலந்து ஓடவேண்டும்” என்பதே என் ஒரே ஆசை! ஆனல் யான் கோஷ்டி சேர்ப்பது கிடையாது. அது போலவே யாரையும் ‘வழிபடு’வதும் கிடையாது. எனக்கு நானே ராஜா!

பந்தம் பிடிக்கவோ, ஏதாவது வாங்கிக் கொடுத்துச் சிறுகதை மன்னனகவோ, செய்தி ஆசிரியர்களைத் ‘தாஜா’ பண்ணிக் கொட்டை எழுத்துக்களில் செய்தி பிரசுரிக்கவோ நமக்கு வராது. இதனல் வரவேண்டிய அளவு மதிப்பே வராது போய்விட்டது. போகட்டுமே! இவர்களை நம்பியா நான் பேனு தூக்கினேன்.

### அரசியல் உலகு

எவனுத் தானிருக்கட்டுமே! என் மனச்சாட்சியை மதிக்காதவனை இலக்கியம், அரசியல் இரண்டு துறைகளிலும் நான் மதித்ததில்லை. மதிக்கப் போவதுமில்லை. ஏன், எனது ‘கவர்ச்சிக்குரிய’ அரசியல் தலைவர்களைக் கூட, ‘சில இலக்கிய மேதைகள் செய்வது போல’ இலக்கியத் துறையில் எனது ‘பூசாரி’களாக ஏற்றுக்கொண்டதுமில்லை. ஆனல் அவர்கள் சார்ந்துள்ள கட்சி என் இலக்கியத்தாகத்தை அரசியல் ரீதியில் வளர்க்கத் தவறவில்லை. அந்த வகையில் நானும் அதனை வளர்க்கத் தவறவில்லை!

### எனது விருப்பம்

அரசியல், இலக்கியம் இரண்டிலும் சோரம்போன பேர்வழிகளில் பலர்தான் என்னைப் ‘பரம விரோதி’யாகக் கருதுகிறர்கள். ஆசிரிய கலாசாலையில் நானிருந்த போதே இந்தப் போட்டி ஆரம்பமாகிவிட்டது. அன்று தொடங்கியவர்கள் தங்கள் மீசையில் ஒட்டிய மண்ணை இன்னுந் தட்டிக் கொள்ள முடியாமல் தவிக்கிறர்கள்! [illegible] கத் திட்டியும், வன்முறைகள் கட்டியும் திரத்துக் கட்டப் பார்த்து ஒய்ந்துவிட்டார்கள். அதனுலென்ன! அவர்களும் நண்பர்களே!

என் வழியில் நான்! விபசாரிக்குத் தன் மீது எத்தனை பேர் ‘கவர்ச்சி’ப் படுகிறர்கள் என்ற கணக்கெடுப்புப் பெருமை தரலாம். இலக்கிய விபசாரிகளுக்கு மிகப் பொருத்தமான இவ்வுண்மைக்கு நான் ஆளாகப் போவதில்லை. என்னைப் பின்பற்றும் ‘சீட கோடிகளுக்காக’ நான் ஏங்குவதில்லை. பிரச்சினைக்குரிய இலக்கியப் பிறவியாக யான் மிளிரப்பல நிகழ்ச்சிகள், அனுபவங்கள், மிக மிக இனிய, துன்பமான அனுபவங்கள் கூடக்காரணமானவையே. அவற்றையே யான் விரும்புகிறேன். அவற்ருலேயே எழுதுகிறேன். எழுத விரும்புகிறேன்.



மட்டக்களப்பில் நடைபெற்ற மெதடிஸ்த திருச்சபையின் 150வது ஆண்டு விழாக் கொண்டாட்டம் நகர மண்டபத்தில் நடைபெற்றது வண. எம். ஏ இரத்தினராசா போதகர் உரை நிகழ்த்துவதையும் செல்வி தேவமலர், செல்வி ராஜினி ஜோசப் ஆகியோர் நடனமாடுவதையும், நகைச்சுவை குமரன் மாஸ்டர் சிவலிங்கம் கோஷ்டியின் வில்லுப் பாட்டு நடைபெறுவதையும், விழாவில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியையும் காண்க.

படம்: இதயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் எதிர்பாருங்கள்!

சென்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை)

மற்றும் 8 திரைகளில்!

சிவாஜி கணேசன், சாவித்திரி, பாலாஜி,
எம். ஆர். ராதா, ராஜசுலோசனா,
எஸ். வி. ரங்கராவ், ராஜம்மா, கருணாநிதி

மற்றும் பலர் நடித்த



# படித்தால் மட்டும் போதுமா

---

## 2வது ஜனத்திரள் வாரம்!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரொக்ஸி (வெள்ளவத்தை) அசோகா (புத்தளம்)

இம்பீரியல் (மட்டக்களப்பு) நெல்சன் (திருகோணமலை) குவீன்ஸ் (காலி) வேல்ஸ் (கண்டி)

யாழ்ப்பாணம் வின்ஸர் திரையில் 3-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!



எம். ஜி. ஆர்,
தேவிகா,
பி. எஸ் வீரப்பா,
கமலஹாசன்,
ஜாவர் சீதாராமன்,
எம். ஆர். ராதா,
அசோகன்.
மற்றும் பலர் நடித்த



# ஆனந்த ஜோதி

---

வெகு விரைவில்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

மீண்டுமொருமுறை உங்களை மகிழ்விக்க—

எம். ஜி. ராமச்சந்திரன்,
பி. எஸ். சரோஜா, வீரப்பா
தோன்றும்

# ஜெனோவா

---

எதிர்பாருங்கள்!

சிவாஜி கணேசன்—ஜெமினி கணேசன்—சாவித்திரி—தேவிகா
சந்திரகாந்தா—சந்திரபாபு—எம். வி. ராஜம்மா—ரங்கராவ்
தோன்றும்

# பந்த பாசம்

---

ஜூலை 22ந் உ. முதல்!
கிங்ஸ்லி
பிளாஸா-நவா

பாலையா—ராஜஸ்ரீ
முத்துராமன்—காஞ்சனா
நாகேஷ்—ரவிச்சந்தர்
ராகவன்—ராதாபாய்
குமாரி சரஸ்வதி
நடிக்கும்

ஸ்ரீதரின்

# காதலிக்க





# நேரமில்லை

(ஈஸ்ட்மன் கலர்)

பாடல்கள்! கண்ணதாசன்
டைரக்ஷன்: ஸ்ரீதர்

இசையமைப்பு:
விசுவநாதன்-ராமமூர்த்தி

ஹாஸ்ய காதல் சித்திரம்!

---

4வது புகழ் வாரம்!

கேபிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (அட்டன்)

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
ரங்கராவ்— மணிமாலா
நடிக்கும்

# தெய்வத்தின் தெய்வம்

---

கிங்ஸ்லி (கொழும்பு)

டி. ஆர். மகாலிங்கம்—குமாரி கமலா
ஜெயலட்சுமி—பந்துலு
மற்றும் பலர் நடிக்கும்

# நாம் இருவர்

(புத்தம் புதிய கொப்பி)

பல மாதங்களாக ஓடி வெற்றி முரசு கொட்டிய
மன்னக சித்திரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில்
1964-ம் வருடம் ஜூலை மாதம் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.